## தமிழ்த்தென்றல்

# திரு. வி. கலியாண சுந்தரனார்

TAMIL TENRAL.
TIRU V. KALYANASUNDARANAR.

CONNEMARA PUBLIC LIB...
4 FEB 1955
MADRAS

ஆசிரியர் :

தி. சே. உமாபதி, M.A., L.T., (*Dip. in. geog.*)

தலைமை ஆசிரியர்,
சி. அப்துல் ஹகீம் இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி,
சென்னை.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை—1.
1953

முதற் பதிப்பு — 1953

(பதிப்புரிமை)

விலை ரூ. 0—14—0.

Printed at the Venkatesan Press, Madras-1

4 FEB 1955

# முகவுரை

இச்சிறு நூல், 'முதுபெரும் புலவர்' என்று தமிழர் அனைவராலும் ஒருங்கே போற்றப்பட்டு, ஒழுக்கத்தை உயிரினும் ஓம்பி, வசை ஒழித்து, வாழ்வாங்கு வாழ்ந்து, அண்மையில் ஆவி நீத்த **தமிழ்த் தென்றல் திருவாரூர் வி. கலியாணசுந்தர**னாருடைய வாழ்க்கை வரலாற்றைக் கூறுவதாகும். அவர், தலைவர் பிறர் போன்று, ஒரு துறையின்கண் நின்று பணியாற்றிப் புகழ் எய்தியவரல்லர்; தமிழ்த் தொண்டு, அரசியல் தொண்டு, தொழிலாளர் தொண்டு, சமயத் தொண்டு, சமூகத் தொண்டு, மாதர் தொண்டு இன்னோரன்ன அருந்தொண்டுகளாற்றி, அடைதற்கரிய ஆன்றோர் அன்பைத் தமக்கே உரியதாக்கிக்கொண்டவர். அப்பெரியாரது வாழ்க்கை வரலாறு மாணவர்க்கு இன்றியமையாத ஒரு வழிகாட்டியாய்த் திகழும் தன்மையது. அவர் வாழ்க்கை வரலாற்றை, அவராலேயே எழுதப்பட்ட '**வாழ்க்கைக் குறிப்பு**' என்னும் நூலின்கண் பரக்கக் காணலாம். அந்நூல் மிகப் பெரியதாய் இருப்பதனாலும், கிடைத்தற்கு அரிதாயிருப்பதனாலும் இச்சிறு நூல் மாணவர்களுக்குப் பயன்படும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது. இதனை ஆன்றோர் உலகம் ஏற்று அருளுமாக!

சென்னை,<br>
7-11-53

**த. சே. உமாபதி**

CONNEMARA PUBLIC LIBRARY
4 FEB 1955
MADRAS

# உள்ளுறை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தோற்றுவாய் | ... | 1 |
| 2. | பெற்றோரும் பிறப்பும் | ... | 2 |
| 3. | பிள்ளைப் பருவம் | ... | 10 |
| 4. | கல்வி | ... | 22 |
| 5. | ஊழியம் | ... | 45 |
| 6. | அரசியல் தொண்டு | ... | 58 |
| 7. | சுந்தரனும் தொழிலாளரும் | ... | 82 |
| 8. | பிற தொண்டுகள் | ... | 91 |
| 9. | சுந்தரனின் எழுத்தும் கருத்தும் | ... | 96 |

4 FEB 1955
MADRAS

தமிழ்த்தென்றல்

# திரு. வி. கலியாண சுந்தரனார்

## 1. தோற்றுவாய்

நமது தவத் திருநாட்டின் தந்தையார் என்று போற்றப்பட்டவர் **காந்தியடிகள்**. இதற்குக் காரணம் என்ன? அவர்தம் கல்வியா? செல்வமா? தோற்றமா? அறிவா? ஞானமா? அன்று அன்று; அவர்தம் ஒழுக்கமே. அவர் சத்தியத்தின் உறைவிடமாய், சமரசத்தின் இருப்பிடமாய், சமத்துவத்தின் பிறப்பிடமாய், கருணைக்குப் புகலிடமாய், நாட்டு மக்களுக்கு நல்வழி காட்டி நின் ... உலகத்தவர் அனைவரும் **உத்தமர்** என்று ... ழ்ந்தனர்? அவர் அயல் நாட்டு ... அரசியலிலும் பங்கு ... நன்கு அறிய ... **உத்தமர்** ... வதற்கு ... கேட்டிர ... நமது ... தாம் ... னூற்று ...

விளங்கும் சென்னையம்பதியில் முத்தமிழ் வித்தகராய், தமிழ் நடை ஓவியராய், பேச்சிற் பெரும்புலவராய், செய்தித்தாள் சிற்பியாய், பெண்மை போற்றும் பெருந்தகையாய், தொழிலாளர்களின் தோழராய், கற்றவர்க்குக் கருவூலமாய், அரசியல் அறிஞராய், மார்க்ஸீய வாதியாய், மாணவர் நண்பராய், இளமையில் முதியவராய், முதுமையில் இளைஞராய், சமரச சன்மார்க்கராய், அருங்குணக் குன்றாய், ஒழுக்கத்தின் சிகரமாய் வாழ்ந்து மறைந்த தமிழ்த்திருத் தென்றல் முதுபெரும்புலவர் **திரு. வி. கலியாண சுந்தரனார்** பெயரைக் கேட்டிராத தமிழர் எவரும் இரார் என்பது திண்ணம். அத்தகைய **தமிழ் நாட்டுக் காந்தியடிகள், 17–9–53**ல் தாம் உயிரினும் ஓம்பி வந்த தமிழையும் தமிழ் மக்களையும் விட்டு மறைந்துவிட்டார். அவர் தமது வாழ்க்கை வரலாற்றை ஆயிரம் பக்கங்கள் கொண்ட அரியதோர் இலக்கியமாக இயற்றியுள்ளார். அஃது இப்பொழுது கிடையாமையாலும், கிடைப்பினும் அதிகவிலை பற்றி அனைவரும் வாங்கிப் படிக்கக் கிடையாதாகலானும், அவர்தம் வாழ்க்கை வரலாறு பள்ளி மா[illegible]்த ஈடுமெடுப்புமில்லாத அறிவு நூலாய்த் திகழ்[illegible]னும் இச்சிறு நூல் தோன்றுவ தா[illegible]

## [illegible] பிறப்பும்

[illegible]ஃகிலார்

—குறள்

[illegible]ள் உள,

[illegible]. அவற்

[illegible]வை ஒரு

[illegible]குண்டு.

இப்பழம்பெருநாட்டில் '**வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்**', பண்டைக் காலத்தில் சேர அரசு, சோழ அரசு, பாண்டிய அரசு என்னும் பேரரசுகள் பெரும்புகழுடன் விளங்கின. அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு துறையில் தனிச் சிறப்பினைப் பெற்றுத் திகழ்ந்தது. 'வேழம் உடைத்து மலை நாடு,' என்று சிறப்பிக்கப்பட்டது சேரநாடு. அலைகடல் மூழ்கி முத்தெடுக்கும் பணியில் பாண்டி நாட்டவர் தலை சிறந்து விளங்கினமையால், 'பாண்டிநாடு முத்துடைத்து,' என்று போற்றப்பட்டது. அங்ஙனமே, சோழ நாடு, 'சோற்றால் மடையடைக்கும் சோணாடு' என்றும், '**தண்ணீரும் காவிரியே; தார்வேந்தன் சோழனே: மண்ணாவதும் சோழ மண்டலமே,**' என்றும் புகழப்பட்டது.

இத்தகைய சோழ நாடு பல கோநகரினைக் கொண்டதாகும். ஒவ்வொரு கோநகரும் ஒவ்வொருவர் காலத்தில் சிறந்து விளங்கியது. அவ்வாறு திகழ்ந்த கோநகர்கள் உறந்தை, காவிரிப்பூம்பட்டினம், தஞ்சை, திருவாரூர், உறையூர் என்பனவாம். இவற்றுள் **திருவாரூர்** ஒரு தெய்வக் கோட்டம்; கலைக்கு இருப்பிடம்; அன்பு தவழ்ந்திடும் அரிய பூமி; தமிழரின் உறையுள்.

இத்தனை சிறப்புப் பெற்ற திருவாரூரில் வாழ்ந்து வந்த வேளாளப் பழங்குடி மக்கள் வழித் தோன்றலாய் வந்தவர் **வேங்கடாசல முதலியார்** என்பவர். அவர் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றவர். அவருக்குத் தமிழைக்காட்டிலும் ஆங்கிலத்திலேயே ஆர்வமும் நாட்டமும் அதிகமாயின. ஆங்கிலத்தின்பால் அவருக்கிருந்த மோகத்தால், அதனையே மேன்மேலும்

கற்று, வாணிகம் வேளாண்மை ஆகியவற்றின்மீது மனஞ் செலுத்தாது, உத்தியோகம் செய்வதையே உயர்ந்ததென உன்னினர்; அதற்காகப் பெரிதும் பாடுபட்டு, 'ஹிக்கின் பாதம்ஸ் அண்டு கம்பெனி'யில் பணியேற்றுத் தமதூரை விட்டுச் சென்னை போந்து, இராயப்பேட்டையின் ஒரு பகுதியான புதுப்பேட்டையில் குடியேறினர்.

வேங்கடாசல முதலியார் சின்னுள் கழித்து **வேலப்ப முதலியார்** என்பவரின் செல்வ மகளாராகிய **வள்ளியம்மை**யாரை மணந்து, ஒன்றிய மனத்தினராய், அன்புவழிச் சென்று அறவழி நின்று, இல்லறமாம் நல்லறத்தைச் செவ்விதின் நடத்தி வந்தனர். அவர்கட்கு **நமச்சிவாயம், விருத்தாசலம்** என்ற புதல்வர் இருவர் தோன்றினர்.

அவ்விருவருள் மூத்தவராகிய நமச்சிவாய முதலியார், தாய்மொழியாம் தமிழ் மொழியிலும் அயல் மொழியாம் ஆங்கிலத்திலும் தேர்ச்சி பெற்று விளங்கினர்; அட்மினிஸ்டிரேட்டர் ஜெனரல் அலுவலகத்தில் கணக்கர் பதவியில் அமர்ந்து, பிறகு தமது உண்மை உழைப்பால் உயர்பதவி எய்தினர். அவர் **கடலூர்த் தோப்பா முதலியா**ரின் திருமகளாராகிய **மயிலம்மையாரை** மணந்து, மறம் கடிந்து, அறம் ஓம்பி, இல்லறத்தை இனிது நடாத்தி வந்தார். அம்மம்மையார் **குமரவேல், இராசு, சோமசுந்தரம்** என்ற புதல்வர் மூவரை ஈன்ருர்.

நமச்சிவாயரின் இளவலாகிய திரு. விருத்தாசல முதலியாரும், தமையனரைப் போன்றே தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழியும் பயின்றாரெனினும், அவரைப் போன்று ஆங்கிலத்திற் பற்றில்லாதவராயிருந்தார். இனிமையே தன் பெயராகக் கொண்ட தமிழே—முத்தமிழே—

அவருக்கு இனித்தது ; அவர் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் வல்லுநராய் விளங்கினார். தமிழ் மொழி அவரது மனத்தைப் பெரிதும் ஈர்த்துக்கொண்டது. அவர் இசையிலும் நாடகத்திலும் தேர்ச்சி பெற்று விளங்கினார். அவர் நாடகத்தின்பால் வைத்திருந்த பற்று, அவர் இராம நாடக விற்பன்னராகவும் நாடக ஆசிரியராகவும் திகழச் செய்தது. அவர் தம் பெருமுயற்சியால் ஆரம்பப்பள்ளி ஒன்றினைக் கண்டு, அதில் ஆசிரியராயும் வேலை பார்த்து வந்தார். அவர் கீர்த்தனைகள் யாக்கவும் அறிந்திருந்தார் ; இவை மட்டுமன்றித் தொழில் பலவும் அறிந்திருந்தார். பல்வேறு தொழில்களை அறிந்திருந்தும் அவையனைத்தும் அடிமைத்தொழில் என அகற்றியதற்குக் காரணமாய் இருந்தது அவர்பால் காணப்பட்ட உரிமை உணர்ச்சியும், தன்மதிப்புணர்ச்சியுமே ஆகும். அவர் வாணிகமே பெரிதென எண்ணி, அதனையே கைக்கொண்டார். அவர் தம் அண்ணியார்க்கு இளையாராகிய **பச்சையம்மாளை** இல்லக்கிழத்தியாராக ஏற்றார். அவ்வம்மையார் ஆண் மக்கள் மூவரையும் பெண் குழந்தை ஒன்றையும் ஈன்றெடுத்தனர். அவ்வம்மையார் இந்நில உலகின்கண் நீண்ட நாள் வாழாது நமனுலகம் எய்தினார். சிறிது காலம் மனம் தளர்ந்திருந்த முதலியாரவர்கள், மறு மணம் செய்துகொள்ள எண்ணி, **மரக்காணம் வேங்கடாசல முதலியா**ரின் தவப் புதல்வியாரும் நற்குண நல்லொழுக்கம் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றவரும் ஆகிய **சின்னம்மாள்** என்னும் நல்லாளை வரித்துக்கொண்டார். அவ்வம்மையார் தம் தலைவருடன் வாழ்க்கை நடாத்திய காலை மனைத்தக்க மாண்புடையாராய், 'தெய்வம் தொழாது கொழுநன் தொழுவாராய்', 'சொற்காத்தவராய்', நிறைகாத்தவராய் விளங்கிச் சுற்றத்தார் அனைவர் புகழுக்கும் உரியவரானார்.

விருத்தாசல முதலியார் இராயப்பேட்டையில் அரிசி வாணிகம் நடாத்திக்கொண்டு வந்த காலே, சென்னைக்குப் பதினைந்து மைல் தொலேவில் உள்ளதும், திருத்தொண்டர் புராண ஆசிரியர் தெய்வத்திரு சேக்கிழாரது பிறப்பிடமுமாகிய குன்றத்தூருக்கு அணித்தே உள்ள செம்பரம்பாக்கம் ஏரியைச் செப்பம் செய்யும் அவசியம் ஏற்பட்டது. அப்பணியைச் செய்வான் வேண்டி ஒப்பந்தக்காரர் (Contractors) பலர் முயன்றனர். அவருள் முதலியாரும் ஒருவர். அவரது முயற்சியே வெற்றி பெற்றது. அவர் ஒப்பந்தப்படி அப்பணியை ஏற்றுச் செயலாற்றி வந்த காலே, தமையனாரிடமிருந்து முடங்கல் ஒன்று வரப்பெற்றார். அதில் மூதாதையர் சொத்தைக் கூறிடப் போவதாயும், அதற்குத் தாமும் வந்திருக்க வேண்டுமென்றும் குறிக்கப்பட்டிருந்தது. அக்கடிதத்திற்குத் தமது இசைவைப் பதில் முடங்கல் வாயிலாக அவர் அறிவித்தார். அவரது இசைவினைப் பெற்ற தமையனார், ஆவன அனைத்தும் செய்து, பத்திரமும் எழுதி முடித்து அவரை அழைத்து அதில் கையொப்பமிடச் செய்தனர்.

விருத்தாசல முதலியார் அதில் கையொப்பமிடுவதற்கு முன்பு அதைப் படித்துப் பார்த்தபோது, தம்மை வருத்தக் கூடிய வாக்கியம் ஒன்று அதில் இருக்கக் கண்டார். அதாவது, தம்முடைய சொத்தனைத்தும் தமது காலத்திற்குப் பிறகு, தம் மூத்த மனைவி பச்சையம்மாளின் பிள்ளைகளே அனுபவிக்க வேண்டும் என்று அதிற்கண்டிருந்தது. அச்செயல் தமது மனச்சான்றுக்குப் புறம்பானதேயெனினும், மூத்தவரது சொல்லேத் தட்டி நடக்க மனம் இல்லாதவராய் அதில் கையொப்பமிட்டார். இவ்வாறு செய்யுமாறு அவர் தமையனாரைத் தூண்டியதற்கு முக்கிய ஏதுவாய் இருந்தது, அவரது இளைய மனைவியார் சின்னம்மாளுக்கு ஆண் குழந்தை

இல்லாமையேயாம். இளைய மனைவியாருக்கு ஆண் குழந்தை இல்லையே என்று அவர் பெரிதும் வருந்தி வந்தார். சிறிது காலம் தாழ்த்து ஆண் மக்கள் இல்லையேயென்ற அக்குறை இல்லாமற்போயிற்று.

**துள்ளம் போதல்:** விருத்தாசலனார் ஏக்கமுற்றுக் கிடந்த அத்தறுவாயில் ஏரி செப்பனிடும் வேலையும் முடிந்தது. அதன் பிறகு மேலும் சென்னையில் இருக்க விழையாது, வேறெங்கேனும் குடியேறி வாணிகம் நடாத்த எண்ணி, நண்பர் பலரை அதற்கு ஏற்ற இடத்தைக் கண்டு கூறும்படி கேட்டுக் கொண்டேயிருந்தார். நண்பர் குழாத்துள் ஒருவராகிய **நாதமுனி நாயுடு** அவரைக்காண நேர்ந்த போதெல்லாம் **துள்ளம்** போமாறு தூண்டினர். நாயுடுவின் இடையறுத் தூண்டுதலின் பயனாக முதலியார் துள்ளத்திற்கே சென்று வாணிகம் நடாத்த நிச்சயித்தார். **துள்ளம்** செங்கற்பட்டு மாவட்டத்தினைச் சேர்ந்த சைதாப்பேட்டைத் தாலூக்காவிலுள்ள **நூம்பலு**க்கும் **செட்டியாவரத்து**க்கும் இடைப்பட்ட ஒரு சிற்றூராயினும் வளமுடையது. அதனைச் சூழ்ந்து சிற்றூர்கள் பல உண்டு. முதலியார் தம் முடிவின்படி துள்ளம் போந்து, பனை ஓலையால் வேய்ந்த குடிசை ஒன்றில் தங்கினர். அவ்வில்லத்திற்கு அண்மையில் இருந்த ஒரு மரத்தடியில் பிறிதொரு குடிசை அமைத்து அதில் வாணிகம் தொடங்கினர். தொடக்கத்தில் வாணிகம் அவர் எதிர் பார்த்த அளவில் நடைபெறவில்லை. நாளடைவில் அவ்வூரிலிருந்தவரும் சுற்றுப்புறக் கிராமத்தவரும் அவரிடத்தில் நட்புக்கொள்ளத் தலைப்பட்டனர்.

இவ்வாறு நட்புக் கொண்டவருள் தலையாயவர், நூம்பல் கிராமத்து அமீனாவாய் விளங்கிய **முனிசாமிப்பிள்ளை** என்பவராவர். பிள்ளையவர்கள் அக்கிராமத்திற்கேயன்றிச் சுற்றுப்

புறக் கிராமங்கட்கும் ஒரு முடி சூடா மன்னரெனத் திகழ்ந் தார். அவரது நட்பினைப் பெற்ற முதலியாரது செல்வாக்கு மேலும் மேலும் பெருகுவதாயிற்று. முதலியாரது செல் வாக்கு நாள்தோறும் பெருகிக்கொண்டே சென்றதைக் கண்ட செட்டியாவரத்து வாணிகன் ஒருவன், சினமும் அழுக்காறுமுற்றுக் கைக்கூலியர் சிலரை ஏவி, கடைக்குத் தீயிடச் செய்து நட்டமுறச் செய்தான்.

முதலியாரின் நண்பராய அமீனு அவர்கள், வணிகனது தீச்செயலை அறிந்து, அவன்மீது கனன்றெழுந்த போது, **'இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயஞ் செய்து விடல்,'** என்னும் தமிழ்மறை வாக்கினை நன்குணர்ந்த முதலி யாரவர்கள், 'சினங்காக்க,' என்று கூறி, அவரது சினமாகிய தீயினைத் தமது பொறுமை என்னும் நீரிட்டு அவித்தார். பிறகு முதலியார் தமது வீட்டின் முற்றத்திலேயே வாணி கத்தை நடத்தி வரலானார். முதலியாரின் நற்குணத்தையும், மன்னிக்கும் மனப்பான்மையையும், பொறுமையையும் நன் கறிந்த அக்கிராமத்தவரும் அயல் கிராமத்தவரும் அவரது கடையிலேயே பொருள் கொள்வதெனத் துணிந்தனர். அத னால், முதலியார் வாணிகம் சிறந்தோங்கியது. **'அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேருந் திறன்அறிந்து ஆங்கே திரு,'** என்னும் தேவரது திருவாக்கின்படி திருமகள் நடம் புரிந் தாள். **'வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார்,'** என்றபடி முதலி யார் வாழ்ந்தார்; அக்கிராமத்தின்கண் நிலபுலனும் வாங்கினார்.

திருவும் புகழும் ஒருசேர வந்துற்ற முதலியாரை ஒரு பெருங்கவலை விழுங்கி வந்தது. ஆண் குழந்தை இல்லையே என்ற அக்கவலையினின்று அவரை விடுவிக்க, 1881–ஆம் ஆண்டு, செப்டெம்பர்த் திங்கள், பன்னிரண்டாம் நாளன்று,

பரணி நல்லோரையில் விருத்தாசலனாருக்கு ஓர் ஆண் குழவி பிறந்தது. **'பரணியில் பிறந்தோர் தரணி ஆள்வர்,'** என்னும் முதுமொழிக்கிணங்கத் தமிழ் நாட்டவரது நல்லெண்ணம் அனைத்தையும் தமதுடைமையாக்கிக்கொண்டு வாழ்ந்து மறைந்த **திரு. வி. உலக நாதமுதலியாரே** அக்குழவியாவர். இவரது தோற்றம் பெற்றோரைப் பெருமிதங் கொள்ளச் செய்ததோடன்றி, ஆனந்த ஆழியில் ஆழ்ந்து திளைக்கவும் செய்தது.

உலகநாதரின் தோற்றத்திற்குப்பிறகு ஈராண்டுகழித்து, சின்னம்மையார் மற்றுமோர் ஆண் குழவியையும் ஈன்றார். அதாவது, 1883-ஆம் ஆண்டு, ஆகஷ்டு திங்கள், இருபத்தாறும் நாள், ஞாயிற்றுக் கிழமைக்குச் சரியான தமிழ்ச் **சுபானு** ஆண்டு, **ஆவணித்** திங்கள், பதினாறும் நாள், அக்குழவி பிறப்பெய்தியது. அக்குழவியே தமிழாய், தமிழ்க்காவாய், தமிழ்த்தென்றலாய், தமிழ் நாடாய், தமிழ்க்கடலாய், கலையாய், ஓவியமாய், பல்கலைக்கழகமாய், சைவமாய், வைணவமாய், பௌத்தமாய், சமணமாய், கிறித்தவமாய், இஸ்லாமாய், சமரசமாய், வாய்மையாய், தூய்மையாய், ஒழுக்கமாய், வீரமாய், அரசியலாய்க் காட்சி தந்து அண்மையில் மறைந்த உயர்திருவாளர் **திரு. வி. கலியாணசுந்தரனார்.** பெற்றோர் இவரை ஆறும் குழவியாகப் பெற்றனர். **முருகேசன், அம்மணியம்மாள், தாயாரம்மாள், விருத்தாம்பாள், உலகநாதர்** என்ற ஐவரும் திரு. வி. கலியாண சுந்தரனாருக்கு மூத்தவர். இவர்களுள் முருகேசன், விருத்தாம்பாள் என்ற இருவரும் குழவிப் பருவத்திலேயே உயிர் நீத்தனர். முதலியாருக்குப் பின் தோன்றியவர் இருவர். **'ஆறும் பேறு ஆனை கட்டி வாழும்'** என்பது பாட்டியின் பழமொழி. இவர்

ஆனை கட்டி வாழ்ந்தாரா அல்லவா என்பதனை இவர்தம் வரலாற்றைப் படித்து நிச்சயிப்போம்.

## 3. பிள்ளைப் பருவம்

**'ஓடிவிளையாடு பாப்பா! நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா!'** என்னும் பாரதியார் வாக்குக்கிணங்கவும், **'சோம்பித்திரியேல்'** என்னும் ஔவைப்பிராட்டியார் கூற்றுக்கிையையவும் கலியாணசுந்தரனார் தம் குழந்தைப் பருவத்தும், பிள்ளைப் பருவத்தும் அவ்வப்பருவத்துக்கேற்ற விளையாட்டுக்கள் பல பயின்றும், களித்தும் வந்தார். இவர் இளமையில் **குடுகுடு, கிளித்தட்டு, மற்போர்(குஸ்தி), புள் ஆட்டம் (கில்லி), கத்தி சுழற்றல்** முதலிய விளையாட்டுக்களில் மனத்தைச் செலுத்தி வந்தார். மேலும், பட்டம் விடுதல், சூறைத் தேங்காய் எடுத்தல், பிள்ளைகளுடன் கூடி அயலார் தோப்பினின்று கனிகள் களவாடல் முதலியனவும் இவரால் பெரிதும் விரும்பப்பட்ட பிள்ளை விளையாட்டுக்கள். அவற்றுள் சிலவற்றைப் பற்றிய குறிப்புக்கள் சில காண்போம் :

பொதுவாகச் சுந்தரனார் இளமையில் துடுக்கு வாய்ந்தவராயும் நெஞ்சுரம் மிக்கவராயும் விளங்கி வந்தார். இவர் தம் தாய் வழிப்பாட்டியார் சென்னையினின்று தம்மையும் தம் தமையனாரையும் காண வந்த போதெல்லாம் சிற்றுண்டிகளும், விளையாட்டுப் பொருள்களும் கொண்டுவருதல் வழக்கம். அவ்வாறு கொண்டு வந்த பொருள்களிலிருந்து முதலில் தமக்கு வேண்டியவையனைத்தையும் தாமே எடுத்துக்கொள்ள வேண்டும். அதன் பின்னரே இவர் தமையனார் எடுக்க வேண்டும். தமையனார் முதலில் எடுத்துவிட்டால் இருவருக்கும் போர் மூளும். அவர்களிடையே எழும் போர் பாட்டியாருக்குப் பெருவிருந்தாய் இருக்கும். போர் நிகழும்

காலத்தில் அவர்கள் தந்தையார் காண நேரிடின், அதட்டு வார். தந்தையார் குரலைக் கேட்பினும், அன்றி அவரைக் காண நேரினும் மூத்தவர் ஓடி ஒளிவர். இளையவராகிய இவரோ, அவ்வண்ணம் செய்யாமல், நின்ற இடத்திலேயே நிலை பெயராது நிற்பர்.

**'பாம்பென்றால் படையும் நடுங்கும்,'** என்னும் பழமொழிக்கிணங்கத் துள்ளத்தில் குடியிருந்த மக்களுள் சிலர், நல்ல பாம்பு ஒன்றைக் கண்டு அலறி ஓடினர். அப்பாம்பைப் பற்றுவதற்காக இருளர் இருவர் வந்தனர். அச்செய்தியை அறிந்த இவர், அதற்கு அஞ்சாது இருளர் இருந்த இடத்திற்குச் சென்று பார்த்துக்கொண்டிருந்தார். தந்தையாரின் ஆணை இவரை அங்கிருந்து அகற்றிவிட்டது. ஆயினும், எங்ஙனமேனும் பாம்பைத் தொட்டுப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் இவரது மனத்துள் குடிகொண்டுவிட்டது. அதற்குத் தக்க வாய்ப்பு வந்துற்ற போது, பாம்பைக் காலால் மிதித்து மன ஆறுதல் அடைந்தார். **'இளங்கன்று பயமறியாது,'** என்னும் முதுமொழி இவரது அஞ்சாச் செயலால் மெய்யாயிற்று.

இவர் தந்தையார் குளிப்பதற்காக நாடோறும் குளத்துக்குச் செல்வது வழக்கம். ஒரு நாள் இவரும் தந்தையாருடன் சென்றார். தந்தையார் இவரைக் கரையில் அமரச் செய்துவிட்டுக் குளிப்பதற்காக நீரில் இறங்கினார். அதே குளத்தில் சிலர் நீந்திக்கொண்டிருக்கக் கண்ட சுந்தரனார், தாமும் நீந்த விரும்பி, நீரில் இறங்கிக் கழுத்தளவு நீரிற்சென்று விட்டார். அப்போது அக்குளத்தருகில் வேலை பார்த்துக் கொண்டிருந்த விவசாயிகள், 'குழந்தை! குழந்தை!' என்று கூவக் கேட்ட தந்தையார் இவரைக் காப்பாற்றினார். அது

முதல் சுந்தரனார் நீந்த வேண்டும் என்ற எண்ணத்தை அறவே விட்டொழித்தார்.

மற்றொரு நாள் பிள்ளைகளின் மாரிகால விளையாட்டிடமாகக் கருதப்பட்ட எதிர் வீட்டுத் திண்ணையில்சிலர் கோலி விளையாடிக்கொண்டிருந்தனர். அப்போது கோலி ஒன்று தவறிக் கீழே விழுந்துவிட்டது. அதனை எடுக்க எண்ணிய சுந்தரனார் அங்கிருந்தே குதித்தார்; கால் இடறி விழுந்து உதட்டிலும் நெற்றியிலும் காயமுற்றார்.

பிறிதொரு சமயம் பட்டம் ஒன்று இவரது வீட்டிற்குப் பின் புறத்தில் இருந்த கொன்றை மரத்தில் சிக்கிப் பறந்து கொண்டிருந்தது. அதனை எடுக்கச் சிறார் பலர் பெரிதும் முயன்று வெற்றி பெறாமல் திரும்பினர். **'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்,'** என்பதற்கிணங்க, நம் சுந்தரனார் அத் தருவின் உச்சியை அடைந்து, அப்பட்டத்தினைக் கைப்பற்றி இறங்கும் தறுவாயில், இவர் தம் அன்னையார் 'அடே! அடே!' என்று கூக்குரலிடக் கேட்டு அஞ்சிப் பற்றுக்கோட்டைக் கைவிடுத்துக் கீழே விழுந்து, அங்கிருந்து ஓடி அருகில் இருந்த புதரில் ஒளிந்துகொண்டார். இவர் விழுந்ததால் முறிந்த கிளையொன்றின் கூரிய முனை இவரது இடப் பக்க விலாவில் அக்குளில் இருந்து இடுப்பு வரை கிழித்துவிட்டது. அக்காயம் நாட்டு வைத்தியர் ஒருவரது சிகிச்சையால் சின்னாட்களில் குணமடைந்தது. காயம் ஆறிற்றெனினும், வடு மட்டும் நிலைபெற்றுவிட்டது.

சுந்தரனார் காயமுற்று இருந்த போது பார்க்க வந்த பாட்டியாரது காலில் சிறியதொரு கட்டி கிளம்பிற்று. அக்கட்டி நாளடைவில் பெரிதாகி அவ்வம்மையாருக்குச் சுரந்தண்டு அவர் விண்ணுலக வாழ்வை ஏற்றார். அவருக்குப்

பிறகு அவர் தங்கையாராகிய சுந்தரனாரின் சிறிய பாட்டியார் இவருடன் விளையாடுவதும், விளையாட்டுக் காட்டுவதும் வழக்கம். அவ்வாறு விளையாடும் போது, 'பாட்டி எங்கே?' என்று எவரேனும் கேட்பின், 'தெய்வலோகம் போனார்,' என்று விடை கூறுவார் சுந்தரனார். மீண்டும் அவர்கள், 'தெய்வலோகம் எப்படி இருக்கும்?' என்று கேட்டால், 'பளபளவென்றிருக்கும்; மாடி வீடுகள் பல வரிசை வரிசையாய் இருக்கும்; பாதையில் தார் பூசப்பட்டிருக்கும்,' என்று பதில் கூறுவராம். இதுவே அக்காலத்தில் சுந்தரனாரது கருத்தில் தோன்றிய தெய்வலோகம் போலும்!

ஒருநாள் இவரும், சிறுவர் சிலரும் சாலையில் விளையாடிக் கொண்டிருந்தனர். அச்சயம் நூம்பல் அமீனா முனிசாமிப் பிள்ளையவர்கள் வந்ததைக் கண்ட பெரியார் அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர். சுந்தரனாருடன் விளையாடிக்கொண்டிருந்த இளைஞரனைவரும் 'அமீனா! அமீனா!' என்று கூறிக்கொண்டே ஓடி ஒளிந்தனர். பெரியவரனைவரும் எழுந்து நின்றதையும், சிறியவரனைவரும் ஒளிந்ததையும் கண்ட சுந்தரனார் வியப்புற்று, 'அமீனாவுக்கென்ன, கொம்பா முளைத்திருக்கிறது?' என்று கூறி அவ்விடத்திலேயே நின்றார். இவர் கூறியது அமீனா காதில் விழுந்தது. இவரது அஞ்சாமையைக் கண்டு வியந்த பிள்ளையவர்கள், இவர்பால் சீற்றம் கொள்ளாமல், இவரைப் பெரிதும் புகழ்ந்து சென்றார்.

இத்தகைய அஞ்சா நெஞ்சமும் துணிவும் கொண்டிருந்த சுந்தரனார், ஒருவருக்கு மட்டும் பயந்து வந்தார். அவரே தினந்தோறும் பனைமரங்கள் ஏறிப் பல குலைகளையும் ஓலைகளையும் வெட்டி வீழ்த்தி வந்த **அப்புக் கிராமணியார்.**

சுந்தரனுர் துடுக்குச் செய்த போதெல்லாம், பெற்ருேர் அப்புவின் பெயரைச் சொல்லி, இவரை அடக்குவர். '**பழகப் பழகப் பாலும் புளிக்கும்**,' என்பதற்கு ஏற்ப, 'அப்பு, அப்பு,' என்று பெற்ருேர் அடிக்கடி சொல்லி வந்தமையால், இவர் அப்புவிடம் கொண்டிருந்த பயம் படிப்படியே குறைய, அவரை நேரிற்கண்ட போதும் அஞ்சாது நிற்கத் தலைப்பட்டார்.

'**உயிர்களிடத்து அன்பு வேண்டும்**,' என்னும் பாரதியார் கூற்றுக்கு இயையச் சுந்தரனுர் பொன் வண்டு, பட்டுப் பூச்சி போன்றவற்றைப் பிடித்து அவற்றின் கழுத்தில் கயிறு கட்டிப் பறக்க விடுவதை வெறுத்ததோடல்லாமல், இவனர் பிறர் அவ்வாறு செய்தால் அவர்களையும் கண்டிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

சுந்தரனுருக்குத் தக்க வயது வந்ததும் இவரைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்ற எண்ணம் இவர் தந்தையாருக்கு உண்டாயிற்று. அவர் குடியிருந்த துள்ளத்துக்கு அருகில் பள்ளி ஏதுமில்லை. ஒரு கல் தொலைவில் இரண்டு பள்ளிக் கூடங்கள் இருந்தன. அத்துணைத் தொலைவு இவரையும் இவர் தமையனுரையும் அனுப்ப அவரது மனமிசையவில்லை. ஆகவே, வீட்டின் திண்ணையைப் பள்ளிக்கூடமாக்கி அவர் தாமே ஆசிரியரானுர். முதலில் உலகநாதருக்கே பாடம் ஆரம்பிக்கப்பட்டது. தரையில் மணலைப் பரப்பி, அதன்மீது தமிழ் எழுத்துக்களை எழுதி, அவருக்குத் தந்தையார் கற்பித்து வந்தார். எழுத்தனைத்தும் கற்பிக்கப்பட்ட பின் ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம், நல்வழி, உலகநீதி ஆகிய சிறு நூல்கள் போதிக்கப்பட்டன. தமையனுருக்குத் தந்தையார் பாடம் கற்பிக்கும்போதெல்

லாம் சுந்தரனார் உடனிருந்து கேட்பது வழக்கம். '**கற்றலின் கேட்டலே நன்று,**' என்பதற்கிணங்க, கேட்டுக் கேட்டு அவையனைத்தும் சுந்தரனாருக்கு மனப்பாடமாயின.

இந்நிலையில் தந்தையார் இவருக்கும் முறைப்படி கற்பிக்கத் தொடங்கினர். அவர் கற்பித்த பாடங்களனைத்தும் ஏற்கெனவே இவர் கேட்டிருந்தமையால், அவை இவருக்கு மிக எளியனவாகவே தோன்றின. இவ்வாறு இவர்கள் படித்துக்கொண்டிருந்த போது தந்தையாருக்கு மீண்டும் இராயப் பேட்டைக்குப் போய்விட வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. பிள்ளைகளுக்கு உயர்கல்வியளிப்பதும் மகளிருக்கு மணமுடிப்பதும் அவர் சென்னைக்குத் திரும்பிவிட விரும்பியதற்குரிய காரணங்களாகும். அவரது விருப்பத்தை ஒருவரும் வரவேற்கவில்லை யெனினும், அவர் தமது எண்ணத்தைக் கைவிடவில்லை. நிலபுலன்களனைத்தும் நண்பர் ஒருவர்பால் ஒப்புவித்துவிட்டு, அவர் தம் குடும்பத்தவரோடு சென்னை இராயப்பேட்டையை அடைந்தார்.

சென்னை வந்தெய்திய முதலியார், இராயப்பேட்டை முத்து முதலி தெருவில் இருந்த '**ஏ. பி. ஸ்கூல்**' என்று வழங்கிய '**ஆரியன் பிரைமரிப் பாடசாலை**'யில், 1891–ஆம் ஆண்டில் மூத்தவரை நான்காம் வகுப்பிலும், இளையவரை இரண்டாம் வகுப்பிலும் சேர்த்தார். உலகநாதர் மட்டும் சின்னாள் கழித்து **வெஸ்லி கலாசாலை**க்கு அனுப்பப்பட்டாராயினும், இளையவர் மட்டும் அப்பள்ளியிலேயே பயின்று வந்தார்.

சுந்தரனார் நான்காம் வகுப்பிற் படித்துக்கொண்டிருந்த பொழுது, ஆரியன் பள்ளி நிருவாகத்தாருள் பிளவு ஏற்பட்டு, நான்கு திங்கள் வரை பள்ளி மூடப்பட்டுக் காலம் வீணே

கழிந்தது. 1894-ஆம் ஆண்டு இவரும் வெஸ்லி கலாசாலையில் சேர்க்கப்பட்டார்; சில மாதங்களே அங்குப் பயின்றார். இவர்பால் காணப்பட்ட அறிவினைக் கண்டு அழுக்காறுற்ற கலைமகள் இவரது படிப்பினைச் சிறிதுகாலம் தடைப்படுத்தினாள்போலும்! இயற்கையும் சூழ்நிலையும் கலைமகளுடன் ஒத்துழைத்தன. எனவே, நான்காண்டு காலம் இவர் படிப்புப் பாழாயிற்று. காரணம், இவர் அறியாமையால் செய்ததொரு சிறு தவறேயாகும்.

இவர் தமது இளமையில் சற்றுப் பருத்திருந்தார். ஆகவே, உடன் பயின்ற மாணவரனைவரும் இவரைப் '**போதுக்கன்**' என்று வழங்கலாயினர். இவர் உடலின் பெருக்கத்தைக் குறைக்க எண்ணிய தந்தையார், சாமியார் ஒருவரைக் கொண்டு செய்யப்பட்ட மருந்து நெய்யை இவருக்குக் கொடுத்து வந்தார். அதற்கு வைத்த பத்தியமோ, சிறு பிள்ளைகளுக்கு ஏற்றதன்று. ஆதலால், அன்னையார் இவர்க்கெனத் தனியே சமைத்து இவரை உண்பித்து வந்தனர். ஒரு நாள் இவர் பள்ளிக்குச் சென்றிருந்த போது நண்பருடன் சேர்ந்து பத்திய நினைவுமின்றி, அவர்கள் வாங்கித் தந்த உழுந்து வடையை உண்டுவிட்டார். அச்சிறு தவறு இவரைக் கடுமையாகத் தண்டித்துவிட்டது. பள்ளிக்குச் சென்று மீளும் வழியில் இவரது இடக்கால் முடங்கியபடியால், இவர் கீழே விழுந்து, நடக்க முடியாமல் தவித்தார். கால் முடங்கிய சில நிமிட நேரத்திற்குள் இவரது வலக்கையும் முடங்கியது. அன்று முதல் ஓராண்டளவு இவர் முடவராய்க் காலம் கழித்தார்.

இவரது நிலையைக் கண்டு பெற்றோர் பெரிதும் மனங் கலங்கினர். அக்காலத்தில் இராயப்பேட்டையில் மருத்துவத்

துறையில் பெரும்புகழுடன் விளங்கிய **அயோத்தி தாஸ் பண்டிதரை** வரவழைத்துச் சிகிச்சை செய்யச் செய்தனர். பண்டிதர் தைலம் ஒன்று கொடுத்துத் தினந்தோறும் சில மணி நேரத்திற்கொருமுறை முட்டிகளில் தேய்க்கும் படி கூறினர். அவர் கூறியபடி அது ஒரு வாரகாலம் தேய்க்கப் பட்டது. அதனுல், முட்டிகளில் புண்கள் தோன்றின. அது கண்ட பண்டிதர், "இனி எதற்கும் அஞ்ச வேண்டுவதில்லை! இம்முடக்கை இன்னும் சின்னுட்களில் போக்கிவிடலாம்!" என்று கூறிப் பெற்ருேருக்கு நம்பிக்கையூட்டினர். சுந்தரனு ரது உடம்பு நாளுக்கு நாள் தேய்ந்தது. இந்நிலையில் ஒன் பது திங்கள் ஓடி மறைந்தன. ஆயினும் ஆண்டவன் அருளால் இவர் உடல் முழுதும் குணமடைந்துவிட்டது.

முற்றும் குணமடைந்ததும் இவருக்குப் பள்ளி நினைவு வந்தது. அதனை அறிந்த மருத்துவர் மேலும் ஓராண்டு காலம் பள்ளி செல்லக்கூடாது என்று கட்டளையிட்டார். அதன்படி நோயில் ஓராண்டும், ஓய்வில் ஓராண்டும் ஒழிந்தன. இவரைப் பள்ளியில் சேர்க்க முயன்றபோது தந்தையாருக்கும் தாயா ருக்கும் நோய் கண்டது. இவையேயன்றி, வேறு பல தொல்லைகளும் தோன்றலாயின. இவ்வகையால் மேலும் ஈராண்டுகள் இவர் பள்ளியிற்சேர முடியாமற் பாழாயின. ஆக, நான்காண்டு காலம் வீணே கழிந்தது. பொருளாதார நிலையில் சீர் குலைந்த பெற்ருேர், இவரை ஓவியப் பள்ளிக்கா தல் அல்லது வேறெத்தொழிலுக்காதல் அனுப்ப விழைந்த னர். ஆனுல், இவர் மட்டும் அவ்வெண்ணத்திற்கு இசைய வில்லை.

இறுதியாக இவரைப் பள்ளிக்கே அனுப்புவதென்று முடிவு செய்து, 1898-ஆம் ஆண்டில் வெஸ்லி கலாசாலையில்

சேர்த்தனர். மீண்டும் பள்ளியில் சேர்ந்த இவர் ஆறுண்டு காலம் கண்ணும் கருத்துமாய்க் கற்று, எல்லா வகுப்புக்களிலும் முதல்வராய் நின்று, அனைவருடைய ஆசிக்கும் பாராட்டுக்கும் உரியவரானார்.

சுந்தரனார் பள்ளிக்குச் செல்லாமல் வீட்டோடு இருந்த நான்காண்டு காலமும் குடுகுடு, பாரிகுந்தம், கிளிக்குந்தம், ஏழாங்காய் ஆடுதல் முதலிய விளையாட்டுக்களில் காலம் கழித்து வந்தார். இவையேயன்றி வேறு சில நிகழ்ச்சிகளும் இக்காலத்தே நிகழ்ந்தன. அவைகளுள் சில கவனித்தற்குரியவை:

இவரது வீட்டிற்கருகில் இருந்த **சுந்தரேசர் கோவில்** திருவிழா நடக்குங் காலங்களில் சுண்டல் கொடுப்பது வழக்கம். அதனைப் பெறப் பெரியவரும் சிறியவரும் ஓடிச்சென்று சுண்டல் கொடுப்பவரை ஈயென மொய்ப்பது வழக்கம். ஆனால், சுந்தரனார் மட்டும் அவ்வாறு செய்யாமல், தனித்தே நிற்பார். '**இருக்குமிடந் தேடி என்பசிக்கே அன்னம், உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன்,**' என்னும் வாக்கிற்கிணங்க, சுண்டல் வழங்குபவர் இவர் நிற்குமிடம் வந்து கொடுத்தால் வாங்குவார்; அன்றேல், வெறுங்கையராய் வீடு திரும்புவார். சுண்டல் வழங்குபவருள் சிலர், இவர் இருந்த இடத்துக்கு வந்து சுண்டல் தருவர். அவருள் சிறப்பித்துக் கூறத்தக்கவர், தம் சொத்தனைத்தும் அவ்வாலயத்துக்கு அளித்த அறவோராய **மண்டி மன்னாத முதலியார்** ஆவர். சுண்டல் கொடுப்பவர் அவ்வாறு செய்வது அங்கிருந்த நொண்டி ஒருவனுக்குப் பிடிப்பதில்லை. அவன் மற்றப் பிள்ளைகளை அதட்டியும், அடித்தும், மிரட்டியும் வந்தான். அவனுடைய செயல் சுந்தரருக்குச் சற்றும் பிடிப்பதில்லை. இவரும்

இளைஞர் சிலரும் சேர்ந்து, 'என்ன செய்யலாம்!' என்று யோசித்து, நொண்டிக்கு மணல் அபிஷேகம் செய்வது என்று முடிவு செய்தனர்; அதன்படியே ஒரு நாள் செய்தும் முடித்தனர்.

இராயப்பேட்டையிலுள்ள பெரிய பாளையத்தம்மன் கோவில் திருவிழாக்களுள் பல்லக்குச் சேவை மிகவும் சிறப்பாய் நடந்தது. ஒரு சமயம் அதைக் காண அவ்வூரே திரண்டு வந்தது. அப்போது ஏதோ காரணம் பற்றி அங்குக் கூடியிருந்த பெரியோரிடையே கருத்து வேறுபாட்டால் பிளவு ஏற்பட்டது. அவ்வேற்றுமையைப் பொருட்படுத்தாமல் சிறுவரனைவரும் ஒற்றுமையாய் விளையாடிக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் அச்சிறுரிடையேயும் அவ்வேற்றுமை தலை காட்ட ஆரம்பித்தது. அதனை அறிந்த நம் சுந்தரனார் தம்முடைய பெருமுயற்சியால் அவ்வேற்றுமையை ஒழித்து ஒற்றுமையுணர்ச்சியை நிலைபெறச் செய்தார். இளைஞராயிருந்த போதே மக்களை மாக்களாகச் செய்யும் வேற்றுமை மனப்பான்மை சுந்தரனாருக்கு வெறுப்பூட்டி வந்தது.

அக்காலத்தில் சென்னையில் மற்களங்கள் பல ஆங்காங்கே இருந்தன. அவை **கோதாக்கள்** என்று வழங்கப் பட்டு வந்தன. அவையனைத்தும் தேர்ச்சியும் அனுபவ முதிர்ச்சியும் பெற்ற சிலம்ப ஆசிரியர் பலரால் நடத்தப்பட்டு வந்தன. அவற்றுள் ஒன்று, மற்போரில் வல்லவரும், குதிரை ரேக்களாப் பந்தயத்தில் ஈடற்றவருமாகிய **வடிவேல் முதலியா**ரால் நடத்தப்பட்டு வந்தது. காலையில் வீட்டு வேலையும், மாலையில் ஆலயப் பணியும் செய்த நேரம் போக, மற்ற நேரங்களைச் சுந்தரனார் அம்மற்களத்தில் கழித்தார். ஆங்குச் சென்று சிறு கம்பாட்டம், பெருங்கம்பாட்டம் போன்ற விளை

யாட்டுக்களைப் பார்த்து மகிழ்வாரேயன்றி, அவற்றில் பங்கு கொள்ளார். சிறு கம்பாட்டத்துக்கு 'ஜதைக் குச்சி' அல்லது 'செடிக்குச்சி' ஆடுவது என்னும் பெயர் வழக்கத்தில் இருந்து வருகிறது. பெருங்கம்பாட்டத்துக்குப் 'பாணாச் சுழற்றல்' என்னும் பெயர் வழங்குகிறது. கத்தி சுழற்றல், தண்டால் பஸ்கி போடல், கர்லா ஜோடி சுழற்றல் ஆகியவற்றை மட்டும் சுந்தரனார் கற்று வந்தார். ஒவ்வொரு மற்களச் சார்பிலும் மொஹரம் விழாக் கொண்டாடும் போது சிலம்ப வித்தையில் தேர்ந்த ஒருவர் புலிக் கோலம் பூண்டு தெருத்தோறும் சாலைதோறும் ஆடி வருவது வழக்கம். அவ்வாட்டத்தைக் காண இராப்பகல் எனப் பாராது, அது எங்கு நடந்தாலும் அங்குச் செல்வது நம் சுந்தரனார் வழக்கம். அவ்வாறே மாட்டு ரேக்களாப் பந்தயத்தையும், குதிரை ரேக்களாப் பந்தயத்தையும் அவை எத்துணைத் தொலைவில் நடந்த போதிலும் அங்குச் சென்று பார்த்து வந்தார். ஆயினும், இவர் புறாப் பந்தயத்தைத் தவிர மற்றப் பறவைச் சண்டைகளை வெறுத்தார்.

இளைஞர் பலரால் அக்காலத்தில் ஆடப்பட்டு வந்த உப்புக் குந்தம், கிளிக் குந்தம் முதலியவற்றுள் இவரது மனத்தைப் பெரிதும் கவர்ந்தது முன்னையதேயாகும். அவ்விளையாட்டில் வல்லவர் அனைவரும் புகழ்ந்து போற்றும்படி நம் சுந்தரர் அதனை விளையாடி வந்தார்.

சுந்தரேசர் கோவில் திருவிழாக் காலத்தில் ஒருவர் வீட்டுக்கெதிரில் தேங்காய் சூறை விடப்பட்டது. இளைஞர் சிலரது ஏவலினால் இவரும் சூறைத் தேங்காய் எடுக்கச் சென்றார்; எதிர்பாராத விதமாக அத்தேங்காய் இவர் கையின் மீது விழுந்து சுட்டு விரல் நசுங்கியது. இவர் உடனே மருத்து

வர் விடுதிக்குச் சென்று காட்டினர். அங்கிருந்த மருத்துவ நிபுணர் காயப்பட்ட விரலை வெட்டிவிடுவது நன்று என்று கூறக் கேட்ட சுந்தரனர், மருத்துவர் சிறிது தலை மறைந்த வுடனே ஓட்டம் எடுத்து, அயோத்திதாஸ் பண்டிதர் வீடுபோய்ச் சேர்ந்து, அவரிடம் உண்மையை உரைத்துச் சிகிச்சை பெற்றார். சின்னட்களில் அக்காயம் குணமடைந்தது. ஆனல், கீறல் போல இரண்டு வடுக்கள் நின்றன.

பிறிதொரு நாள் இவரும் மாணவர் சிலரும் புள் விளையாட்டு (கில்லி அடித்தல்) ஆடிக்கொண்டிருந்தனர். சுந்தரனர் புள் அடிக்க வேண்டிய முறை வந்தது. கிருஷ்ணன் என்பவன் புள்ளைச் சற்றுத் தூரத்தினின்று எறிந்தான். அதனை இவர் அதிவேகமாக அடித்தார். அப்புள், எறிந்தவனது வலப் பக்கத்தில் பலமாகத் தாக்கிவிட்டது. அவன் துடிதுடித்துக் கீழே சாய்ந்தான். அங்கிருந்தவர் அவனைச் சூழ்ந்து கொண்டனர். அவன் மூர்ச்சை தெளிய ஒரு மணி நேரமாகியது. அன்று முதல் இவர் புள் ஆடுவதை அறவே கைவிட்டார்.

இதுவரை கூறப்பட்டவையேயன்றி நீந்தல், கடலாடல், பசுமாடு மேய்த்தல், நாய் வளர்த்தல், காற்பந்து, பூப்பந்து ஆடல், பிள்ளைகளுடன் கூடிக்கொண்டு அயலாரது தோப்பினின்று மாய்காய் திருடுதல், மணலிற் சிவலிங்கம் எடுத்தல், சதுரங்கம் ஆடல், **குருடர் முடவர் ஆகியோருக்கு அன்னமிட வீடுதோறும் சென்று சோறு சேகரித்து வருதல்** ஆகிய இன்னோரன்ன விளையாட்டுக்களிலும், நிகழ்ச்சிகளிலும் இவர் காலம் கழியலாயிற்று. இவ்வாறு நான்காண்டுகள் கழிந்த பின்னர்ப் பெற்றோர் இவரைப் பள்ளியில் சேர்த்துப் பயிலுமாறு செய்தனர் என்பது முன்பே கூறப்பட்டது. இவர் பள்ளியிற்

சேர்ந்ததும், மற்களம் செல்வதும், பந்தயங்கள் பார்க்கப் போவதும், மற்றப் பிள்ளைகளுடன் கூடிக்கொண்டு ஊர் சுற்றுவதும் சிறிது சிறிதாகச் சுருங்கி, இறுதியில் அறவே நின்றுவிட்டன. இவரது கருத்தைக் கலைமகள் பற்றி ஈர்த்துக்கொண்டாள் என்றே கூற வேண்டும்.

## 4. கல்வி

**'கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.'** —குறள்

முன் அத்தியாயத்தில் சுந்தரனார் தந்தையார்பால் சின்னாள் பயின்று, பின்பு 'ஆரியன் பிரைமரிப்பள்ளி'யில் தமது எட்டாவது வயதில் இரண்டாம் வகுப்பில் சேர்ந்து இரண்டாண்டு பயின்று, நான்காம் வகுப்பு வந்ததும் அப்பள்ளி சரிவர நடவாமையால் வெஸ்லி கலாசாலையில் அதே வகுப்பில் சேர்ந்து பயின்று வந்த காலை, கை கால் முடங்கியது காரணமாகவும் வீட்டில் ஏற்பட்ட பொருளாதார முடை காரணமாகவும் நான்காண்டு காலம் பள்ளிப் படிப்புத் தடைபட்டு, மீண்டும் தமது பன்னிரண்டாம் வயதில் அதே பள்ளியில் அதே வகுப்பில் சேர்ந்து பயிலத் தொடங்கினார் என்பது குறிக்கப்பட்டதன்றோ? இனி இவர் பள்ளியிற் பயின்ற காலை நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளைக் கவனிப்போம் :

சுந்தரனார் நான்காம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த போது தமிழ்க் கட்டுரைப் போட்டி ஒன்று நடைபெற்றது. அதில் முதலிடம் பெறுபவருக்குப் பரிசு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அப்போட்டிக்குக் கொடுக்கப்பட்ட கட்டுரைத் தலைப்புக்கள் தென்னை, வாழை, நாய், பசு என்பன. அப்போட்டியில் கலந்துகொள்ளுவதற்குத் தகுதியுடையவராகக் கருதப்பட்டவர் மூன்றாவது, நான்காவது

வகுப்பு மாணவரேயாவர். நம் சுந்தரனார் அப்போட்டியிற் கலந்துகொண்டு, **'வாழை'** எனும் பொருள் பற்றிக் கட்டுரை வரைந்தார். அதைப்பற்றி இளமையிலேயே அத்துணை விரிவாக அவர் எழுதியது சோதனையாளர் அனைவர் மனத்தையும் ஈர்த்தது. அக்கட்டுரையே முதற்பரிசுக்குரியதாயிற்று. சுந்தரனாருக்கு முதற்பரிசு வழங்கப்பட்டது. அதனால் இவரது பெயர் இராயப்பேட்டை முழுதும் தெரியலாயிற்று. பெரியார் பலர் இவரை வாழ்த்தியும், இவர் தந்தையாரைப் போற்றியும் வந்தனர். ஆனால், இவர் தந்தையார் மட்டும் மைந்தரது வெற்றியைக் கண்டு மகிழ்வெய்தாது இவரைத் தூற்றியே வந்தார். அதற்குக் காரணம், இவரது கையெழுத்து நன்றாயில்லாமையேயாகும். அதையறிந்த சுந்தரனார், தந்தையாரிடமிருந்து நற்பெயர் பெற விரும்பி, நாடோறும் எழுதிப் பழகி வந்தாரெனினும், காந்தியடிகளைப் போலவே, இவரும் அழகுபடக் கையெழுத்து எழுதுவதில் வெற்றி பெற்றாரல்லர்.

சுந்தரனார் முடக்கு நோயினின்று குணமடைந்து, மீண்டும் வெஸ்லி கலாசாலையில் நான்காம் வகுப்பில் சேர்ந்த போது அவ்வகுப்பின் ஆசிரியராய் இருந்தவர் **தேவதாஸ்** என்பவர். அவர் நற்குணங்கள் பல படைத்தவர்; போதனா முறைத்திறன் நன்கு அமையப் பெற்றவர். அவர் சுந்தரனாரது திறமையினையும் அறிவினையும் கண்டு வியந்து, அவரை அவ்வகுப்பின் **சட்டாம்பிள்ளை**யாக அமர்த்தினார். சுந்தரனார் அவரது வீட்டிற்கு அடிக்கடி சென்று தம் மனத்தெழுந்த ஐயங்களைத் தீர்த்துக்கொண்டு வருவது வழக்கம். அவர் இல்லக்கிழத்தியாரே சுந்தரனாருக்குப் **போப்பையர் இலக்கணத்தை** முதன்முதல் தெள்ளிய முறையில் போதித்து அதன்பால் இவருக்குத் தனிவேட்கை எழுமாறு

செய்தவராவர். அக்காலத்தில் ஐரோப்பியப் பாதிரிமாரால் நடத்தப்பட்டு வந்த ஞாயிற்றுக்கிழமை வகுப்புக்களுக்குத் தவறுமற்சென்று, பல பரிசுகள் பெற்ருர் நம் சுந்தரஞர். அவ்வகுப்புக்களை நடத்திய பாதிரிமாருள் பெரும்பாலார், கல்லூரி பிரின்ஸிபால், வைஸ்பிரின்ஸிபால் போன்ற உயரிய பதவியில் இருந்தவராவர். அதனுல் அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் இவருக்குக் கிடைத்தது.

இவர் நான்காம் வகுப்பில் தேறி மேல் வகுப்புக்குச் சென்றதும் சம்பளம் ஏதும் செலுத்தாமற் படிக்கலாம் என்று பிரின்ஸிபால் இவருக்குக் கூறினர். இவருக்கு வேண்டிய புத்தகங்கள் அனைத்தும் பெரிய தந்தையாரின் குமாரர் இராசா முதலியாரால் வாங்கித் தரப்பட்டன. இவ்விதம் இவர் எவ்வகை இடுக்கணும் இன்றிப் படித்து, அவ்வகுப்பிலும் முதல்வராய்த் தேறி, மேற்படிவம் சென்ருர்.

சுந்தரஞர் இரண்டாம் படிவத்தில் படித்த போது பிரின்ஸிபாலாயிருந்த ஜே. கூலிங்கு என்பவர் இங்கிலாந்து செல்ல வேண்டியிருந்தமையால், சி. பார்லட்டு என்பவர் பிரின்ஸிபாலானர். அவர் ஒப்பற்ற கணித மேதை. ஆகவே, மாணவர் அனைவரும் கணிதத்தில் வல்லவராய்த் திகழ வேண்டுமென அவர் விழைந்தார்; எனவே, ஒவ்வொரு வகுப்புக்கும் தனித்தனியே பரீட்சை வைக்கும் வழக்கத்தைப் புகுத்தினர். ஒரு முறை சுந்தரஞர் வகுப்புக்கும் பரீட்சை நடத்தப்பட்டது. வினத்தாளில் கேட்கப்பட்டிருந்த வினக்கள் எல்லாவற்றிற்கும் சுந்தரஞர் சரியாக விடையெழுதியிருந்தமையால், நூற்றுக்கு நூறு மதிப்பெண் வருமென்று எதிர்பார்த்திருந்தார். விடைத்தாள் திருத்தப்பட்டுத் திருப்பியளிக்கப்பட்ட போது, சுந்தரஞர் முகம்

வாடி வருத்தத்தைத் தெரிவித்தது. அதற்குக் காரணம், தாம் எதிர் பார்த்தபடி மதிப்பெண் நூற்றுக்கு நூறு கிடையாமல், தொண்ணூற்றைந்து கிடைத்திருந்ததேயாகும். உடனே இவர் ஆசிரியரை அணுகி, அவ்வாறு மதிப்பெண் குறைந்திருந்ததற்குக் காரணம் கேட்ட போது, அவரால் ஒன்றும் சொல்ல இயலவில்லை. அன்றே பிரின்ஸிபாலும் வகுப்புக்கு வந்து கணிதம் செய்யும் முறைகளுள் சிலவற்றை விளக்கிப் போந்த போது, சுந்தரனார் அவரை அணுகித் தாம் கணக்குக்கள் அனைத்தும் சரியாகச் செய்திருந்தும் மதிப்பெண் ஐந்து குறைந்திருக்கக் காரணமென்ன என்று வினவினார். "நீ சில எழுத்துக்களையும் குறிகளையும் சரியாக எழுதவில்லை. அதனால், ஐந்து மார்க்குக் குறைக்கப்பட்டது," என்று அவர் கூறினார். அது முதல் இவர் அத்தகைய குறையேதும் நேராதவாறு கவனித்து வந்தார். பிரின்ஸிபால் கூறிய காரணம் இவரது முகத்தை மலரச் செய்யவில்லை. ஆயினும், "வகுப்பில் நீயே முதல்வனாய் இருக்கிறாய்," என்று அவர் கூறியதைக் கேட்ட சுந்தரனாரின் அகமும் முகமும் மலர்ந்தன. அக்காலத்தில் இவரையொத்த திறமையோடு விளங்கிய மாணவர் **கணபதி ஐயர்** என்ற ஒருவரே இவர் வகுப்பில் இருந்தார்.

இவ்விருவரும் மூன்றும் படிவத்துக்கு மாற்றப்பட்ட போது இருவர் பெயரும் 'A' பிரிவில் எழுதப்பட்டிருந்தன. அதையறிந்த 'B' பிரிவு ஆசிரியர் **டேவிடு தேவதாஸ்** என்பவர், தலைமை ஆசிரியரிடம் பேசி, சுந்தரனாரைத் தமது வகுப்புக்கு மாற்றிக்கொண்டார். சுந்தரனார் கல்வியிற் சிறந்து விளங்கியபடியால், ஆசிரியர்கள் இவர்பால் நன் மதிப்புக் கொண்டிருந்தார்கள் என்பதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டாகும். டேவிடு தேவதாஸ் ஒரு பாதிரி

யார்; இராயப்பேட்டையில் வசித்து வந்தார். அவர் சுந்தரனார் வீட்டிற்கு அருகில் குடியிருந்தமையால், அவர் வீட்டிற்குச் சுந்தரனார் அடிக்கடி சென்று, தம் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்து வருவது வழக்கம். அங்ஙனம் சென்ற போதெல்லாம் ஆசிரியரின் மனைவியார் இவருக்கும் மாணவர் சிலர்க்கும் தரை நூல் போதிப்பார். அவ்வாசிரியர் திருவள்ளூரில் இருந்த பள்ளி ஒன்றின் தலைமை ஆசிரியர் பதவியேற்று அவண் சென்றார். அவருக்குப் பதிலாக வந்தவர் போதனை முறை நன்கறியாதவர். அவரை ஐயம் எதுவும் கேட்கக் கூடாது. கேட்டால், அவர் சீறுவார். இத்தகைய பண்புடைய அவ்வாசிரியரிடம் சுந்தரனார் ஒரு போது ஐயம் ஒன்று கேட்க நேரிட்டது. அப்போது அவர் இவர்மீது சீற்றம் கொண்டார். அதனைப் பொறாத சுந்தரனார், "நீவிர் போலீஸ் வேலைக்குத்தான் அருகர்," என்று கூறினாராம். இவரது அஞ்சாமையையும் துணிவையும் என்னென்று கூறுவது! அவ்வகுப்பிலும் இவரே முதன்மையாய் நின்று தேறினார். முன்னாளில் மூன்றாம் படிவத்தின் இறுதியில் விருப்பமுடைய மாணவர் **லோயர் செகண்டரி கவர்ன்மெண்டு தேர்வு**க்குச் செல்லலாம். விருப்பமில்லாதவர் நேரே நான்காம் படிவத்திற் படிக்கலாம். சுந்தரனார் அத்தேர்வுக்கும் சென்று அதிலும் தேறினார். கல்வியில் இவர் கொண்டிருந்த ஊக்கமும் முயற்சியும் பிறர்க்கு எடுத்துக்காட்டுக்களாய் அமைந்தன.

நான்காம் படிவத்துக்கு மாறிய போதும் பிள்ளைகளால் வெறுக்கப்பட்ட 'போலீஸ்' ஆசிரியரே அதன் ஆசிரியராய் வந்து சேர்ந்தார். அஃது இவரைப் பெரிதும் கொதித்தெழச் செய்தது. அக்கொதிப்பு மாணவர் சிலரைத் தூண்டி விட்டு, அவ்வாசிரியர் தமக்கு வேண்டாவென்று புரட்சி செய்யுமாறு

தூண்டியது. புரட்சி காரணமாக அவ்வாசிரியர் மாற்றப் பட்டு, **மாணிக்கம்** என்ற ஆசிரியர் நான்காம் படிவத்துக்கு அனுப்பப்பட்டார். அச்சமயத்தில் இவரது மனத்தைப் பெரி தும் கவர்ந்தவராகிய பிரின்ஸிபால் **காக்ஸ் துரை** இயற்கை எய்தினர். அவரது பிரிவு இவரைப் பெரிதும் வருத்தியது. அவரது பூத உடல் அடக்கம் செய்யப்பட்ட புரசைப்பாக் கத்து இடுகாட்டிற்கு அடிக்கடி சென்று, அவரது கல்லறை முன் நின்று வணக்கம் செலுத்தி வருவதை இவர் வழக்க மாகக் கொண்டிருந்தார். குற்றத்தைக் கடிவதும், குணத் துக்கு வணக்கம் செலுத்துவதும் இவர்பால் இளமையி லேயே குடிகொண்டிருந்த நற்பண்புகளாம்.

இவர் நான்காம் படிவத்தினின்று ஐந்தாம் படிவம் சென் றதும் ஆசிரியராய் வந்தவர் **கி. கிருட்டிணராவ்** என்பவர். அவர் எப்பட்டமும் பெற்றிலர் எனினும், துணைத்தலைமையாசிரியர் பதவி பெற்றிருந்த பெருமை படைத்திருந்தார். அவர் கல்லூரி மாணவர்கட்கும் ஆங்கிலம் போதிக்கும் ஆற்றல் வாய்ந்தவர். அவர் ஆங்கிலத்தில் சொற்பெருக்காற்றும் போது அதனைக் கேட்டு ஆங்கிலேயரும் வியப்பர். தெலுங்கு அந்தணர் மரபில் தோன்றிய அவர், பின்னுளில் கிறித்தவராய் மாறி யவர்; தமிழிலும் நன்ருய்ப் பேசும் ஆற்றல் படைத்தவர். அவருக்கும் அவர் குடும்பத்தவர்க்கும் முத்திரை பொறித்த தபால் பில்லைகளைச் சேகரிப்பது பொழுதுபோக்கு. எனவே, சுந்தரனர் அத்தகைய பில்லைகளைச் சேகரித்துக் கொடுத்து அவரது அன்பைப் பெற்ருர். அவ்வாசிரியரும் இவரும் பன் னுட்கள் சமய வாதத்தில் கழிப்பது வழக்கம். அதனல் சுந் தரனரது மனத்தைச் சிறிது சிறிதாகக் கிறித்தவம் ஈர்த்து வந்தது. நற்காலமாக அச்சமயத்தில் **யாழ்ப்பாணம் நா. கதிரைவேற்பிள்ளை** அவர்கள் வெஸ்லி பள்ளியின்

தமிழாசிரியர் பதவி ஏற்ருர். அவரேயன்றிச் **சே. கிருஷ்ண மாசாரியாரும்** தமிழ்ப் பேராசிரிராய் அங்கு வேலை செய்து வந்தார். கதிரைவேற்பிள்ளையவர்கள் சைவ சமயத்திற் பெரிதும் ஈடுபாடு உடையவர்; சொற்பொழிவாற்றுவதில் வல்லவர்.

பிள்ளையவர்களின் பேச்சில் நம் சுந்தரனுர் மயங்கி, அவருடன் நெருங்கிப் பழகலானுர். அவர் எங்குச் சொற்பொழிவாற்றினும் அங்குத் தவருது சென்று அவர் பேச்சைக் கேட்டுச்சுவைத்து இன்புறுவது இவர் வழக்கம். அவர் கூறிய நன்மொழிகளைக் கேட்க இவர் என்றும் தவறியதே இல்லை.

சுந்தரனுர் பள்ளிப் படிப்புப் பிள்ளையவர்களின் தொடர்பால் அழிந்தது என்று கூறினும் அது தவருகாது. இவர் ஆரும் படிவம் வந்ததும் இவர் நாட்டம் அனைத்தும் பிள்ளையவர்களின் சொற்பொழிவின்மீதும், சமயவாதத்தின்மீதும் சென்றது. எனவே, படிப்பின்மீதிருந்த ஊக்கமும் பற்றும் சிறிது சிறிதாகக் குன்ற ஆரம்பித்தன. ஆசிரியர் பலர் எவ்வளவு சொல்லியும், எவ்வளவு தடுத்தும், செவிசாய்க்காமலும் கட்டுக்கடங்காமலும் சுந்தரனுர் தாம் விரும்பிய வழியே சென்ருர்.

இந்நிலையில் சென்றுகொண்டிருந்த போது பிள்ளையவர்களின்மீது வழக்கு ஒன்று தொடரப்பட்டது. அவ்வழக்குக்குச் சுந்தரனுரது சான்றும் தேவைப்பட்டது. அதனுல் இவரும், மாணவர் சிலரும் அடிக்கடி நீதி மன்றம் செல்வாராயினர். அதே சமயத்தில் பிறிதொரு வழக்கும் பிள்ளையவர்கள்மீது தொடரப்பட்டது. அது தம்மைப் பிள்ளையவர்கள் கொத்தவால்சாவடிக்கருகில் தாக்கியதாக **வில்வபதிசெட்டியார்** என்பவரால் எழும்பூர் நீதி மன்றத்தில்

தொடரப்பட்டது. செட்டியார் தம்மைப் பிள்ளையவர்கள் தாக்கியதாகக் குறிப்பிட்ட நாளன்று பிள்ளையவர்கள் பள்ளிக்கு வந்திருந்தார். எனவே, அவ்வழக்கில் சான்று கூறச் சுந்தரனார் பிள்ளையவர்களால் அழைக்கப்பட்டார். இவர் சான்று கூற அழைக்கப்பட்டது ஆறும் படிவத்தில் வழக்கமாக நடைபெறும் 'செலக்ஷன்' பரீட்சைக்கு முதல் நாளேயாகும். அந்நிலையில் பரீட்சைக்குச் செல்லுவதா, அன்றிச் சான்று கூறப் போவதா என்ற நிலை சுந்தரனாரை வருத்தியது. முடிவில் இவருக்கு ஆசிரியர்பால் இருந்த அன்பே வென்றது. அது காரணமாக, செலக்ஷன் பரீட்சை நாட்களில் இரண்டு அரை நாட்கள் இவர் பள்ளிக்குச் செல்லவில்லை. எனவே, இறுதிப் பரீட்சை (Final Examination)க்கு இவரை அனுப்பக்கூடாது என்று பள்ளி அதிகாரிகள் முடிவு செய்தார்கள். இவர்மீது நல்லெண்ணம் கொண்ட கிருஷ்ணராவ் போன்ற ஆசிரியர் சிலர் இறுதிப்பரீட்சைக்கு இவரை அனுப்புமாறு மன்றாடினர். பிரின்ஸிபால் அதற்குச் செவி சாய்த்திலர்; அதற்குப் பதிலாக, மீண்டும் இவரைப் படிக்க வைப்பதென்றும், அதற்கு ஆகும் செலவனைத்தும் 'மிஷன்' கொடுக்கும் என்றும் கூறினர். அதற்குக் காரணம் பிரின்ஸிபாலுக்குச் சுந்தரனாரிடம் தோன்றிய வெறுப்பன்று; பள்ளிக்குரிய சட்டதிட்டத்தின் வழி நிற்க வேண்டிய அவர் கடமையே ஆகும். ஆனால், சுந்தரனார் ஒரே வகுப்பில் இரண்டாண்டுகள் படிக்க விரும்பாது, தமது பள்ளிப்படிப்புக்கு முற்றுப்புள்ளியிட்டார்.

இவர் பள்ளியை விட்டு நின்ற சின்னாட்களுக்கெல்லாம் இவர் தந்தையார் இயற்கையெய்தினார். தந்தையாருக்குப் பிறகு அவரைப் போன்று இவரைப் பாதுகாத்து வந்தவர் இராசா முதலியாரேயாவர். அவர் அவ்வப்போது இவருக்கு

நன்மொழி பல கூறி வந்தார். இவரைக் 'கமர்ஷியல்' கல்வி கற்கும்படி இராசா முதலியார் அடிக்கடி வற்புறுத்தி வந்தார். அவரது சொல்லைத் தட்டி நடக்க விரும்பாத இவர், அப் பள்ளியில் சேர்ந்து, 'புக்கீப்பிங்' பயின்று, தேர்வுக்குச் சென்று தேறினர். இவர் தேர்ச்சி இராசா முதலியாரைப் பெரிதும் ஆறுதலடையச் செய்தது.

சுந்தரனரது பள்ளி வாழ்வு அறைகுறையான நிலையில் முடிவுற்றதும், இவரது நாட்டம் தமிழ்மொழியின்மீது திரும்பியது. எவ்வாசிரியரது வழக்குக்காக இவர் 'செலக்ஷன்' பரீட்சைக்குப் போக முடியாமற்போனதோ, அவ்வாசிரியர்பாலே இவர் தமிழ் நூல்களை முறைப்படி பாடம் கேட்டு வந்தார். அவ்வாசிரியர் தமது பெரும்பொழுதைச் சமயவாதங்கள் நிகழ்த்துவதிலும் சமய கண்டனங்கள் எழுதுவதிலும் செலவழித்து வந்தார். ஆகவே, குறிப்பிட்ட நேரத்திலோ அல்லது இடத்திலோ மாணவர் அவரிடம் தமிழ் கற்க இயலவில்லை. அவருக்கு எவ்வெப்போது ஓய்வு கிடைத்ததோ, அவ்வப்போது அவர் பாடம் சொல்வது வழக்கம். மாணவரும், 'இருவென இருந்து, சொல்லெனச் சொல்லி, சித்திரப் பாவையின் அத்தகவடங்கி' அவர் கூறிய அனைத்தையும் விடாது உளத்தமைத்துப் பயின்று வரலாயினர். சுந்தரனர் கதிரை வேற்பிள்ளையிடம் கற்றன சில; கேட்டறிந்தன பல. பிள்ளையவர்கள் எங்கெல்லாம் சொற்பெருக்காற்றினரோ, அங்கெல்லாம் சுந்தரனர் இருந்தார்.

இவர் பிள்ளையவர்களிடம் தணிகைப் புராணமும் திருவிளையாடற்புராணமும் பாடங்கேட்டு வந்தனர். பிள்ளையவர்கள் இலக்கியம், இலக்கணம், தர்க்கம், சாத்திரம் ஆகியவற்

றில் வல்லுநராய் இருந்தமையால் சமயவாதங்கள் பலநடத்தி அனைத்திலும் வெற்றி வாகை சூடி வந்தார். அவரது போதனையைக் கேட்ட மாணவர் அனைவரும் சைவத்தில் மனம் ஊன்றி நின்றனர். பிள்ளையவர்கள் மாணவர்கட்குப் புராணங்கள் மட்டுமேயன்றி, இடையிடையே இலக்கணமும் பிற இலக்கியங்களும் போதித்து வந்தார். இவ்வாறு அவர் மாணவர்கட்குப் பாடஞ்சொல்லிக்கொண்டிருந்த போது வேலை மாற்றம் காரணமாக அவர் சென்னையை விட்டு நீலகிரிக்குப் போக வேண்டியவரானார். அவர் பிரிவை ஆற்றாமல் ஏங்கி வருந்தியவர் பலர்; அவருள் நம் சுந்தரனாரும் ஒருவர். எனினும், சுந்தரனாரும் சிலரும் அவர்மீது இருந்த அன்பு காரணமாக அவருடன் அடிக்கடி கடித உறவு வைத்துக் கொண்டு ஆறுதல் அடைந்தனர்.

பிள்ளையவர்கள் ஒரு சமயம் சுந்தரனார் எழுதிய முடங்கலுக்குப் பதில் முடங்கலில் தாம் வேனிற்கால விடுமுறையில் சென்னைக்குப் போதருவதாகவும், அப்போது இவரைச் சந்திப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். இச்செய்தி சுந்தரனாரைப் பெரிதும் மகிழ்வித்தது. ஆசிரியர் குறிப்பிட்டிருந்த வேனிற்காலமும் வந்தது. ஆசிரியரும் சென்னைக்கு வந்து, சிந்தாதிரிப்பேட்டையில் இரண்டு திங்கள் தங்கினார். அவ்விரண்டு திங்கட்பொழுதும் சுந்தரனார் தவறாது அவரிடம் சென்று யாப்பிலக்கணம் பயின்று வந்தார்; இடையிடையே பெரிய புராணமும் பாடம் கேட்டு வந்தார். இவ்வாறு ஆசிரியரது பெரும் பொழுது இவருக்கு யாப்பிலக்கணமும் பெரிய புராணமும் போதிப்பதிலேயே கழிந்தது. விடுமுறை நாட்கள் முடிந்ததும் மீண்டும் பிள்ளையவர்கள் நீலகிரிக்குச் சென்றார். அப்போதெல்லாம் இவருக்கும் ஆசிரியருக்குமிடையே நில

விய கடிதப்போக்குவரத்துப் பெரும்பாலும் பாக்களாலேயே நடைபெற்றன.

இங்ஙிலையில் பிள்ளையவர்கள் கடுஞ்சுரத்தால் பீடிக்கப் பட்டு இயற்கை எய்தினர். அச்செய்தி தென்னாட்டைப் பெரிதும் துன்புறச் செய்தது. ஆசிரியர், ஆவி நீத்த பின் சுந்தரனார் ஆறும் வகையறியாது சிறிது காலம் அல்லல் பட்டுக்கொண்டிருந்தார். அச்சமயத்தில் இவர் தமது மனத் தைக் குமரகுருபரர் அருளிய **சிதம்பரச் செய்யுட்கோவையி லும்**, **பாம்பன் குமரகுரு தாசர்** இயற்றிய **திருவலங்கல் திரட்டி லும்** செலுத்தி ஆறுதல் அடைந்தார். பிள்ளையவர்களிடம் பாடங்கேட்டவருள் சிலர், வேறெவரிடமும் பாடங் கேட்க விரும்பாமல், தமிழ்க் கல்வியை அவ்வளவோடு முடித்துக் கொண்டனர். ஆனல், சுந்தரனார் அவ்வாறு இருக்க விரும் பினர் அல்லர்; மேலும் சிலரிடம் சென்று பயில விழைந் தார். அக்காலை **யாழ்ப்பாணம் சுவாமிநாத பண்டிதர்** அவர் கள் சென்னைக்கு வந்து சேர்ந்து, தேவாரம் சிவஞானபாடி யம் முதலிய நூல்களை அச்சேற்றி வெளியிட்டு வந்ததன்றி, மாணவர் சிலர்க்குத் தமிழ்நூல்களும் போதித்து வந்தார்.

இதை அறிந்த சுந்தரனார், தாமும் அவரிடம் பயில விரும்பி, அவரை நாடிச் சென்று, தமது விருப்பத்தை வெளியிட்டார். பண்டிதரும் இவரது வேண்டுதலுக்கு இரங்கிப் பாடம் சொல்லி வந்தார். சுந்தரனார் சமயம் நேர்ந் துழிப் பிள்ளையவர்களின் திறத்தைப் பெரிதும் போற்றினர். மேலும் போதிப்பதில் பண்டிதரை மிஞ்சியவர் பிள்ளையவர் கள் என்றும், அவரது போதனாமுறையில் அவருக்கு ஈடாக எவரையும் சொல்ல முடியாது என்றும் கூறி வந்தார். சுந்தர னார் கூறி வந்ததைப் பிறர் வாயிலாக அறிந்த பண்டிதர்

இவரை அழைத்து, "நீர் என் மாணவராய் இருத்தல் வேண்டா; நண்பராய் இரும்," என்று செப்பினர். அது முதல் இருவரும் நண்பராகவே பழகலாயினர். சுந்தரனர் தமது ஓய்வு நேரங்களில் **சைவ சித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகர்** வரைந்த கண்டன ஏடுகளைப் படித்துச் சைவசித்தாந்த நுண்பொருள்களை அறிந்தார். மேலும், **சபாபதி நாவலர்** மாணவருள் ஒருவராய **மயிலை பாலசுந்தர முதலியா**ருடன் நட்புக்கொண்டு நாவலர் நடத்தி வந்த '**ஞானமிர்தம்**' என்ற தாள்களையும், இயற்றிய நூல்களையும் முதலியாரிடமிருந்து பெற்றுப் படித்து வந்தார். நாவலருடைய தாளும் நூலும் இவர்பால் மறைந்து கிடந்த தமிழ் ஆர்வத்தை மீண்டும் மதர்த்தெழச் செய்தன. ஆகவே, இவருக்குத் தமிழ்க் கல்வியை முறையாகக் கற்றல் வேண்டும் என்ற ஆவல் மேலெழுந்தது.

இவர் தாம்கொண்ட அவாவினை முதலியாரிடம் கூறினர். முதலியாரும் தம்மால் இயன்றதைச் செய்வதாக உறுதி கூறினர். ஒரு நாள் முதலியார், சுந்தரனரைச் சாமியார் ஒருவரிடம் அழைத்துச் சென்றனர். அச்சாமியார் இவரைக் கண்டதும், "உமக்குத் தீட்சையாகியிருக்கிறதா?" என வினவினர். அதற்குச் சுந்தரனர், "இல்லை," என்று பதில் இறுத்தார். "இல்லையாயின், மடத்தார் உத்தரவு வேண்டும்," என்று சாமியார் கூறியதைக் கேட்ட சுந்தரனர், அவரிடம் பாடங்கேட்க விரும்பாமல், "சாமிகளுக்குச் சிரமம் வேண்டா," என்று கூறி வெளிப் போந்தார்.

இவரும் பாலசுந்தர முதலியாரும் மயிலைக் கபாலீச்சுரர் கோவிலுக்கு அடிக்கடி போவது வழக்கம்; வழக்கப்படி கோவிலுக்குச் சென்று ஆண்டவனைத் தொழுதுவிட்டு

ஓரிடத்தமர்ந்து உரையாடிக்கொண்டிருந்த போது, அவண் **மயிலை வித்துவான் தணிகாசல முதலியார்** வந்து சேர்ந்து, சுந்தரனாரை நோக்கி, "பிள்ளையவர்களுக்குப் பிறகு யாரிடம் பாடம் கேட்டு வருகிறீர்?" எனக் கேட்டார். அதற்குப் பாலசுந்தர முதலியார் அன்று காலை சாமியார்பால் நடந்ததை எடுத்தியம்ப, அதனைச் செவிமடுத்த தணிகாசலனார், சினந்து, "சூரியனார் கோவில் சாமியார் எற்றுக்கு? இப்பாவியிடம் வரலாகாதா?" என்று கசந்து கூறினார். தணிகாசல முதலியாரது கூற்று, சுந்தரனாரைப் பெருவியப்படையச் செய்தது. தணிகாசல முதலியார் அக்காலத்தில் சென்னையில் வாழ்ந்த தமிழ்ப் பேரறிஞர்களுள் ஒருவர். ஆதலால், அடுத்த நாளே சுந்தரனார் தணிகாசல முதலியாரது இல்லம் ஏகி, அவரைக் கண்டு வணங்கி அமர்ந்தார். சுந்தரனாரைக் கண்டதும் தணிகாசல முதலியார், "என்னிடம் படித்தலாகாது என்ற எண்ணமா உங்களுக்கு?" என வினவினார். அதற்குச் சுந்தரனார் பிள்ளையவர்கள் பிரிவுக்குப் பிறகு அவரது நினைவே தமக்கு வந்ததாகவும், தணிகாசல முதலியாரை அணுக முடியாது என்று பலர் கூறியதாகவும் சொன்னார். அதைக்கேட்ட மகாவித்துவான், தம்மைச் சிலர் கோபி என்று சொல்லுவர் என்று கூறி, தாம் ஆறுமுக நாவலர்பால் பயின்ற முறையினை எடுத்துக்கூறினார்; பின்பு நன்னூலில் சில கேள்விகளைக் கேட்டார். திருவிளையாடற்புராணத்தின் நாட்டுப் படலத்தில் சில பாக்களுக்கு உரை கூறும்படி கேட்டார். அவரது மனத்தைக் கவரும் வகையில் தாம் அறிந்ததைச் சுந்தரனார் அஞ்சாது கூறினார். சுந்தரனாரது இலக்கிய இலக்கண அறிவைக் கண்டு வியந்த தணிகாசல முதலியார், இவர் இலக்கிய இலக்கணங்களை முறையாகப் பயில வேண்டுவதில்லை என்றும், அவற்றில் ஆங்காங்கு எழும் ஐயங்களைமட்

டும் கேட்டறிதல் சாலும் என்றும், சாத்திரங்களை மட்டும் முறையாகப் பயில வேண்டும் என்றும் கூறி, '**திருவருட்பயன்**' என்னும் நூலைத் தொடங்கினார். மகாவித்துவான் தணிகாசல முதலியார் சுந்தரனாருக்குப் பாடஞ்சொல்ல இசைந்தது சில ருக்கு வியப்பை உண்டாக்கிற்று; மற்றும் சிலருக்குப் பொறு மையை உண்டாக்கிற்று. பொறுமையுற்றோருள் **சுவாமிநாத பண்டி**தரும் ஒருவர். அவர் ஒரு நாள் முதலியாரிடம் சென்று, சுந்தரனாருக்குச் சாத்திரம் போதிக்கக்கூடாதென் றும், இவர் சீர்திருத்தக் கருத்துடையவராதலால், பிற்காலத் தில் சாத்திரத்தைத் தீய வழியில் பயன் படுத்தி நாசஞ் செய் வார் என்றும் புறங்கூறினார். பண்டிதரது கூற்றுக்குச் சிறி தும் செவி சாயாது, முதலியார் அவர்கள் இவருக்குச் சாத்திரத்தைப் போதித்து வந்தார்.

இந்நிலையில் 'திருவருட்பயன்' முடிவுற்றது. அடுத்த தாகச் '**சிவப்பிரகாசம்**' எடுத்துக்கொள்ளப்பட்டது. அந் நூலை முதலியாரவர்கள் போதித்து வந்த காலை இடை யிடையே **சிவஞானபோதம், சிவஞான சித்தியார்** ஆகிய நூல்களினின்று மேற்கோள்களை அடிக்கடி எடுத்துக் கூறு வர். சிவப்பிரகாசம் முடிந்ததும் 'சிவஞானபோதம்' தொடங் கும்படி சுந்தரனார் கேட்டுக்கொண்டார். அதன்படியே முதலியாரும் போதித்து வரலானார்.

இத்தறுவாயில் முதலியார் அவர்கள் சுந்தரனாருக்கு வடமொழி போதிக்க முயன்றார். அவரது முயற்சி முற்றுப் பெறுதொழிந்தது. அதன் பயனாகச் சுந்தரனார் சிறிதளவு கிரந்தம் கற்றுக்கொண்டார். பெருங்கிழவராய முதலியார் குடும்பத்தில் கலக்கம் காலூன்றியது. அது காரணமாக முதலியார் மன அமைதியிழந்து துன்புற்றார். அதை அறிந்த

சுந்தரனூர் அவர் வீட்டுக்குச் செல்லுவதை நாளடைவில் சிறிது சிறிதாக நிறுத்திக்கொண்டார். எனினும், இடையிடையே ஆசிரியர்பாற்சென்று வணக்கம் செலுத்தி, அவரது ஆசி பெற்று வருவது வழக்கம். சுந்தரனூர் முதலியாரிடம் பயின்ற போது **சீவகசிந்தாமணி, பிரபுலிங்க லீலை** ஆகிய இரு நூல்களும் இவரது மனத்தைப் பெரிதும் ஈர்த்தன. இவை இரண்டினையும் இவரே படித்து ஆங்காங்குத் தோன்றிய ஐயங்களை முதலியாரிடம் சென்று போக்கிக்கொண்டு வந்தார். முதலியாரிடம் பாடங் கேட்டல் நின்ற போது, **திருக்குறள்** படிக்க வேண்டும் என்ற வேட்கை இவரைப் பற்றியது. ஆகவே, இவர் இந்நூலில் தேர்ச்சி அடைந்த ஒருவரைக் காண்டலில் ஈடுபட்டார். இவரது நாட்டம் இராயப்பேட்டையில் வதிந்து வந்த **திருக்குறள் சிதம்பர முதலியார்**பால் திரும்பியது.

சுந்தரனூர் சிதம்பர முதலியாரை நாடித் தாம் தமிழ் இலக்கியம் அனைத்தும் அவரிடம் கற்க விரும்புவதாகத் தெரிவித்தார். அதற்கு முதலியார், தாம் ஆசிரியராய் இருக்கத் தகுதியற்றவர் என்றும், வேண்டுமானால் இருவரும் கூடிப் படிக்கலாம் என்றும் அறிவித்தார். அவ்வாறு இருவரும் கூடிப்பயிலுங்கால் முதலியார் அவர்கள் சமயம் நேர்ந்துழி, "சபாபதி நாவலர் இதற்கு இவ்வாறு பொருள் கூறுவார்; அதற்கு அவ்வாறு பொருள் கூறுவார்" என்று கூறி வந்தார். சிதம்பரமுதலியார் பல ஆசிரியரிடம் பாடங்கேட்டவராதலால், ஆசிரியர்கள் கூறிய உரைகளை அவ்வப்போது குறித்து வைத்திருந்தார். அவருடைய குறிப்புச் சுந்தரனூருக்குப் பெரிதும் பயன்பட்டன. இவ்விருவரும் அவ்வப்போது ஏற்பட்ட ஐயங்களைச் **சுவாமி வேதாசலனூராகிய மறை மலை**

அடிகளாரிடம் கேட்பர். அடிகளாரும் இவர்களுக்கு உற்ற ஐயப்பாடுகளை அப்போதைக்கப்போதே அகற்றி வந்தனர்.

அந்நாளில் சுந்தரனார் **கிருஷ்ணப்பிள்ளை**யின் மாணாக்கருள் ஒருவரும் சென்னைப் புதுப்பேட்டையில் இருந்துவரும் செயின்ட் எப்பாஸ் உயர்நிலைப் பள்ளியின் தமிழாசிரியருமாகிய **தேவப்பிரசாதம் பண்டிதரி**ன் நட்புப்பெற்று, அவருடன் கூடிக் கம்பராமாயணம், வில்லிபுத்தூரார் பாரதம் ஆகிய இதிகாசம் இரண்டினையும் ஆராயலாயினர்.

ஒரு சமயம் சுந்தரனார் **சிவப்பிரகாச சுவாமிகள்** முன்னிலையில் **ஜே. எம். நல்லாசாமி பிள்ளை**யின் தலைமையில் கூடிய கூட்டமொன்றில் '**அத்துவிதம்**' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினார். கூட்டத்தின் முடிவில் பிள்ளை அவர்கள் சுவாமிகளை வணங்கி விடைபெற்றுச் சென்றார். சுந்தரனார் அவ்வாறு செய்யாமற்சென்றார். அன்று இரவு முழுதும் இவர் உறங்கினாரல்லர். வீட்டின் எப்பகுதிக்குச் சென்றாலும் இவர் புலால் வாசனை வீசுவது போல அறிந்தார். பொழுது விடிந்ததும் இறைவனை வழிபட்டுச் சிறிது கற்பூரத்தை வாயிலடக்கிச் சுவாமிகளை நாடிச் சென்று வணங்கித் தமது குற்றத்திற்கு மன்னிப்புக் கோரினார். சுவாமிகள் புன்னகை புரிந்து, சிவஞான சித்தியாரை எடுத்துப் படித்து, அதன் தத்துவங்களை விளக்கினார். பிறகு இருவரும் அத்துவிதத்தைப் பற்றி நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தனர். இறுதியில் சுவாமிகள் சுந்தரனாரை நோக்கித் தமிழிலே உள்ள வேதாந்த நூல்களை ஆராயும்படி பணித்தார். அவரது ஆணையை ஏற்றுச் சுந்தரனார் தமிழில் உள்ள வேதாந்த நூல்கள் பலவற்றைப் பயின்று, சித்தாந்தமும் வேதாந்தமும் ஒன்றுக்கு ஒன்று பற்றுக்கோடாகவும் ஆதாரமாகவும் இருப்பதைக் கண்டறிந்தார்.

இந்நிலையில் சுந்தரனாருக்கு வேதாந்த நூல்களின்மீது வேட்கை அதிகரித்தது. அவ்வேட்கை வடமொழியில் உள்ள வேதங்களைக் கற்கத் தூண்டியது. அத்தூண்டுதல் வடமொழி பயில ஊக்கியது. அவ்வூக்கம் தக்கவரை நாடிச் செல்லச் செய்தது. நினைத்த ஒரு காரியத்தைச் செய்து முடிக்க ஆவல் மட்டும் இருந்து என்ன பயன்? அதற்குப் பொருளும் தேவையன்றோ? 'பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை' என்பது அன்றோ பொது மறைக்கூற்று? அதன்படி இவர்பால் பொருளின்மையால், அவ்வாவல் வெற்றியடையா மற்போயிற்று. என்றாலும், அவ்வெண்ணத்தை அறவே அகற்றினாரல்லர். 'கற்றலிற் கேட்டலே நன்று,' என்பதற்கு இயைய, கேட்டறிதலில் கருத்தைத் திருப்பினார்.

அவ்வேளையில் தென்மொழி வடமொழி ஆகிய இரு மொழிகளையும் நன்கறிந்து புலமை பெற்று விளங்கியவரும், தமது புகழைத் தமிழகம் முழுவதும் பரவச் செய்தவருமாகிய **பாம்பன் குமரகுருதாச சுவாமிக**ளின் தொடர்பு சுந்தரனாருக்குக் கிட்டியது. அவர் திருவல்லிக்கேணியில் தங்கியிருந்தனர். அவர் காலை வேளையில் அடிக்கடி கடலோரம் செல்லுதல் வழக்கம். அவருடன் இவரும் செல்வார். இவரது ஆவலை அறிந்த சுவாமிகள், உபநிடதத்தின் சாரத்தைத் தமிழிற் பிழிந்து தருவார். சுந்தரனார் பருகி உவகை எய்துவார்; அதே சமயத்தில் **மருவூர்க் கணேச சாஸ்திரியார்** என்பவரிடம் **சிவகீதை, நீலகண்டபாடியம்** முதலிய நூல்களையும் பாடம் கேட்டார். வால்மீகி இராமாயணமும், வியாச பாரதமும் நன்கறிந்த அறிஞர் எங்கெங்குப் பிரசங்கங்கள் செய்து வந்தனரோ, அங்கெல்லாம் சுந்தரனாரும் சென்று கேட்டு மகிழ்ந்து வந்தார். **பகவற்கீதை**யை இவர் பலர் வாயிலாகக்

கேட்டறிந்தார்; அதன் மொழி பெயர்ப்பு நூல்கள பல படித்தறிந்தார்.

கிருஷ்ணமாசாரியார் வெஸ்லி கல்லூரியில் தெலுங்கு பண்டிதர் வேலே பார்த்து வந்தார். அவர் அப்பள்ளியில் பணியாற்றி வந்த வடமொழிப் புலவரைக்காட்டிலும் வல்ல வர். அவரது தொடர்பும் நம் சுந்தரனுர்க்குக் கிட்டியது. அவரும் இவருமாய்ச் சேர்ந்து, தமது ஓய்வு நேரத்தை வீணில் கழிக்க விரும்பாது, காளிதாசர் போன்ற மேதை களால் இயற்றப்பெற்ற கவித் தடத்தில் தோய்ந்து, அக்கவிகளின் நயங்களேச் சுவைத்துத் திளேப்பர். அதே காலத்தில் வடமொழி அறிஞர் **கடலங்குடி நடேச சாஸ்திரியார்** வடமொழி நூல் பலவற்றைத் தமிழாக்கித் தமிழ்த்தாய்க்குக் காணிக்கையாகத் தந்தார். அவையனைத்தையும் படித்துச் சுந்தரனுர் தமது வடமொழி அறிவை வளர்த்துக்கொண் டார்.

சைன சித்தாந்தங்களே அறிய வேண்டுமென்ற அவா சுந்தரனுருக்குக் கிளர்ந்தெழுந்தது. ஆகவே, இவர் அக்காலே இராயப்பேட்டையில் வசித்து வந்த சைனப் பெரியார் சிலரை அணுகிச் சைன சித்தாந்தங்களே அறிந்தார். இவ ருக்குச் சைன சித்தாந்தங்களே எடுத்துரைத்தவருள் மிகச் சிறந்தவர் இருவர்; ஒருவர் **பார்சுவநாத நயினர்**; மற்ருெருவர் **சக்கரவர்த்தி நயினர்**. சுந்தரனுர் இன்னேரன்ன பிற வழி களால் தம்பால் எழுந்த வடமொழி வேட்கையைத் தணித் துக்கொண்டதோடன்றி, அம்மொழியில் ஓரளவு பயிற்சியும் பெற்ருர்.

இவர் பௌத்த நூல்களேப் படிக்க வேண்டும் என்று எண்ணித் தமிழில் உள்ள பௌத்த நூல்களேப் படித்து வந்த

காலே, முதல் நூல்களையே படிக்க வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. பௌத்த முதனூல்களனைத்தும் பெரும்பாலும் பாலி மொழியிலேயே இருந்து வருகின்றன. இம்மொழி இன்றும் பௌத்த பிக்ஷுக்கள் சிலரால் பயிலப்படுகிறது. இதையறிந்த சுந்தரனார், சிறிது காலம் செய்வகை அறியாது திகைத்தார். அக்காலத்தில் இராயப்பேட்டையில் **அயோத்தி தாஸ் பண்டிதர்** என்பவரால் பௌத்த சங்கம் ஒன்று நடத்தப்பட்டு வந்தது. அது **சாக்கிய பௌத்த சங்கம்** என்று வழங்கப்பட்டு வந்தது. அச்சங்கத்திற்கு இலங்கைத் தமிழர் ஒருவர் வந்தார். அவரும் பிக்ஷு ஆவர். அவர் **திரிபிடக**மும், வேறு சில நூல்களும் போதித்து வந்தார். சுந்தரனார் அங்குச் சென்று அவரது போதனையைக் கேட்டுப் பாலி மொழி அறிவு பெற்றுத் தமது வேட்கை தணியப்பெற்றார்.

அதன் பின்னர்ச் சுந்தரனாருக்கு இஸ்லாமியர் வேதமாகிய **திருக்குர் ஆனை**ப் படிக்க வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. அது அரபு மொழியில் இருப்பதால்,இவர் அதன் மூலத்தைத் தாமே படிக்க முடியாமற்போயிற்று. இவர் ஆயிரம் விளக்குப் பள்ளியில் ஆசிரியராய் இருந்த போது அருகில் இருந்த அஞ்சல் நிலையத்தில் அலுவல் பார்த்து வந்த **அப்துல் கரீம்** என்ற இஸ்லாமியர் ஒருவரது நட்பு இவருக்குக் கிடைத்தது. அவர் மௌல்வி ஒருவரின் புதல்வராகையால், திருக்குர் ஆனை நன்கு அறிந்திருந்தார். அவரிடம் சுந்தரனார் தமது வேட்கையை வெளியிட்டார். அவரும் இவரது வேட்கையைத் தணிப்பதாக உறுதி கூறினார், மாலை நேரங்களில் இருவரும் அணித்தேயிருந்த ஒரு தோப்புக்குச் சென்று அமர்வர். அப்துல்கரீம் அவர்கள் அரபு மொழியில் உள்ள குர்ஆன் பாக்களைப் படித்து, அவற்றின் சாரங்களைப் பிழிந்து பிழிந்து

தமிழில் தருவர். அதனைச் சுந்தரனார் பருகிப் பெருமகிழ்ச்சி அடைவார். இவர் வெஸ்லி கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராய் வேலை பார்த்த போது அங்கிருந்த அரபு பண்டிதரிடமும் சென்று திருக்குர்ஆனை ஆராய்வது வழக்கம். மேலும், திருக்குர்ஆனின் ஆங்கில மொழி பெயர்ப்பு நூல்கள் பலவற்றையும், சில பகுதிகளின் தமிழாக்கத்தையும் படித்தறிந்து ஆறுதல் அடைந்தார்.

சுந்தரனார் தமது ஆங்கில அறிவையும் வளர்த்துக் கொள்ள விழைந்தார். இவரது ஆங்கிலப் படிப்பு ஆறும் படிவத்தோடு முடிந்ததன்றோ? இவருடன் பயின்றவர்களுள் **சச்சிதானந்தம் பிள்ளை** ஒருவரே கல்லூரியிற்படித்துப் பட்டம் பெற்றவர். இவர் அடிக்கடி ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபைக்குப் போய் வருதல் வழக்கம். ஆங்கு இருவரும் சந்திப்பர்: தத்துவ விசாரணை நடத்துவர். அக்காலை பிள்ளை தாம் கற்ற மேல் நாட்டுத் தத்துவங்களை எடுத்தியம்புவர். அவற்றைக் கேட்டுச் சுந்தரனார் களிப்படைவர். பௌத்த மதப் பிரசாரகர்களாகிய **இலக்குமிநரசு நாயுடு, சிங்காரவேலு செட்டியார்** ஆகிய இருவரும் ஆங்கிலத்திலே உள்ள **டார்வின்** கண்ட உண்மையையும், மற்றும் சில விஞ்ஞானிகள் கண்ட உண்மைகளையும் எடுத்துக் கூறி வந்தனர். அவர்கள் சொற்பொழிவாற்றிய இடந்தோறும் சென்று கேட்டு இவர் விஞ்ஞான அறிவைச் சிறிதளவு வளர்த்துக்கொண்டார்; வங்கத்து முதுபேரறிஞரும், **நோபெல் பரிசு** பெற்றவருமாகிய **டாக்டர் இரவீந்திரநாதர்** தீட்டிய **கீதாஞ்சலியும்** இத்தகைய சிறந்த நூல் பலவும் படித்து வந்தார்; ஆங்கில இலக்கியத்தில் சிறந்து விளங்கிய **ஸர். டி. சதாசிவ ஐயர்** போன்றாரது நட்பைப் பெற்று, ஆங்கில இலக்கிய அறிவையும் வளர்த்துக்கொண்டார்; இன்றும் அடையாற்றில் நின்று

நிலவி வரும் **தியசாபிகல் சங்கத்தில்** சேர்ந்து, அதன்கண் இருந்து வந்த அறிஞரது அன்பைப் பெற்றதோடல்லாமல், **அன்னி பெசண்டு அம்மையா**ரது தொடர்பையும் பெற்றார்.

மேலும், அக்காலத்தில் **'மெட்ராஸ் டைம்ஸ்'** என்றொரு தினத்தாள் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தது. அது இன்று நம்மிடையே உலவி வரும் **'மெட்ராஸ் மெயி'**லுடன் இணைந்துவிட்டது. அது **கிளின் பார்லோ** என்னும் ஆங்கில இலக்கியப் பேரறிஞரை ஆசிரியராகக் கொண்டு நடைபெற்று வந்தது. அவ்வறிஞரால் அத்தாளில் **'ஷேக்ஸ்பியர் கிளப்'** என்னும் பெயரால் ஓர் இலக்கியப் பகுதி புகுத்தப்பட்டது. அதில் ஆங்கில அறிஞரும், ஆங்கிலம் வல்லஇந்திய அறிஞரும் இலக்கியக் கட்டுரைகள் பல எழுதி வந்தனர். **ஷேக்ஸ்பியர், மில்டன், ஷெல்லி, ஓர்ட்ஸ்வொர்த்து, கோல்ரிட்ஜ், கோல்டு ஸ்மித்து, தென்னிசன், கீட்ஸ், பைரன்** ஆகிய ஆங்கிலக் கவிகள் யாத்த பாக்களில் காணப்படும் நுண்பொருள்களைப்பற்றியும் இயற்கை வருணனைகளைப் பற்றியும், சொல் வளம் பற்றியும் அறிஞர் பலர் எழுதி வந்தனர். இத்தகைய கட்டுரைகளை ஒன்று விடாமல் படித்து, நம் சுந்தரனார் தமது ஆங்கில இலக்கிய அறிவை வளர்த்துக்கொண்டார்; மேலும், அக்காலத்திற் சென்னையில் வாழ்ந்த **ரோலோ, ரேன்** போன்ற ஆங்கில இலக்கிய வல்லுநர்களின் சொற்பொழிவுகள் எங்கு நடைபெற்ற போதிலும் அங்கெல்லாம் சென்று, அவற்றைச் செவி மடுத்து, ஆங்கில இலக்கியத்தின் சிறப்பினை உன்னி உன்னி உளம் மகிழ்வார்.

தமிழ் மொழி, வடமொழி, ஆங்கிலம், பாலி, அரபு ஆகிய மொழிகளில் வல்லவராய்த் திகழ்ந்த பலரை அண்டி அவ்வம்மொழியில் உள்ள சிறந்த இலக்கிய இலக்கணங்களை

அறிந்த பிறகு, ஓவியம், இசை, நாடகம் முதலிய கலைகளையும் பயில வேண்டும் என்ற ஆவல் இவருக்கு எழுந்தது. ஆனால், அவற்றைக் கண்டு கேட்டுப் போற்றும் அளவுக்குத்தான் வாய்ப்புக் கிட்டியதேயன்றி, அவற்றில் குறிப்பிடத்தக்க ஆற்றல் பெற்றிலர்.

சுந்தரனார் இளைஞராயிருந்த காலை ஒரு சமயம் மேலை நாட்டுப் பாதிரிமாருடன் பல்லவப் பேரரசர்களின் துறைமுகமாய் விளங்கிய மாமல்லபுரத்துக்குச் சென்றிருந்தார். அங்குத் தமிழ் நாட்டுச் சிற்பியரால் கற்பாறையில் ஆக்கப்பட்ட யானையொன்றின் அருகே ஸ்காட்சு நங்கையார் ஒருவர் தம்மை மறந்து நின்று அதன் அழகினை அள்ளி அள்ளிப் பருகக் கண்ட சுந்தரனார், தாமும் அவரருகே நின்று அதனை நோக்கிய வண்ணமிருந்தார். தம் பக்கலில் சுந்தரனார் நின்றதை அறிந்த அவ்வம்மையார், இவருக்குச் சிற்ப ஓவியக் கலைகளின்மாண்பினை எடுத்தியம்பலானார். அதனைக் கேட்ட நாள் முதல் இவர் நாட்டம் சிற்ப ஓவியக்கலைகளின்மீது திரும்பலாயிற்று. இவர் இயற்றிய நூல்களில் அந்த மணம் கமழத் தொடங்கியது. இவர் ஓவியத்திற்காட்டிய ஆவல் ஓவிய நிபுணராய் விளங்கும் **தை. ஆ. கனகசபாபதி முதலியாரை** இவருக்கு நண்பராக்கியது. ஓவியர் முதலியார் நமது தமிழ்க் கடலாகிய சுந்தரனாரைப்பற்றித் '**திரு. வி. கலியாண சுந்தர முதலியார்**' என்ற தலைப்பில் நூல் ஒன்று வரைந்துள்ளார்.

தந்தையார் சிறந்த இசைப் புலவராய் இருந்த போதிலும், சுந்தரனாருக்கு இசைக்கலை பயில வேண்டுமென்ற ஆவல் இளமையில் எழவில்லை. பின்னர் அவ்வேட்கை எழுந்தது. தக்க ஆசிரியரைக்கொண்டு அக்கலையைக் கற்க விழைந்தார். முதலில் ஆசிரியர் ஒருவரிடம் சென்று சின்னாள்

பயின்று வந்தார். அவ்வாசிரியர்பால் ஒழுக்கம் ஒடுங்கியிருந்ததைக் கண்டு வெறுத்து, மற்றொருவர்பாற்சென்று பயிற்சி பெற்று வந்தார். அவரும் முன்னையவரினும் இழிந்த ஒழுக்கங்களை உடையவராய்க் காணப்பட்டார். எனவே, இசைக்கலை பயில்வதை இவர் அறவே கைவிட்டார். ஆயினும், அக்கலையில் கொண்ட மோகம் மட்டும் தணியவில்லை. ஆகவே, **சரப சாஸ்திரியார்**, இசைச் செல்வியெனத் திகழ்ந்த **திருச்செந்தூர்ச் சண்முகவடிவு**, இசைக் கடலைக் கடந்தவரெனப் புகழப்பட்ட **காஞ்சீபுரம் நைனா பிள்ளை** போன்றோர் இசையைக் கேட்டு இன்பக் கடலில் அமிழ்ந்து இறும்பூதெய்துவார்.

இவர் நாடகக் கலையைப் பெரிதும் விரும்பினார். எனினும் அத்துறையில் இருந்து வந்தவர்களின்பால் காணப்பட்ட ஒழுக்கமின்மை காரணமாக, அதையும் வெறுத்து வந்தார். இவர் இளமையிற்கண்ட சில நாடகங்களைத் தவிர, பின்னாளில் எவ்வித நாடகங்களுக்கும் சென்றதில்லை. இவர் இளமைதொட்டு நிழற்படக் காட்சிக்குச் சென்றதேயில்லை என்று கூறினால், அது வியப்புக்குரியதாகவே தோன்றும். இதற்குக் காரணம், அக்காட்சிகளில் மிகுந்த அளவில் இடம் பெறும் ஒழுக்கக்கேடு நிறைந்த பகுதிகளேயாகும். இதனால், இவர் ஒழுக்கத்தின் சிகரமாய் விளங்கினார் என்பது ஒருதலை. இப்பண்புக்கு இவர் ஈடும் எடுப்புமின்றித் தமிழுலகத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்தார்.

காவியக் கலையில் தம்மைச் சிறந்தவராகச் செய்து கொள்ளற்கு **டாக்டர் சாமிநாத ஐயர், மறை மலையடிகள், விபுலானந்த அடிகள், வேங்கடசாமி நாட்டார், கா. சுப்பிரமணியப்பிள்ளை, தஞ்சைச் சீனிவாசப்பிள்ளை, திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள், கதிரேசஞ்செட்டியார், வேங்கடாசலம் பிள்ளை**

போன்ற மேதைகளுடன் தொடர்பு பூண்டு பல்வேறு விஷயங்களைப்பற்றி உரையாடித் தமது தமிழ், ஆங்கிலம், வடமொழி அறிவினை வளர்த்துக்கொண்டார். இத்தகைய தொடர்பே இவரைத் **தமிழ்க் கடல்** என்றும் **முதுபெரும் புலவர்** என்றும் தமிழ்நாடு போற்றுவதற்குக் காரணமாயிருந்தது.

## 5. ஊழியம்

சுந்தரனார் தமது வாலிபப் பருவத்திலேயே தந்தையாரை இழந்தமையால், துள்ளத்தில் நடந்துகொண்டிருந்த மண்டி சரிவரக் கவனிப்பாரற்ற காரணத்தினால் மூடப்பட்டது. அங்கிருந்த நிலங்களனைத்தும் அயலாரிடம் குத்தகைக்கு விடப்பட்டிருந்தன. தந்தையார் உயிருடன் இருந்த வரையில் சிறிது நெல் வந்துகொண்டிருந்தது. அவர் இறப்பெய்திய பின் துள்ளம் சென்று குத்தகை வசூலிப்பாரற்ற காரணத்தால் நெல் வருவது அறவே நின்றுவிட்டது. ஆகவே, வேறு வழியின்றி இவர் அன்னையார் சிறியதொரு கடை ஆரம்பிக்கலானார். அக்கடை அவர் தந்தையாரின் மூத்த மனைவியாரின் புதல்வராகிய **விசயரங்க முதலியா**ரால் கண்காணிக்கப்பட்டு வந்தது. அவ்வாணிகத்தில் குடும்ப நிருவாகத்திற்கு வேண்டிய பொருள் கிடைத்திலது. அவர் வேறு வழி ஏதுமின்றித் தம் மூத்த புதல்வரை வேலைக்கனுப்ப முயன்றார். உலகநாத முதலியாரும் குடும்ப நிலையைக் கண்டு வருந்தி வேலை செய்யத் துணிந்தார். அதன்படி மவுண்டு ரோடில் இருந்த வைஜயந்தி அச்சகத்தில் வேலைக்கமர்ந்தார். அங்கு உலகநாத முதலியாருக்குக் குறைந்த சம்பளமே கொடுக்கப்பட்டது. அவரது வருவாயும் குடும்பத்துக்குப் போதியதாயில்லை. எனவே, அம்மையார் மிகவும் வருந்தினார்.

இந்நிலையில் சுந்தரனார் ஊர் சுற்றிக்கொண்டும் தமிழை ஆராய்ந்துகொண்டுமிருந்ததைக் கண்ட ஊரார், 'இவர் ஏன் வேலைக்குச் சென்று பொருள் சம்பாதித்து அன்னைக்குக் கொடுத்து உதவக்கூடாது?' என்று பேசலாயினர். அனைவருக்கும் இளையவராதலால் அன்னையாரோ, அன்றித் தமையனாரோ, இவரை 'வேலைக்குப்போ,' என்று கூற ஒரு நாளும் முற்பட்டிலர். அன்னையாரும் தமையனாரும் அவ்வாறு கூறாதிருந்தனர் எனினும், ஊரார் கூற்று இவரது காதிற்பட்டது; மனத்தைத் தைத்தது; வேலை தேடவேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தது. வேலைக்காகப் பல்வேறு இடங்களுக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டன. இவரது படிப்பு 'லோயர் செக்கண்டரி சர்டிபிகேட்'டோடு நின்றுவிட்டதால், பெரிய உத்தியோகமேதும் கிடைக்கவில்லை. சுந்தரனார் நல்லதொரு வேலையைத் தேடித் திரிந்துகொண்டிருந்த காலை இவர் தமையனாரின் மாமனார் ஒரு நாள் வீட்டுக்கு வந்திருந்தார். இவர் வேலையின்றிச் சும்மாவிருந்ததை அறிந்து, அவர் வருந்தினார்; இவருக்குப் **பின்னி கம்பெனி**யில் வேலை வாங்கித் தருவதாகக் கூறினார். அதன்படி மறு நாள் இருவரும் பின்னி கம்பெனிக்குச் சென்றனர். அங்குச் சுந்தரனார் மாமனாரின் எசமானராகிய சவுகாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர் தம் நண்பரும் பின்னி கம்பெனியின் பெரிய துரையுமாகிய சிம்ஸனிடம் சுந்தரனாரை அழைத்துச் சென்று, வேலை தரும்படி கேட்டார். துரையவர்களும் தம் நண்பரான சவுகாரின் வேண்டுகோளுக்கிணங்கி, வேலை தருவதாக ஒப்புக்கொண்டு, சுந்தரனார் வைத்திருந்த 'புக்கீப்பிங்' பத்திரத்தைக் காட்டுமாறு பணித்தார், துரையவர்கள் பத்திரத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் போது, தமது கையெழுத்து நன்றாயிராது என்று

சுந்தரனார் கூறியதைக் கேட்ட துரையவர்கள், நகைத்துக் கொண்டே கணிதவேலை தருவதாகக் கூறி, உடனே ஓர் இலாக்காவின் தலைமைக் கணக்கரை விளித்து, இவருக்கு வேலை தரும்படி ஆணையிட்டார். தலைமைக் கணக்கர் இவரை உடனழைத்துச் சென்று, வெகு கடினமான வேலையைக் கொடுத்துச் செய்யச் சொன்னார். இவர் அவ்வேலையை அன்று ஒருவாறுகச் செய்து முடித்தார். மறுநாட்காலை மீண்டும் வேலைக்கு வந்து தமக்காக வைக்கப்பட்டிருந்த வேலை முன்னாளையதைக்காட்டிலும் அதிக முரட்டுத்தனமானதாய் இருக்கக் கண்டு, தாம் அங்கு வேலைக்கு வந்தது தலைமைக் கணக்கருக்குப் பிடிக்கவில்லை என்பதை அறிந்துகொண்டு, முற்பகல்வரையில் வேலைசெய்துவிட்டுப் பிற்பகலில் வேலைக்குச் செல்லாது நின்றுவிட்டார். அப்பெரியவரது செயலைக் குறித்துத் துரையிடம் முறையிட இவரது மனம் இடந்தரவில்லை. அன்று மாலையே தம் தமையனாரின் மாமனார் வீட்டிற்குச் சென்று, அப்பெரியவரின் செயலை எடுத்துக்கூறி, இனித் தம்மால் அங்கு வேலை செய்ய முடியாது என்று இயம்பினார்.

இவர் கூறியதைக் கேட்ட இவர் தம் தமையனாரின் மாமனார், சற்று நேரம் வாளாவிருந்துவிட்டு, "நாளைப் பிற்பகல் நாமிருவரும் 'வால்கார்ட்டு பிரதர்ஸ்' என்னும் கம்பெனிக்குப் போகலாம்," என்று கூறினார். அதன்படி. இருவரும் வால்கார்ட்டு பிரதர்ஸுக்குச் சென்றனர். தமையனாரின் மாமனார் அக்கம்பெனியின் மானேஜரைக் கண்டு பேசி, சுந்தரனாருக்கு வேலை ஒன்று கொடுக்கும்படி வேண்டிக்கொண்டார். அதற்கு அம்மானேஜர் அப்போதைக்கு அங்குக் கணக்கர் வேலை ஏதும் இல்லையென்றும், காப்பிஷ்டு வேலைக்கே ஆள் தேவையென்றும் கூறினார். அவர் கூற்றைக்கேட்ட சுந்தரனார் அவ்வேலை தமக்கு வேண்டாவென்று கூறி நின்றார்.

சுந்தரனாரது மனோ நிலையை அறிந்த மானேஜர், இவருக்கு அறிவு கொளுத்தும் வகையில் நன்மொழி சில கூறினார்.

பின்னர்ச் சுந்தரனார் மவுண்டுரோடிலிருந்த **ஸ்மித்துக் கம்பெனி**யில் வேலை காலியிருந்ததை அறிந்து முயற்சி செய்தார். அங்குக் கதிரைவேற்பிள்ளையின் பகைவர் ஒருவர் வேலை செய்து வந்தார். சுந்தரனார் பிள்ளையவர்களிடம் பேரன்பு பூண்டவரென அறிந்த அப்பகைவர், இவர் அக் கம்பெனிக்குள் நுழையலாகாதெனை எண்ணித் தம்மாலான முயற்சி அனைத்தும் செய்து வெற்றி கண்டார்.

இவ்வாறு இவர் சென்றவிடமெல்லாம் வெறுப்பும், இன்னலும், அழுக்காறும் தலை காட்டி வந்தன. செய்வது அறியாது இருந்த நிலையில் ஒருநாள் இவர் தற்செயலாக இராயப்பேட்டை வடிவேல் முதலியாரைக் கண்டு பேசநேர்ந்தது. அப்போது **ஸ்பென்ஸர் கம்பெனி**யில் கேட்டலாகு இலாக்காவில் ஆள் ஒருவர் தேவை என்று முதலியார் தெரிவித்தார். அவ்வேலையைத் தமக்கு வாங்கித் தருமாறு முதலியாரைச் சுந்தரனார் வேண்டினார். முதலியாரும் அதற்கு இசைந்து, தாமே சுந்தரனாரை அவ்விலாக்காவின் அதிகாரியான **பார்க்கர் துரை**யிடம் அழைத்துச் சென்று, காலியாயிருந்த வேலையைச் சுந்தரனாருக்குத் தருமாறு கேட்டுக்கொண்டார். துரையும் முதலியாரது வேண்டுகோளுக்கிசைந்து சுந்தரனாரைச் சோதிக்கத் துணிந்தார்; இவரது 'புக்கிப்பிங்' பத்திரத்தைக் கண்டு மகிழ்ந்தார்; வேலை தரவும் முடிவு செய்துவிட்டார்.

அவ்வேளையில் சுந்தரனார் தமது கையெழுத்து நன்றாயிராது என்று துரையிடம் கூறினார். துரை அதற்கு, “எல்லாருக்குமா கையெழுத்து நன்றாயிருக்கும்? சிலருக்குத்

தான் நன்றாயிருக்கும்,'' என்று கூறிச் சுந்தரனாரது கையெழுத்தைவிட மோசமான அவரது கையெழுத்தைக் காட்டிப் பார்க்கும்படி செய்தார். துரையவர்களிடம் காணப்பட்ட பொறுமையும், நற்குணங்களும் சுந்தரனாரை அவர் தலைமையில் வேலை செய்யத் தூண்டியது. அவர் கொடுத்த வேலையைச் செய்ய இசைந்தார். பின்னர் அவ்வேலையின் தன்மையனைத்தும் துரையாலேயே நன்கு விளக்கப் பட்டன. அன்று முதல் அவ்வேலையை ஊக்கத்தோடும் ஆர்வத்தோடும் செய்து, மூன்றே மாதங்களில் முடித்து, அதிகாரியின் நன்மதிப்பைப் பெற்றார். சில தினங்களில் வேலை படிப்படியே குறைந்து, இறுதியில் சுருங்கியது. இவர் வேலை பார்த்துவந்த இலாக்காவில் இருந்த பணியாளனுக்கு அங்கிருந்த ஒவ்வொன்றும் மனப்பாடமாகிவிட்டது. அதிகாரி சுந்தரனாரை இன்னின்ன 'கேட்டலாகுகள்' வேண்டும் என்று கூறும்போதே, அவையனைத்தையும் பணியாள் எடுத்துவந்து வைத்துவிடுவான். இத்தகைய சிறந்த ஒரு வேலையாளும் கிடைக்கப் பெற்றதால், இவருக்கு அங்கே செய்வதற்கு வேலையில்லையென்றே கூறலாம். இவர் அங்கு வேலை செய்த நேரத்தைவிட ஓய்வு பெற்ற நேரமே அதிகமாகும்.

இவர் பிறர் போல ஓய்வு நேரத்தை வீணில் கழிக்காமல், நூல்கள் பல படித்தும், பாக்கள் பல யாத்தும், கட்டுரைகள் பல வரைந்தும் வந்தார். இவர் அங்கு வேலை செய்து கொண்டிருந்த போதுதான் இவரது உள்ளத்தில் அகலா இடம் பெற்ற தம் தமிழாசிரியர் யாழ்ப்பாணம் கதிரைவேல் பிள்ளையின் சரித்திரத்தை எழுதி முடித்தாரெனின், இவர் அங்குப் பெற்ற ஓய்வுக்கு வேறு எடுத்துக்காட்டு வேண்டா.

இவ்வாறு இவர் ஸ்பென்ஸர் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்த போதுதான் அரசியல் ஆர்வம் இவரது மனத்தை ஈர்க்க ஆரம்பித்தது. அப்போது ஆங்கிலேயரால் வங்காளம் இரு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டது. அதன் காரணமாக எழுந்த கிளர்ச்சி, நாட்டில் காட்டுத்தீயைப் போலப் பரவியது. அப்போது அப்பிரிவினையைக் கண்டித்துச் சென்னைக் கடற்கரையில் **விபினசந்திர பாலர்** ஆற்றிய சொற்பொழிவு தென்னாட்டவரின் உள்ளத்தில் உரிமை வேட்கையை மதர்த்தெழச் செய்தது. அதே வேளையில் **இலஜபதி ராய்** நாடு கடத்தப்பட்ட செய்தி மின்னல் வேகத்தில் பரவி இந்திய மக்களைத் தட்டி எழுப்பியது. இத்தகைய நிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றிக்கொண்டிருந்ததை அறிந்த சுந்தரனார், செய்தித் தாள்களைத் தொடர்ந்து படிக்க ஆரம்பித்தார். அவற்றுள் **அரவிந்தரால்** நடத்தப்பட்ட **'வந்தே மாதரம்'** என்பதும் ஒன்று. இவர் படித்த பத்திரிகைகளில் அன்றன்று வெளிப்பட்ட செய்திகளைக் கம்பெனியில் இருந்த நண்பர்களுக்கு எடுத்துக் கூறுவது இவர் வழக்கம். இவர் பத்திரிகை வாசித்துச் செய்திகளை ஓய்வு நேரங்களில் பிறருக்குக் கூறுவது சிறிது சிறிதாகப் புகைந்து, இறுதியில் மானேஜிங் டைரெக்டருக்கும் எட்டியது. மானேஜிங் டைரெக்டர் இவரை அழைத்துப் பத்திரிகை படித்துப் பிறருக்கு எடுத்துக் கூறுவது தவறு என்று கூறிக் கண்டித்தார். அவரது கண்டிப்பு இவரைப் பெரிதும் வருத்தியது. அன்று பிற்பகல் ஸ்பென்ஸர் கம்பெனிக்கு அண்மையில் தம் தமையனார் வேலை செய்துகொண்டிருந்த வைஜயந்தி அச்சகத்திற்குச் சென்று, தமையனாரைக் கண்டு நடந்ததனைத்தும் எடுத்துக்கூறி, மேலும் தம்மால் அக்கம்பெனியில் வேலைசெய்ய முடியாது என்பதை வெளிப்படுத்தி

ளூர். பிற்பகல் இவர் வேலைக்குச் சென்றதும் ராஜிநாமாக் கடிதத்தை அதிகாரியிடம் கொடுத்தார். இவர் அவ்வாறு செய்ததற்குக் காரணமாயிருந்தது எது என்பதை அறிந்த அதிகாரி, பற்பல நன்மொழி கூறி, ராஜிநாமாவைத் திரும்பப் பெறும்படி கேட்டுக்கொண்டார். அவ்வாறு செய்ய இவரது மனம் இசையவில்லை. அதிகாரி இவரது செயலுக்கு இரங்கி, இவருக்குச் சிறந்த நன்னடக்கைப் பத்திரமொன்று வழங்கி, தாம் இவர்பால்கொண்ட அன்பை வெளியிட்டார். அக்கம்பெனியினின்று விலகிய பிறகு வேறெந்தக் கம்பெனியிலும் வேலை செய்ய இவரது மனம் இடந்தரவில்லை. ஸ்பென்ஸர் கம்பெனியோடு கணக்கர் வேலை முற்றுப் பெற்றது.

ஒரு மனிதனுக்கு உரிய பத்திரிகை படிக்கும் உரிமையைக் கடிந்த அயலார் கம்பெனியிலிருந்து வேலை பார்க்க மனமில்லாமல் வெளிப்போந்த சுந்தரனார், செய்வதறியாது இருந்தார். அன்றிரவு வழக்கம் போல ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபைக்குச் சென்றார். அங்கு இவரும், இவர் தமையனாரும், நண்பர் சிலரும் கூடி என்ன செய்யலாம் என்று ஆழ்ந்து சிந்தித்தனர். இறுதியில் இவர் தமையனாரும் **சிவசங்கர முதலியா**ரும் சேர்ந்து அச்சகம் ஒன்று நிறுவுவது என்ற முடிவுக்கு வந்தனர். அதன்படி கையிலிருந்த சிறிய தொகையைக்கொண்டும், அன்னையாரது நகைகளை விற்றதால் வந்த தொகையைக் கொண்டும் ஓர் அச்சகம் அமைத்தனர். அதற்கு '**உமாபதி குருப்பிரகாசம் பிரஸ்**' என்று பெயரிட்டனர். அவ்வச்சகத்திலிருந்து சுந்தரனாரால் எழுதப் பெற்ற முக்கிய குறிப்புரையுடன்கூடிய பெரிய புராணம், பகுதி பகுதியாக வெளியிடப்பட்டது. மேலும், '**திருமந்திரம்**' என்னும் நூல் இவரால் பதிப்பிக்கப்பட்டு அச்சாகி

51278
031,6M83w
J3

வந்தது. அவ்வச்சகம் மிகவும் நட்டத்தில் வேலை செய்து கொண்டுவந்ததால், அதை விற்க வேண்டியதாயிற்று. பின்னர்ச் சகோதரர் இருவரும் வேறு வேலை ஏதும் கிடைக்காததால் வாளாவிருக்க வேண்டியதாயிற்று.

இந்நிலையில் சுந்தரனாருடைய ஒரு சாலை மாணவருள் ஒருவராகிய **டானியல்சிங்கு** என்பவர் ஒரு நாள் வழியில் இவரைக் கண்டு பேசிக்கொண்டிருந்த போது, ஆயிரவிளக்கு வெஸ்லியன் மிஷன் பள்ளியில் ஆசிரியர் இருவர் தேவை என்று கூறி, அதற்கு மனுப்போடும்படி தூண்டினர். அவரது தூண்டுதலுக்கு இணங்கிச் சுந்தரனார் விண்ணப்பம் அனுப்பினர். டானியல் சிங்கும் விண்ணப்பம் அனுப்பினர். ஒரு நாள் இருவரும் அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் **ஜான் இரத்தினம் பிள்ளை** என்பவரைக் காணச் சென்றனர். தலைமை ஆசிரியர் நற்சாட்சிப் பத்திரங்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு மறு நாள் காலை வரும்படி கூறினர். அவ்வாறே இருவரும் மறு நாள் சென்றனர். அவர் சுந்தரனாரை முதற்படிவ ஆசிரியராகவும், டானியல்சிங்கை மூன்றும் வகுப்பு ஆசிரியராகவும் அமர்த்திக்கொண்டார். அப்பள்ளிக்கூடத்தில் ஆதித்திராவிட மாணவரையே அதிகமாகச் சேர்ப்பது வழக்கம். அப்பள்ளி அவர்களுக்காகவே நிறுவப்பட்டது என்று கூறினும் அமையும். ஆயினும், அங்கு வேறு பிள்ளைகளும் சேர்ந்து படித்து வந்தார்கள். அப்பள்ளியிலேதான் நம் தமிழ்ப் பெருந்தகை சுந்தரனார் ஆறுண்டு காலம் ஆசிரியத் தொண்டு புரிந்தார். அவ்வாறுண்டு காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பல. அவற்றுள் சில ஈண்டுத் தரப்படுகின்றன:

ஜான் இரத்தினம் பிள்ளை அவர்கள் டானியல்சிங்கு வாயிலாகச் சுந்தரனார் தமிழ்ப்புலவர் என்பதை அறிந்து, ஒரு

நாள் இவரது வகுப்புக்குச் சென்றார். அவ்வேளையில் சுந்தரனார் தமிழ் இலக்கணம் சொல்லிக்கொண்டிருந்தார். இவரது போதனைத் திறத்தையும், தமிழறிவையும் கண்டு வியந்து, அவர் அன்று மாலை இவரைத் தமது இல்லத்துக்கு அழைத்துச் சென்று, தமிழைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். மறுநாட்காலை இவர் பள்ளிக்குச் சென்றதும் இவருக்கு ஒரு முடங்கல் கிடைத்தது. அதில் 'இன்றுமுதல் நீர் இரண்டாம் மூன்றும் படிவங்களுக்குத் தமிழ் சொல்லித் தருதல் வேண்டும்,' என்பது கண்டிருந்தது. 'எல்லாம் நன்மைக்கே,' என்பதையறிந்த சுந்தரனார், தலைமை ஆசிரியரது கட்டளையை ஏற்று நிறைவேற்றி வந்தார்.

இவரது உழைப்புக்கு ஏற்ற ஊதியமல்ல தாம் தந்த சம்பளம் என்று கருதிய தலைமை ஆசிரியர், இவரது வருவாயைப் பெருக்க எண்ணி, அதே பள்ளியில் '**வெஸ்லியன் டெக்னிக்கல் இன்ஸ்டிட்யூட்**' என்னும் பள்ளியை அமைத்து, அதில் மாலையில் 'புக்கீப்பிங்' சொல்லித் தரும்படி சுந்தரனாருக்குக் கூறினார். தலைமை ஆசிரியர் இவர்பால் காட்டிய அன்பு பிறரை வெகுளச் செய்தது. ஆனால், சுந்தரனாருக்கும் தலைமையாசிரியருக்குமிடையே நிலவிய அன்பு வளர் மதியைப் போலவளரலாயிற்று.

ஆண்டுதோறும் ஒவ்வொரு பள்ளியிலும் அரசாங்கக் கல்வி இலாக்கா அதிகாரிகள் தணிக்கை நடத்துவது வழக்கம். அதன்படி சுந்தரனார் பள்ளியில் சேர்ந்த முதலாண்டில் அதிகாரி ஒருவர் இவரது வகுப்புக்கு வந்தார்; அப்போது இவர் தமிழ்ப் பாடம் நடத்திக்கொண்டிருந்ததைக் கண்டு மாணவரைச் சில கேள்விகள் கேட்டார். மாணவரும் நல்ல முறையில் பதிலளித்தனர். அவ்வதிகாரி

இவரது போதனைத் திறத்தை வியந்து, வெளிப்போந்தார். அவ்வதிகாரியே மேலும் இரண்டு ஆண்டுகள் வந்தார்; இவரது வகுப்புக்கு வந்து இவருடன் தமிழைப் பற்றிச் சிறிதுநேரம் பேசிவிட்டுத் தணிக்கை ஏதும் நடத்தாமலே சென்றுவிட்டார்.

நான்காம் ஆண்டு புதிய அதிகாரி ஒருவர் பள்ளியைத் தணிக்கை செய்ய வந்தார். அவரைக் கண்டு ஆசிரிய உலகமே கலங்கியது. அவ்வதிகாரி நான்காம் வகுப்புக்கு வந்து சோதனை நடத்தினர். அவ்வகுப்புக்கு எதிரிலிருந்த சுந்தரனாரை அழைத்து, "இப்பிள்ளைகளுக்கு டிக்டேஷன் கொடு," என்று பணித்து, வேறு வகுப்புக்குச் சென்று சோதனை நடத்திவிட்டு மீண்டபோது, இவர் அவ்வகுப்பில் இல்லாததைக் கண்டு, ஆளை அனுப்பி வருமாறு செய்து, "ஏன் இங்கிருந்து போனீர்?" என்று கேட்டார். "வேலை முடிந்துவிட்டது; என் வகுப்புக்குச் சென்றேன்," என்று பதில் இறுத்தார் சுந்தரனார். இவரது பதிலைக்கேட்ட அதிகாரிக்குச் சினம் மூண்டது. இவ்வாறாக முதல் நாள் ஒழிந்தது.

மறு நாள் தணிக்கை தொடங்கியது. அதிகாரியும் வந்தார்; முதலில் இரண்டாம் படிவம் சென்று சுந்தரனார் தமிழ்ப்பாடம் நடத்திக்கொண்டிருந்ததைக் கண்டு, சிறிது நேரம் அங்கு நின்று கவனித்துவிட்டுச் சென்றார். மணியடித்ததும், சுந்தரனார் தமது வகுப்பாகிய முதற்படிவத்திற்குச் சென்று கணக்குப் பாடம் தொடங்கினர். கரும்பலகையில் கணக்கு ஒன்றை எழுதி, அதைச் செய்யுமாறு பணித்தார். அவ்வேளையில் அதிகாரி அங்கு வந்து கரும்பலகையில் எழுதியிருந்த கணக்கை அழித்துவிட்டு, வேறு கணக்கு

ஒன்றை எழுதிச் செய்யுமாறு முடுக்கினர். பிள்ளைகள் செய்து முடித்ததும் ஆசிரியரைச் சரிபார்க்கும்படி கட்டளையிட்டு அவரும் பின்தொடர்ந்தே சென்றார். அவ்வேலை முடிந்ததும் மனக் கணக்கொன்று கொடுத்தார். அவரே விடைகளைப் பார்த்து முடித்தபிறகு ஒரு மாணவனை அழைத்து "இதை எவ்வழியில் செய்தாய்?" என வினவினர். அம்மாணவன் வழியைச் சொன்னன். அதோடு நில்லாமல் மேலும் சில மாணவரைக். கேட்டார். அவர்களும் முதல்மாணவன் கூறியதையே கூறினர்கள். பிறகு அதிகாரி சுந்தரனரைப் பார்த்து, "நீர் போதித்த முறை இதுதானே?" என்று வினவ, இவரும் 'ஆம்' எனப் பதிலளித்தார். உடனே அதிகாரி கோபம் கொண்டு "இம்முறையில் செய்யலாகாது" என்று கூறி வேறொரு முறையைச் சொன்னர். அதைக் கேட்டதும் சுந்தரனர் ஆத்திரமடைந்து, தாம் சொல்லிக் கொடுத்த முறையே சரியானதென்றும் அதிகாரி செப்பிய முறை அவ்வகுப்புக்குத் தகுதியற்றதென்றும் வாதித்தார். இவர் வாதத்தைக் கேட்ட அதிகாரி ஆவேசங்கொண்டு வகுப்பை விட்டு வெளியேறித் தலைமை ஆசிரியரிடம் சென்று நடந்ததைக் கூறினர்.

அதேவேளையில் சுந்தரனர் அதிகாரிக்குக் கடிதம் ஒன்று எழுதி, பிள்ளை ஒருவரின் மூலமாக அனுப்பினர். அதில் அவர் போதித்த முறையே சிறந்ததென்றும், வேண்டுமானல் அதை எவ்விடத்திலும் மெய்ப்பிக்கச் சித்தமாய் இருப்பதாகவும், வேலையைவிட்டு விலகவும் ஆயத்தமாக இருப்பதாகவும் குறிக்கப்பட்டிருந்தது. அதிகாரி அக் கடிதத்தைப் படித்துத் தாம் செய்த தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கேட்கவும் சித்தமாயிருந்தார். அதேவேளையில் சுந்தரனரைத் தலைமையாசிரியர் அழைத்து அதிகாரி அவர்

தவற்றை உணர்ந்துவிட்டதாகக் கூறி முடித்ததும் சுந்தரனார் அதிகாரியை நோக்கி மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டார். இவ்வாறு சிறந்த முறையில் இவர் ஆசிரியத் தொழில் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இச்சமயத்தில் இவர் திருமணம் செய்து கொள்வதற்கு இசையாததை அறிந்த அஷ்டாவதானம் பூவை கலியாண சுந்தர முதலியார் இவரை மடத்துக்கு அனுப்ப எண்ணி இவரது விருப்பத்தைக் கேட்டார். இவ்விஷயத்தைக் குறித்துச் சுந்தரனார் தலைமை ஆசிரியரிடம் ஆலோசித்தார். அதற்குத் தலைமை ஆசிரியர் "நீர் மடத்துக்குச் செல்வதை நான் விரும்பவில்லை," என்று கூறவே அவ்வெண்ணத்தை விட்டொழித்தார்.

அதே சமயத்தில் இவர் எங்கு மடத்துக்குச் சென்று விடப் போகிறாரோ என்றஞ்சி, நண்பர் பலர் இவரைத் திருமணம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்தினர். அவருள் ஜான் இரத்தினம் பிள்ளையும் ஒருவராவர். இறுதியில் இவர் திருமணம் செய்து கொள்ள இசைந்தார். இவரது இசைவு தலைமை ஆசிரியருக்குப் பேரானந்தம் அளித்தது. திருமணத்துக்குத் தலைமையாசிரியரையும், மற்ற ஆசிரியரையும் அழைக்கச் சென்ற தமையனாரை ஜான் இரத்தினம் பிள்ளையவர்கள் அவரது இல்லத்திற்கு அழைத்துச் சென்று தம்மிடமிருந்த நகைகளனைத்தையும் தந்தார். பிள்ளையவர்கள் திருமணத்துக்குப் போந்து இறைவழிபாடு செய்து ஆசி கூறினர்.

அத்தருணத்தில் வெஸ்லியன் பள்ளியை மூடிவிடுவதென்ற எண்ணம் அதிகாரிகளிடையே எழுந்தது. அதே சமயத்தில் வெஸ்லிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்து வந்த சே. கிருஷ்ணமாச்சாரியார் ஓய்வு பெறப்

போகிறார் என்ற செய்தியும் பரவியது. அவ்வேலைக்கு முயற்சி செய்யும்படி ஜான் இரத்தினம் பிள்ளை சுந்தரனாரைத் தூண்டினார். அநேகர் அப்பதவிக்கு முயன்றனர். இவருக்கே அப்பதவி வருதல் வேண்டுமென்றெண்ணி திருவாளர்கள் சச்சிதானந்தம் பிள்ளை, **நமச்சிவாய முதலியார்** போன்றவர்கள் அரும்பாடுபட்டனர். இவருக்கு இப்பதவி கிடைக்காமற் போமாறு செய்ய வேண்டுமென்று எண்ணிய விஷமிகள் இவர்மேல் இல்லாத குற்றங்களைச் சுமத்தியும் உள்ளதைப் பன்மடங்காகப் பெருக்கியும் பிரின்சிபாலிடம் சொல்லி, அவரது மனத்தை மாற்றி வந்தார்கள். இறுதியில் ஜான் இரத்தினம் பிள்ளை அவர்களின் முயற்சியினால் அப்பதவி இவருக்கே கிடைத்தது. இவர் அக்கல்லூரியில் பதவியேற்ற அன்றே பிரின்சிபாலிடம் சென்று, உண்மையை உரைத்து அவரது நன்மதிப்பைத் தேடிக் கொண்டார்.

இவர் அக்கல்லூரியில் பணியாற்றி வந்தகாலை பண்டிதர்களின் குறைகளைக் கல்லூரித் தலைவருக்கு எடுத்துக் கூறிச் சம்பளம் உயர்வடையச் செய்தார். மேலும் தமிழாசிரியர்கட்கு இருந்து வந்த குறைகளை யெல்லாம் சிறிது சிறிதாகப் பிரின்சிபாலுக்கு எடுத்துக் கூறி மெல்ல மெல்ல அவற்றைக் களைந்து, ஆசிரியர் அனைவரது நன்மதிப்பையும், வாழ்த்தையும் பெற்றார்.

இந்நிலையில் சுந்தரனார் இருந்த போது நாட்டில் நிலவி வந்த அந்நிய ஆட்சியின் அடக்கு முறையை எதிர்த்துப் போராட ஆரம்பிக்கப்பட்ட சுய ஆட்சிக் கிளர்ச்சி நாளுக்கு நாள் மக்களிடையே எழுச்சியையூட்டிக்கொண்டு வந்தது. இவ்வெழுச்சியை ஒடுக்க 'ஜஸ்டிஸ் கட்சி' காணப்பட்டது. ஹோம் ரூல் கிளர்ச்சிக்குக் காரண கர்த்தராயிருந்த அன்னி

பெசன்டு அம்மையாரை 1917-ஆம் ஆண்டில் சிறையில் வைத்தனர். ஸ்பென்ஸர் கம்பெனியில் சுந்தரனார் மனத்தில் இடப்பட்ட அரசியல் வித்து, செடியாகி, மரமாகி, அரும்பி, பூத்துக் காய்க்க ஆரம்பித்தது. எனவே, கல்லூரியை விட்டு அரசியலில் புக்கு நாட்டுப் பணியாற்ற விழைந்தது இவரது மனம். அதே ஆண்டு டிசம்பர்த் திங்கள் கல்விப் பணியி னின்று தம்மை விடுவித்துக்கொண்டு எழுத்துப் பணியில் புகுந்தார்.

இவர் கல்லூரியை விட்டு விலகி, **'தேசபக்தன்'** என்னும் பத்திரிகையின் தலைமை ஆசிரியராய் அமர்ந்து, இவரது பேனா முனை வாயிலாக உறங்கிக் கிடந்த தென்னாட்டவரை விழிப்புறச் செய்து, அவர்களது உள்ளத்தில் நாட்டுப் பற்று எழுமாறு தொண்டாற்றி வந்தார். அப்பத்திரிகை நிருவாகத் தவருள் ஏற்பட்ட சிக்கலால் இரண்டரை ஆண்டுக்குள் இவர் அதை விடுத்து விலகவேண்டியவரானார். பின்னர், சென்னைத் தொழிலாளரும் பிறரும் தந்த பொருளினைக் கொண்டு 1920-ஆம் ஆண்டு இவரது சொந்தப் பொறுப்பில் **'நவசக்தி'** என்ற ஒரு பத்திரிகையைத் தோற்றுவித்துத் தென்னாட்டவர் கைகளில் தவழுமாறு செய்தார். அப்பத்திரிகையில் அரசி யல் மட்டுமன்றி, இலக்கியம், சமயம், ஆராய்ச்சி முதலியன இடம் பெற்றன. அப்பத்திரிகை இவராலேயே இருபது ஆண்டு காலம் நடத்தப்பட்டு வந்தது.

## 6. அரசியல் தொண்டு

ஆங்கில ஆட்சி இந்திய நாட்டில் காலூன்றிய காலந் தொட்டு இந்தியரின் உரிமைகள் சிறிது சிறிதாகப் பறிக்கப்பட்டு வந்தன. அன்றியும், அடக்குமுறை ஆட்சியும்

நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வந்தது. அந்நியரின் அடக்குமுறையாட்சியை அறவேயகற்றிச் சுய ஆட்சியை நிறுவ வேண்டும் என்ற எண்ணம் இந்திய அறிஞர் பலர் மனத்தில் எழுந்தது. அத்தகைய அறிஞர் பலருடைய பேச்சும் எழுத்தும் மக்கள் உள்ளத்தில் சுய ஆட்சி உணர்வு குடி புகச் செய்தன. இவ்வுணர்ச்சியால் உந்தப்பெற்ற உத்தமர் பலரால் ஒரு சங்கம் காணப்பட்டது. அதுவே **அகில இந்திய காங்கிரஸ் சங்க**மாகும். அச்சங்கம் இந்திய மக்களின் நலனையே பெருநோக்கமாய்க் கொண்டு உழைத்து வந்தது. அச்சங்கத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டவர் பலர். அவருள் குறிக்கத் தக்கவர், **தாதாபாய் நௌரோஜி, சுரேந்திர நாத பானர்ஜி, விபினசந்திரபாலர், பாலகங்காதர திலகர், லாலா லஜபதிராய், கோபால கிருஷ்ண கோகலே, காந்தியடிகள், நெஹ்ரு, சுபாஷ் சந்திர போஸ்** என்பவர் வடநாட்டைச் சேர்ந்தவராவர். **அனந்தாச்சார்லு, சர். சுப்பிரமணிய ஐயர், டாக்டர் நாயர், வி. கிருஷ்ணசாமி ஐயர், சீனிவாச ஐயங்கார், சுப்பிரமணிய சிவா, சுப்பிரமணிய பாரதி, வ. உ. சிதம்பரம் பிள்ளை, பிரகாசம், இராசகோபாலாசாரியார், ஈ. வே. இராமசாமி நாயகர், டாக்டர் வரதராசுலு நாயுடு, திரு. வி. கலியாண சுந்தரனார்** என்பவர் தென்னாட்டைச் சேர்ந்தவராவர். இவர்களுடைய உலையா ஊக்கத்தாலும் இடையரு உழைப்பாலும் மக்கள் உள்ளத்தில் நாட்டுப் பற்றென்னும் நற்கனல் நாவிட்டெரிய ஆரம்பித்தது. இவருள், தாய் நாட்டிற்காக உடல் பொருள் ஆவியனைத்தையும் தியாகம் செய்யமுற்பட்டவர் சிலர்; ஊதியம் மிக்க தம் தொழில்களை உதறிவிட்டு அரசியலில் புகுந்தவர் சிலர். பின் கூறப்பட்ட சிலருள் சுந்தரனாரும் ஒருவர்.

சுந்தரனார் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோதே அரசியலில் கவனம் செலுத்தி வந்தார். இவரும் இவருடைய நண்பர்களும் அரசியல் அறிஞர்கள் பேசிய கூட்டங்களுக்கு அடிக்கடி செல்லுவது வழக்கம். அனந்தாச்சார்லு, டாக்டர் நாயர், விபினசந்திர பாலர், பால கங்காதர திலகர் போன்ற அறிஞர்களின் சொற்பெருக்கும், **அரவிந்தகோஷ்** நடாத்தி வந்த **'வந்தே மாதரம்'** என்ற தாளில் இடம் பெற்றிருந்த எழுச்சியூட்டும் செய்திகளும், சீனிவாச ஐயங்காரும், அமரகவி பாரதியாரும் நடாத்தி வந்த **'இந்தியா'** என்ற இனிய தாளில் வெளி வந்த எழுத்தோவியங்களும் சுந்தரனாரது உள்ளத்தில் அரசியல் வித்தை ஊன்றின. அரசியலில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் இவரைப் பெரிதும் அரித்து வந்தது. அவ்வெண்ணம் ஈடேறும் நாளை இவர் எதிர் நோக்கி நின்றார்.

பஞ்சாப்பு ஈன்றளித்த **பாஞ்சால சிங்கம்** லாலா லஜபதிராய் நாடு கடத்தப்பட்ட செய்தியும், அதையொட்டித் திலகர் செய்த பிரசாரமும், 1906 ல் கல்கத்தாவில் தாதாபாய் நௌரோஜி தலைமையில் நடந்த காங்கிரஸ் மகாசபையின் மாநாட்டின் போது செய்யப்பட்ட பிரசாரமும், அரவிந்தகோஷ்மீது தொடரப்பட்ட வழக்கும், திலகர் சிறை வாசமும் சுந்தரனார் எண்ணத்திற்குத் துணை புரிந்தன. இந்நிகழ்ச்சிகளே இவரை ஸ்பென்ஸர் கம்பெனியினின்றும் வெளியேறி அரசியலில் ஈடுபடச் செய்தது என்பது முன்னரே குறிக்கப்பட்டது.

சுந்தரனாருக்கும் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயருக்குமிடையே ஏற்பட்ட நட்புக் காரணமாக அடையாற்றுப் **பிரமஞான சபை**யின் (தியசாபிகல் சங்கத்தின்) அறிஞர் பலரது நட்பும்,

அச்சங்கத் தலைவராகிய அன்னிபெசண்டு அம்மையார்து நட்பும் கிடைக்கப்பெற்ருர். அவ்வம்மையார்பால் காணப்பட்ட கல்வித்திறனும், அரசியல் அறிவும் இவரைப் பெரிதும் கவர்ந்தன. அக்கவர்ச்சி இவரை அம்மையாருடன் நெருங்கிப் பழகச் செய்தது. இவர், அம்மையார்பால் கொண்டிருந்த அன்பு அவரது சுய ஆட்சி (Home Rule) இயக்கத்திலும் பங்கு கொள்ளச் செய்தது. ஆதலால், இவர் அம்மையார் நடத்தி வந்த '**நீயூ இந்தியா**'ப் பத்திரிகையைத் தொடர்ந்து படித்து வந்தார்.

அதே சமயத்தில் இவருக்கு 'நியூ இந்தியா'ப் பத்திரிகையின் துணையாசிரியருள் ஒருவரும், மங்களூரைச் சேர்ந்தவருமாகிய **எம். சுப்பராய காமத்து** என்பவர் நட்பும் கிடைத்தது. அவர் தூண்டுதலினுல் இராயப்பேட்டையில் '**சகோதர சங்கம்**' ஒன்று நிறுவப்பட்டது. அச்சங்கம் அன்னி பெசன்டு அம்மையாரைக் காப்பாளராகவும், ஜஸ்டிஸ் சதாசிவ ஐயரைத் தலைவராகவும், சுப்பராய காமத்தை அமைச்சராகவும் கொண்டு இயங்கி வந்தது. அதன் பொறுப்பாளருள் ஒருவராய்ச் சுந்தரனுர் திகழ்ந்தார். அதன் சார்பில் ஏற்படுத்தப் பட்ட மூன்று ஆண்கள் பள்ளிகளும், ஒரு பெண்கள் பள்ளியும் இவரது கண் காணிப்பில் நடந்து வந்தன.

அக்காலத்தில் காங்கிரசின் செல்வாக்கைக் குறைக்கவும் சுயஆட்சிக் கிளர்ச்சியை ஒடுக்கவும், வகுப்பு வேற்றுமையைப் பெருக்கவும் ஆங்கில ஆட்சியாளர் தூண்டுதலால் '**ஜஸ்டிஸ் கட்சி**'என்ற ஒரு புதிய அரசியல் கட்சி தோன்றியது. அக்கட்சியின் சார்பில் தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தினத்தாள்கள் வெளிவந்துகொண்டிருந்தன. அவற்றுள் ஆங்கிலத் தாளுக்கு '**ஜஸ்டிஸ்**' என்பது பெயர்.

தமிழ்த் தாளுக்குத் '**திராவிடன்**' என்பது பெயர். இவை இரண்டும் அந்நிய ஆட்சியை ஆதரித்ததோடு நில்லாமல், இந்து சமயத்தையும் இழித்து எழுத ஆரம்பித்ததைக் கண்ட பலர், இவற்றை எதிர்த்துச் சமயச் சார்பில் கூட்டங்கள் பல கூட்டிக் கண்டித்தனர். அத்தகைய கூட்டங்களில் சுந்தரனாரும் கலந்து சொற்பெருக்காற்றி வந்தார்; சமயம் நேர்ந்துழி, ஜஸ்டிஸ் கட்சியின் போக்கை வன்மையாகக் கண்டித்துப் பேசியும் எழுதியும் வந்தார்; இத்தொண்டொன்றையே தமது முதலாய கடமையாகவும் கருதினார்.

ஒரு போது ஜஸ்டிஸ் கட்சிச்சார்பில் கூட்டப்பட்ட கூட்டமொன்றில் டாக்டர் நாயர் பேசிக்கொண்டிருந்தபோது சுந்தரனார் தாளொன்றில் சில கேள்விகளை வரைந்து நாயருக்கு அனுப்பினார். நாயரும் அக்கேள்விகளுக்குப் பதில் இறுத்தார். அவரது பதில் சுந்தரனாரைத் திருப்திப்படுத்தவில்லையாதலின், எழுந்து நின்று மேலும் சில கேள்விகள் கேட்கலானார். உடனே கூட்டத்திலிருந்து, "உட்கார்! உட்கார்!" என்ற கூக்குரல் எழுந்தது. அச்செயல் சுந்தரனார் மனத்தைப் புண்படுத்தியது. ஆனால், நாயர் மட்டும், "இக் கேள்விகளுக்குப் பதில் நாளைத் திராவிடனில் விளக்கமாக வரும்," என்று பெருந்தன்மையாய்க் கூறி அமர்ந்தார். அன்று முதல் சுந்தரனார் கூட்டத்திற்குச் சென்று நேரில் கேள்வி கேட்கும் வழக்கத்தை நிறுத்திக்கொண்டார். பிறிதொரு சமயம் எழும்பூரில் மீண்டும் டாக்டர் நாயர் தலைமையில் கூட்டம் ஒன்று கூடியது. அது போழ்து சுந்தரனார் துண்டறிக்கை ஒன்று வெளியிட்டார். அத்துண்டறிக்கையால் ஜஸ்டிஸ் கட்சியாரும் சுய ஆட்சியாளரும் கை கலந்து இவ்விருவருக்குமிடையே ஏற்பட்ட கலாம் சுய ஆட்சி இயக்கத்துக்கு ஆக்கந் தேடித் தந்தது.

அந்நிகழ்ச்சிக்குப் பிறகு ஆட்சியாளரும் விழித்துக் கொண்டனர்; ஜஸ்டிஸ் கட்சியால் சுய ஆட்சி இயக்கத்தை ஒடுக்க முடியாது என்பதனை உணர்ந்தனர்; மறைமுக வேலையை விட்டு நேர்முறைச் செயலில் இறங்கினர்; அடக்கு முறை என்னும் பாணத்தை எய்ய ஆரம்பித்தனர். அதன்படி அக்காலக் கவர்னர் **லார்டு பென்ட்லண்டு** அரசாங்கம் அன்னி பெசண்டு அம்மையாரையும், அவருடைய இரு கண்கள் என விளங்கிய **அருண்டேலேயும் வாடியா**வையும் கைது செய்து சிறையிட்டது. அச்செயல் நாட்டுப்பற்று மிக்க பலரைத் தத் தம் பணியை விடுத்து அரசியலில் ஈடுபடச் செய்தது. அப்போதுதான் சுந்தரனாரும் வெஸ்லி கல்லூரியை விட்டு அரசியலில் ஈடுபட்டு, 'தேசபக்தன்' என்னும் அரசியல் தாளின் ஆசிரியராய் அமர்ந்து வேலை செய்து வரலானார்.

சுய ஆட்சி இயக்கத் தலைவராய அன்னி பெசண்டு அம்மையாரும் அவருடைய துணைவர்களும் காவலில் வைக்கப் பட்ட செய்தி தமிழ் நாடெங்கும் காட்டுத் தீபோலப் பரவியது. அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டிக்கப் பல கூட்டங்கள் கூடின. அவற்றுள் சிறப்புடையது சென்னை கோகலே மண்டபத்திற்கூடிய ஒரு கூட்டமாகும். அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கியவர் **திவான்பகதூர் கேசவப் பிள்ளை** என்பவர். அக்கூட்டத்தில் சுந்தரனார் 'திராவிடரும் காங்கிரசும்' என்னும் பொருள் பற்றிப் பேசினர். அதுவே சுந்தரனார் முதன்முதல் பேசிய அரசியல் கன்னிப் பேச்சாகும். இவரது பேச்சுத் தமிழ் நாட்டில் வளர்ந்துகொண்டு வந்த வகுப்பு வாதத்தை முறியடித்து மக்களிடையே பிராமணர், பிராமணரல்லாதார் என்ற வேற்றுமையுணர்ச்சியைக் களைந்து, ஒற்றுமையுணர்ச்சியை வேரூன்றச் செய்தது.

பின்னர் ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிராகச் **சென்னை மாகாணச் சங்கம்** என்ற ஓர் அரசியல் சங்கம் நிறுவப்பட்டது. அச்சங்கத்திற்குத் திவான் பகதூர் கேசவப் பிள்ளையைத் தலைவராகவும், லார்டு கோவிந்ததாஸ், ஈ. வே. இராமசாமி நாயகர் உள்ளிட்ட எழுவரைத் துணைத் தலைவராகவும், டாக்டர் வரதராசுலு நாயுடு, வி. சர்க்கரைச் செட்டியார், சுந்தரனார் உள்ளிட்ட ஐவரை அமைச்சராகவும் மக்கள் தேர்ந்தெடுத்தார்கள். அச்சங்கத்தின் கொள்கையை, டாக்டர் வரதராசுலு நாயுடு தென்னாடெங்கும் சென்று எடுத்துக் கூறி மக்களது ஆதரவைத் திரட்டினார். அச்சங்கத்தின் தோற்றமும், உறுப்பினர்களின் பிரசாரமும் ஜஸ்டிஸ் கட்சியின் வளர்ச்சியைச் சற்றுத் தடுத்தன.

அச்சங்கம் தோன்றிய சின்னாட்களுள் அன்னி பெசண்டும் மற்றவரும் விடுதலையடைந்தனர். இவர்கள் விடுதலையடைந்த சில திங்கள் கழித்து, இந்தியா அமைச்சரான **மாண்டேகு பிரபு** இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்தார். அவர் இந்தியாவிற்கு வந்தது இந்தியாவின் நிலையை நேரிற்கண்டு அறியவேயாகும். அப்போது நாட்டில் இருந்த பல கட்சியினரையும் அவர் நேரில் விசாரித்தறியக் கட்சிகளின் பட்டியல் ஒன்றைத் தயாரித்து வெளியிட்டது இந்திய அரசாங்கம். அப்பட்டியல் மாகாண வாரியாகத் தயாரிக்கப்பட்டது. சென்னை மாகாணத்துப் பட்டியலில் சென்னை மாகாணச் சங்கம் சேர்க்கப்படாததைக் கண்டு பெருங்கிளர்ச்சி நடந்தது. அதற்கென்று மாபெருங்கூட்டம் ஒன்று சென்னையில் நடந்தது. அதில் பெருந்தலைவர் பலர் சொற்பொழிவாற்றினர். அவருள் சுந்தரனாரும் ஒருவராவர். சுந்தரனார் பேச்சோடு நில்லாது, தாம் நடாத்தி வந்த 'தேசபக்தனில்' கட்டுரைகளும் எழுதி வந்தார். தலை

வர்களின் பேச்சும், இவரது எழுத்தும் அரசாங்கத்தைச் சென்னை மாகாணச் சங்கத்தைச் சான்றுக் குழுவில் சேர்க்கும்படி செய்தது.

அச்சங்கத்தின் சார்பில் தஞ்சை—திருச்சி மாவட்ட மாநாடு 'இந்தியன் பேற்றியட்டு' ஆசிரியர் திவான் பகதூர் கருணாகர மேனன் தலைமையில் தஞ்சையில் கூடியது. அதில் தீர்மானங்கள் பல நிறைவேறின. அவற்றுள் தமிழைப் பற்றிய தீர்மானமொன்று கொணரப்பட்ட காலை, சுந்தரனார் அத்தீர்மானத்தைப் பின்பற்றிப் பேசினார். அவ்வாறு இவர் பேசிய காலை 'இனி எல்லாரும், எங்கும் தமிழிலேயே பேசுதல் வேண்டும்,' என்று வற்புறுத்திக் கூறினார்; அதோடு நில்லாது, 'தேசபக்தனில்' கட்டுரைகள் பல தீட்டினார். அதனால், 'எனக்குத் தமிழில் பேச வாராது,' என்று கூறி, ஆங்கிலத்தில் நாவன்மை காட்டி வந்த தலைவர் பலர் தமிழிலேயே பேசலாயினர். அது முதல் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் செயற்கூட்டம் தமிழிலேயே நடைபெறலாயிற்று. இம்மொழிப் புரட்சிக் காரணமாக அக்காலத்தில் இருந்தவர் அனைவரும் இவரைப் **'புரட்சி வீரர்'** என்று புகழலாயினர். இன்று நமது தமிழகம் எங்கும் தமிழ் மொழி தலைமை தாங்கி இலங்குவதற்குக் காரணகர்த்தர் திரு. வி. க. என்பது மிகை படக் கூறுதலாகாது.

சென்னை மாகாணச் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு மாநாடு ஈரோடில் லார்டு கோவிந்ததாஸ் தலைமையில் கூடியது. அம்மாநாட்டின் வரவேற்புத் தலைவராக ஈ. வே. இராமசாமி நாயகர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அம்மாநாட்டிலேதான் நாயகரும் சுந்தரனாரும் நண்பராயினர். அம்மாநாட்டில் திரு. வி. க. இராசப் பிரதிநிதி லார்டு செம்ஸ்போர்டு

திரும்ப அழைக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் கொண்டு வந்தார். அதை முதியவர் அனைவரும் எதிர்த்த தோடல்லாமல், 'கலியாண சுந்தரனாரது ஆவேசப் பேச்சுக்கு இரையாகக் கூடாது,' என்று கூறி அத்தீர்மானத்தை வன் மையாகக் கண்டித்தும் பேசினர். ஆனால், அத்தீர்மானத்தைப் பற்றிச் சுந்தரனார் மக்களுக்கு விளக்கிக் கூறிய பின் எதிர்ப் பெல்லாம் அனலிடை யிட்ட மெழுகெனத் தேய்ந்து இறுதி யில் அத்தீர்மானம் நிறைவேறியது.

இவர் 'தேசபக்தனி'ன் ஆசிரியராய் இருந்த காலை அரசாங் கத்தார் அத்தாளுக்குப் பறிமுதல் கட்டளை பிறப்பித்தனர். பெசண்டு அம்மையாரின் உதவியால் 'தேசபக்தன்' பறி முதல் ஆவது தடை செய்யப்பட்டது. ஆயினும், அப்போதி ருந்த பெண்ட்லண்டு பிரபுவின் அரசாங்க ஊழல்களை இவர் நாடோறும் வெளியிட்டு வந்தார். இதற்கிடையில் அத்தா ளுக்கு எத்தனையோ இடுக்கண்கள் வந்துற்றன.

அவ்வேளையில் சேலத்திலிருந்து சென்னை போந்த **இராசகோபாலாசாரியா**ரும் **அனந்தாசாரியா**ரும் குறித்த காலத்தில் பத்திரிகை வெளி வரப் பெரிதும் முயன்றனர்; இரண்டாம் ஈட்டுக்காணம் கட்டிவிடுவது என்ற முடிவுக்கு அரசாங்கத்தார் விதித்த நிபந்தனைப்படி வந்தனர். அதன் படி இராசகோபாலாசாரியார் தாம் திரட்டி வந்த தொகையை அளித்தார். அன்னி பெசண்டு அம்மையாரும் ஒரு தொகையை அளித்தார். பொது மக்களும் ஒரு சிறு தொகையை அனுப்பினார்கள். இம்மூன்று தொகையும் சேர்ந்து இரண்டாம் ஈட்டுக்காணமாகக் கேட்கப்பட்ட ஐயா யிர ரூபாயாயின.

சக்கரவர்த்தி இராசகோபாலாசாரியாரும் சுந்தரனாரும் 1919-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் பத்தாம் நாள் மாகாண மாஜிஸ்திரேட்டு முன்னிலேயில் தோன்றி, இரண்டாம் ஈட்டுக் காணத் தொகையாகக் கேட்கப்பட்ட ஐயாயிர ரூபாயைச் செலுத்திப் பத்திரிகையைப் பதிப்பிக்கும் உரிமையை மீண்டும் பெற்றனர்.

அதே ஆண்டில் லார்டு பென்ட்லண்டுக்குப் பிறகு **லார்டு வில்லிங்டன்** கவர்னராய் வந்தார். அவர் எல்லாத் தேசீயத் தாள்களின் ஆசிரியரையும் கண்டு பேச விரும்பி அழைப்பு அனுப்பினர். அதன்படி 'தேசபக்தன்' சுந்தரனாரும், 'நியூ இண்டியா' அருண்டேலும், 'சுதேசமித்திரன்' அரங்கசாமி ஐயங்காரும் சென்றனர். வில்லிங்டன் பிரபு ஆசிரியருக்குச் சில நன்மொழிகள் புகன்றார். அவர் சுந்தரனாரைப் பார்த்து, அவரது எழுத்து மிக்க வேகமுடையதென்றும், மக்களைக் கொதித்தெழச் செய்யும் தன்மையுடையதென்றும் தாம் அறிவதாகக் கூறி வேகத்தைக் குறைத்துக்கொள்ளும்படி கூறினர். ஆனால், வில்லிங்டன் காலத்திலேதான் பஞ்சாப்புப் படுகொலை நடந்தது. அதற்குக் காரணகர்த்தனாய் இருந்து நடத்தியவன் **ஜெனரல் டையர்** என்பவனாவன். அப்படு கொலை நிகழ்ச்சி இந்தியத் தலைவர் பலரை வாட்டியது. சுந்தரனார் மனத்தை அது அரித்தது. அது காரணமாக ஆசிரியக் கட்டுரை (Editorial) எழுத மனஞ்செல்லாது, ஆசிரியக் கட்டுரையின்றியே 'தேசபக்தன்' ஒரு நாள் வெளியிடப்பட்டது.

அக்காலத்தில் அரசாங்கத்தாரால் நாடுகடத்தப்பட்டவருக்கும், தீவிர அரசியல் வாதிகளுக்கும் **புதுவை** புகலிடமாய்ப் பொலிந்தது. நாடு கடத்தப்பட்ட இந்தியத் தலைவர்

எத்தனையோ பேர் அதனிடம் அடைக்கலம் புகுந்தனர். அங்ஙனம் போந்தவருள் **அரவிந்தகோஷ், வ. வே. சு. ஐயர், சுப்பிரமணிய பாரதியார்** ஆகியவர் குறிப்பிடத்தக்கவராவர். அம்மூவருள் முன்னையவர் அங்கேயே ஓர் ஆசிரமம் கண்டு, யோகியாய்த் திகழ்ந்து அண்மையில், இயற்கை எய்தினர். பின்னையர் இருவருக்கும் சுந்தரனரால் ஆரம்பிக்கப்பட்ட கிளர்ச்சி காரணமாக 1920–ஆம் ஆண்டு, பிப்பிரவரி மாதம் பிரிட்டிஷ் எல்லைக்குள் நுழையும் உரிமை அரசாங்கத்தாரால் வழங்கப்பட்டது. அவ்வாறு சமயம் நேர்ந்த போதெல்லாம் மக்கள் உள்ளத்திலே கிளர்ச்சி வளர்க்கத் தூண்டுகோலாயிருந்தது 'தேசபக்தனி'ல் வெளிவந்த சுந்தரனரின் எழுத்தோவியமேயெனின், அது மிகையாகாது. அவ்விருவரையும் விடுவித்த பெருமையும் சுந்தரனருக்கே உரியதாகும்.

இதற்கிடையில் இவருக்கும் தேசபக்தன் நிருவாகத்தருக்கும் ஏற்பட்ட மனவேற்றுமை காரணமாக அதினின்று இவர் விலகிவிடுவதென்று தீர்மானித்தார்; அம்முடிவைத் தேசபக்தன் மூலம் நாடறியச் செய்தார். அச்செய்தியையறிந்த **காமத்துப்** பெரிதும் வருந்தினர். ஆசாரியார், நாயகர் போன்றோர் எத்துணை எடுத்துக் கூறியும் சுந்தரனர் தாம் செய்த முடிவினின்றும் அசைந்து கொடுக்க விரும்பினரல்லர். இவருக்குப் பின் வ. வே. சுப்பிரமணிய ஐயர் தேசபக்தன் ஆசிரியர் பதவியேற்று, அதை நடாத்தி வந்தார்.

இவர் 'தேசபக்தனை' விடுத்த பின் '**நவசக்தி**' என்றொரு வாரத்தாளைச் சொந்தமாகவே தொடங்கினர். அப்பத்திரிகைக்கு வேண்டிய பொருளனைத்தும் பொது மக்களும், தொழிலாளரும், நண்பரும் தந்துதவினர். குறிப்பா

கத் தொழிலாளர் உலகம் இவருக்கு ஐயாயிரம் ரூபாயை நன்கொடையாக அளித்தது. நண்பர் சிலர் ஈராயிரம் ரூபாயைத் திரட்டித் தந்துதவினர். அவ் விருதொகையைக் கொண்டு அச்சுக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டது. அதற்குச் '**சாது அச்சுக்கூடம்**' என்று பெயர் சூட்டப்பட்டது. 'நவசக்தி' அவ்வச்சகத்தினின்று வெளிப்போந்துலாவிற்று. முதல் தாள் **22-10-1920** ல் வெளி வந்தது. அன்று முதல் இருபது ஆண்டுகளை சுந்தரனாரது காப்பில் அத்தாள் வளர்ந்து வந்தது. அப்புது வெளியீட்டில் அரசியல் மணம் கமழும்; சமூக சீர்திருத்தம் தலை காட்டும்; பெண் நலம் பேசப்படும்; மொழிச் சிறப்பு ஓதப்படும், கலையாக்கம் வீறிட்டெழும்; சமதர்ம சன்மார்க்கமும் சமரசமும் தாண்டவமாடும். 'நவசக்தி' தமிழக மக்களைத் தனது எழிலால் மயங்குறச் செய்ததோடல்லாது, கடல் கடந்து சென்று அயலார் சீமைகளாகிய இலங்கை, பர்மா, சையாம், மலேயா, நேட்டால், இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், மொரிஷஸ் முதலிய நாடுகளில் வசித்து வந்த தமிழ் மக்களுடைய உள்ளங்களையும் கொள்ளை கொண்டது.

மதுரையில் கூடிய தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கூட்டத்தில் தினத்தாள் ஒன்று ஆரம்பிப்பதென்றும், அதற்கென்று பதினாயிரம் ரூபாய் தருவதென்றும் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேறியது. சிலரது யோசனையின் மேல் அத்தொகையை நவசக்திக்குக் கொடுத்து அதைத் தினத்தாளாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதற்குச் சுந்தரனார் இசைந்தாரல்லர். இவருடைய எதிர்ப்பும் மறுப்பும் இராசகோபாலாசாரியார், ஈ. வே. இராமசாமி நாயகர், டாக்டர் வரதராசுலு நாயுடு போன்றோரைச் சினமுறச் செய்தது. பின்பு அத்தொகை '**சுய ராஜ்யா**'வின் தலைவர்

டி. பிரகாசத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அத்தொகையின் உதவியைக்கொண்டு, 'சுயராஜ்யா'த் தமிழ்த் தினத்தாள் வெளி வந்து மக்களிடையே உலவலாயிற்று. ஆயினும், அது வெளி வந்த சின்னுட்களில் நின்றது.

ஆகவே ஈ. வெ. இராமசாமி நாயகர் போன்ருர் 'நவ சக்தியை' எப்படியேனும் தினத்தாளாக்கிவிட வேண்டும் என்று பெரிதும் முயன்றனர். ஒரு முறை நாயகர் சென்னை போந்த போது சுந்தரனுரைக் கண்டு தாம் ரூபாய் ஆயிரத்தைந்நூறு தருவதாயும், அதைக் கொண்டு நவசக்தியைத் தினத்தாளாக மாற்றவேண்டுமென்றும் வேண்டினர். சுந்தரனுர் அத்தொகையைக் கொண்டு தினத்தாளாக மாற்ற முடியாதென்றும், வேண்டுமானுல் வாரம் மும்முறையாக வெளியிடலாம் என்றும் கூறினுர். அதற்கு இசைந்த நாயகர் ஈரோடு போந்ததும் தாம் வாக்களித்த தொகையை அனுப்பினர். அதன் உதவியைக்கொண்டு சுந்தரனுர் 'நவ சக்தி'யை வாரம் மும்முறையாக வெளியிட்டுவந்தார். எனவே, 'நவசக்தி' வாரத்தாளும், வாரம் மும்முறைத் தாளும் என இரண்டு உருவங்களில் மக்களிடையே உலவி வரலாயிற்று. இப்போது '**கல்கி**' என்னும் புனைபெயரில் நாம் அறிந்துள்ள **ரா. கிருஷ்ணமூர்த்தி**, அக்காலை நவசக்தியின் ஆசிரியர் குழாத்துள் ஒருவராயிருந்து தொண்டாற்றினுர்.

'நவசக்தி மும்முறை' மக்களது உள்ளத்தைக் கவர்ந்து கொண்டு வந்த காலை நாயகர் **வைக்கம்** சென்று, அங்கு நிலவி வந்த தீண்டாமைப் பேயை ஒழிக்கச் சத்தியாக்கிரகம் செய்து சிறைப்பட்டார். அது சமயம் 'நவசக்தி-மும்முறை' புயலின்கண் சிக்கிய கலனுயிற்று. போதிய பொருளுதவியின்மையால், அதைத் தொடர்ந்து நடத்த முடியாமற்

போயிற்று. எனினும் 'நவசக்தி—மும்முறை' நின்றதேயன்றி, வாரத்தாள் மட்டும் நிற்க வில்லை.

சுந்தரனார் தமது காங்கிரஸ் தொண்டைப் பத்திரிகை அளவோடு நிறுத்திக்கொள்ளாது, உடல் உழைப்பாலும் செய்துவந்தார். இவர் ஊரறிய வெளிப்படையாகக் காங்கிரஸ் தொண்டாற்றத் தொடங்கியது 1917—ஆம் ஆண்டிலேயா கும். இவர் காங்கிரஸில் சேர்ந்த போது இப்போதிருப்பது போன்று மொழிவாரிக் காங்கிரஸ் இல்லை. சென்னைமாகாணக் காங்கிரஸ் என்றபேரால் தமிழ், ஆந்திர, கேரளமாகிய எல்லா மொழியினருக்கும் ஓரே அமைப்பாய் அது விளங்கி யது. தமிழ் நாடு, கேரளம், ஆந்திரம் என்னும் மொழிவாரிக் காங்கிரஸ் 1921' லேதான் பிரிக்கப்பட்டது. அவ்வாறு பிரிக் கப்பட்ட காங்கிரஸ் சரிவர அமையவில்லை. அன்னிபெசண்டு அம்மையார் காலத்தில் அவ்வமைப்புகள் ஒருவாறு சீரடைந் தன. இறுதியில் காந்தியடிகளது காலத்தில் அவ்வமைப் புகள் ஒழுங்குபடுத்தப்பட்டுச் சிறந்த முறையில் செயலாற்ற லாயின.

முதல் உலக யுத்தம் ஐரோப்பாவில் நடந்த போது பெசண்டு அம்மையார் இந்தியாவில் உரிமைப் போர் நடத்த அதுவே தக்க சமயமென்றெண்ணி அதற்கு அடிகோலினர். அவரது விருப்பப்படி உரிமைப்போர் மூண்டது. அதற்குத் **திலகர்** போன்ற பெருந்தலைவர்களது ஆதரவும் கிடைத்தது. அப்போர் வலுத்தது. அது காரணமாக அம்மையாரும், திலகரும், மற்றத் தலைவர் சிலரும் சிறையில் வைக்கப்பட் டனர். அம்மையார் தொடங்கிய போர் '**சுய ஆட்சிக்கிளர்ச்சி**' என்று மக்களால் வழங்கப்பட்டது. அச் 'சுய ஆட்சிக் கிளர்ச்சி' சட்ட வரம்புக்கு உட்பட்டே நடந்து வந்தது. அக்

கிளர்ச்சி நாட்டினரிடையே வலுவடைய அம்மையார் ஆற்றிய பேச்சுத்தொண்டும் எழுத்துப்பணியும் இந்திய மக்களிடையே இருந்த கருத்து வேற்றுமையை நீக்கி, ஒற்றுமையைத் தோற்றுவித்தன. அக்கிளர்ச்சிக்குத் திலகரது துணையும், காந்தியடிகளது ஒத்துழைப்பும், ஜின்னுவினது இணக்கமும் பேராக்கம் தந்ததோடன்றி அதை வலுவடையவும் செய்தன. ஆகவே, அம்மையார் அடிக்கடி சென்னையை விட்டு வெளியே சென்றபோதெல்லாம் அவர் பார்த்து வந்த வேலையனைத்தையும் சுந்தரனர் திறம்பட நடாத்தி வந்தார்.

இந்திய சட்டசபையில் ரௌலெட்டு மசோதா கொண்டு வரப்பட்டு நிறைவேறும் தறுவாயில் இருந்ததைச் செவிமடுத்த காந்தியடிகள் வீறிட்டெழுந்து, ‘அம்மசோதா சட்டமாதல் கூடாது; சட்டமானல் நாட்டில் கிளர்ச்சி எழும்’ என்ற கருத்துச் செறிந்த விண்ணப்பம் ஒன்றை அப்போதிருந்த இராசப் பிரதிநிதியாகிய லார்டு செம்ஸ்போர்டுக்குப் போக்கினர். காந்தியாரது எச்சரிக்கையைத் துச்சமாகவெண்ணி அம்மசோதாவைச் சட்டமாக்கும்படி சபையினருக்குப் பணித்தார் செம்ஸ்போர்டு. அவரது செயல் காந்தியாரைப் பெரிதும் வருத்தியது. செம்ஸ்போர்டுக்கு நல்லதொரு படிப்பினையைக் கற்பிக்க வேண்டிக் காந்தியடிகள் சத்தியாக்கிரகம் ஆரம்பிப்பதென்று முடிவு செய்து இந்தியா முழுமையும் சுற்றுப் பிரயாணம் செய்து சத்தியாக்கிரகத்துக்கு ஆக்கம் தேடுவதில் முனைந்தார். அவர் சென்னைக்கும் வந்தார்.

காந்தியடிகள் சென்னையை நோக்கி வந்துகொண்டிருந்ததையறிந்த சுந்தரனர், அரக்கோணம் சென்று, அடிகளைக் கண்டு வணங்கி, விஜயராகவாசாரியாரிடமிருந்து தாம் பெற்றுச் சென்றிருந்த முடங்கலைக் கொடுத்தார். அம்முடங்

கலின் உள்ளுறையை வாசித்தபின், அவர் சுந்தரனாரை நோக்கி 'எம்மொழியில் 'தேசபக்தன்' பத்திரிகை வெளியாகிறது?' என்று கேட்டார். அதற்குச் சுந்தரனார், "அது தமிழ் மொழியில் வெளியாகிறது," என்று கூறினார். அடுத்தபடியாக அடிகள், "நீர் பட்டதாரியா?" என்று கேட்டார். சுந்தரனார் "இல்லை," என்று கூறி, மேலும் தாம் மெற்றிக்குலேஷன் வரை படித்தவர் என்றும், வாடியா, பெசண்டு போன்றாருடைய சொற்பொழிவுகளைத் தொழிலாளருக்கு மொழி பெயர்க்கும் அளவுக்கே தமது ஆங்கில மொழியறிவு பயன்படுகிறதென்றும் கூறினார். காந்தியடிகள் சுந்தரனாரைப்பார்த்து, "நீர் எனது பேச்சை மொழி பெயர்ப்பீரோ?" என்று கேட்டார். "மொழிபெயர்க்க வல்லேன்," என்று சுந்தரனார் தயங்காமற்கூறினர். அதன்படி காந்தியடிகள் பேசிய தொழிலாளர் கூட்டத்தில் சுந்தரனாரே மொழி பெயர்த்தார். அது முதல் அடிகள், சுந்தரனாரைப் பார்க்க நேர்ந்த போதெல்லாம் அவரை 'மொழி பெயர்ப்பாளர்' என்றே வழங்கி வரலானார்.

ரௌலெட்டு மசோதா சட்டமாவதை எதிர்த்துச் சத்தியாக் கிரகப்போர் நடத்த அடிகளால் ஆங்காங்கு ஒவ்வொரு சபை காணப்பட்டது. அதன்படி அவர் சென்னையிலும் ஒரு சபையைக் கண்டார். அதில் தலைவர் பலர் சேர்ந்தனர். சுந்தரனாரும் சேர்ந்தார். அடிகள் சென்னையினின்று விலகிப் பம்பாய் சென்ற காலை, மசோதா சட்டமாகி இராசப் பிரதிநிதியின் இசைவையும் பெற்றுவிட்டதென்பதையறிந்து 1919-ஆம் ஆண்டு, ஏப்பிரல் மாதம், ஆறும் நாள், ஞாயிற்றுக்கிழமை **'அறப்போர்'** தொடங்கும் என்று இந்தியாவில் எல்லாப் பாகங்களுக்கும் சுற்றறிக்கை போக்கினார். அவரது அறிக்கையைக் கண்ட சென்னைத் தலைவர் அனைவரும் ஒன்று

கூடி ஆலோசித்து, அறப்போரைச் சிறந்த முறையில் நடத்து வதற்குரிய பணிகளைப் பகிர்ந்து செய்வதென்று முடிவு செய் தனர். அதன்படி காமத்து அவர்கட்கும், சுந்தரனாருக்கும் இராயப்பேட்டைப் பகுதியின் பொறுப்பு அளிக்கப்பட்டது. அன்றியும், தொழிலாளர் பொறுப்புச் சுந்தரனாருக்கும், தண்டபாணி பிள்ளைக்கும் வழங்கப்பட்டது. சோர்வும் சலிப்பும் இன்றிச் சுந்தரனார் தமக்கு அளிக்கப்பட்ட இரண்டு பொறுப்புகளையும் சிறப்புறச் செய்தார்.

காந்தியடிகளால் ஆரம்பிக்கப்பட்ட அறப்போரை அவர் கூறிய அறமுறையில் நடத்தாமல் வெறிச்செயலில் இறங் கியது வடநாடேயன்றித் தென்னாடன்று. வெறிச்செயலில் ஈடுபட்ட மாகாணங்களுள் முன்னணியில் நின்றது பஞ்சாப்பு மாகாணமாகும். அம்மாகாணத்தின் கவர்னரான **ஜெனரல் டையர்** சீறி எழுந்து, இராணுவச் சட்டம் பிறப்பித்தான்; தலைவர் பலரை நாடு கடத்தினான். தேசபத்தர் பல ரைத் தரையில் ஊர்ந்து போமாறு கட்டாயப் படுத்தினான்; கன்னியர் பலரின் கற்பைச் சூறையாடினான். அக்கொடியவ னுடைய செயல்கள், அம்மாகாண மக்கள் உயிரைத் துச்ச மென்றெண்ணி வீறிட்டெழச் செய்தன; மக்களை வெறியர் களாக்கின; அநீதி வழிச் செல்லத் தூண்டின. ஜெனரல் டையரின் கொடுமைகளைக் கண்டிக்க **ஜாலியன் வாலாப் பூங்கா** வில் மாந்தர் திரண்டனர். கூட்டம் நடந்த இடத்திற்குப் படையுடன் சென்று, அவனது மனம் குளிரும் வரை மக்களைப் பட்டுப்பட்டென்று சுட்டுச்சுட்டுக் குவித்தான் அப்பாதகன்.

அச்செய்தி இந்தியா முழுவதும் காட்டுத் தீப்போலக் கடுகிப் பரவியது. கூட்டங்கள் ஆயிரக் கணக்கில் கூடின. தாம்

கூறிய அறவழி விட்டு மக்கள் மறவழியிற்செல்வதைக் கண்ட அடிகள், சட்டமீறலை நிறுத்தும்படி பணித்தார். சட்டம் மீறுவது நிறுத்தப்பட்டது. எனினும், பாஞ்சாப்பில் நடந்த படுகொலையை மாந்தர் மறந்தாரல்லர். குறிப்பாகத் தென்னாட்டவரிடையே அது மிக்க பரபரப்பை உண்டாக்கியது. அப் படுகொலையையும் ஆட்சியாளரின் அக்கிரமத்தையும் கண்டிக்க அடிக்கடி சென்னையில் பல இடங்களில் கூட்டங்கள் கூடுவது வழக்கம். அவையனைத்திலும் சுந்தரனார் பங்கெடுத்துக் கொண்டு டையரின் அரக்கச் செயலை வன்மையாகக் கண்டித்துப் பல மணி நேரம் பேசுவார்; பத்திரிகையிலும் எழுதுவார்.

திலகர் இங்கிலாந்திலிருந்து இந்தியா மீண்டதும் அவரது நாட்டம் சென்னையின்மேல் விழுந்தது. அவர் சென்னையை நோக்கி வந்துகொண்டிருந்த போது, அவரைப் பிரம்பூர்ப் புகை வண்டி நிலையத்தில் சுந்தரனார் கண்டார். திலகர் மூன்று நாட்கள் சென்னையில் சுப்பராய காமத்து வீட்டில் தங்கினார். தங்கிய நாட்களில் அவருடனேயே இருந்து அவருக்கு வேண்டிய அனைத்தும் செய்யும் பொறுப்பைச் சுந்தரனார் ஏற்றுச் செம்மையாகச் செய்தார். திலகர் ஓய்வாய் இருந்த போதெல்லாம் சுந்தரனார் அவரை நாடிச் சென்று, சமயம், அரசியல் போன்ற விஷயங்களைப் பேசுவார். திலகரது அரசியல் அறிவும், சமயப் மற்றும், தேசபத்தியும், வாழ்க்கை எளிமையும், ஒழுக்கத் தூய்மையும் சுந்தரனாரைப் பெரிதும் கவர்ந்தன. அது முதல் திலகரும் சுந்தரனாரும் விண்ணும் மதியும் போலாயினர். சுந்தரனாருக்கு அரசியல் குருவாய் விளங்கி வந்தவர் திலகரே. அவர் 1920–ஆம் ஆண்டு, ஆகஷ்டு மாதம், ஓராம் நாள் அமிர்தசரசிலே இயற்கை எய்தினார். அச்செய்தியைக் கேட்டு நாடே கதறிற்று. அவரது

மரணம் சுந்தரனாரைப் பெரிதும் வாட்டி, இறுதியில் நோயுற்றுப் படுக்கையில் கிடக்கச் செய்தது.

பஞ்சாப்புப் படுகொலைக்கு நீதி வழங்காமையைக் கண்ட அடிகள், ஒத்துழையாமை இயக்கத்தை நடாத்தத் துணிந்தார். அறப்போர் மறப்போராய் மாறிவிட்டபடியால், அதை விடுத்து இதை மேற்கொண்டார். அடிகளார் ஒத்துழையாமை இயக்கத்தை எத்துணை பரவச் செய்ய முடியுமோ, அத்துணை பரவச் செய்யச் சுந்தரனார் இராப் பகல் என்றறியாது உழைத்தார். அவ்வியக்கத்தில் ஈடுபட்டவர், அதற்காக உழைத்தவர் அனைவரும் சிறையிலடைக்கப்பட்டனர். ஆனால், சுந்தரனாரை மட்டும் அவ்வாறு செய்யத் துணியவில்லை, அரசாங்கம். காந்தியடிகள் சிறையில் இருந்த போது அவ்வியக்கத்தில் சில மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று மோதிலால் நெஹ்ரூ போன்றோர் முயன்றனர். அடிகள் இல்லாக் காலத்து மாறுதல் எதுவும் செய்யக் கூடாது என்று இராசகோபாலாசாரியார் போன்றோர் வாதிட்டுத் தடுத்தனர். சுந்தரனாரும் மாறுதல் வேண்டாத கட்சியையே ஆதரித்துத் தமிழ் நாடெங்கும் பிரசாரம் செய்து வந்தார்.

1925–ஆம் ஆண்டு இறுதியில் காஞ்சீபுரத்தில் சுந்தரனாரது தலைமையில் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் மாநாடு இரண்டு நாட்கள் கூடியது. அதற்குப் பிரதிநிதிகள் நானூற்றுவரும், பொது மக்கள் பல்லாயிரவரும் வந்திருந்தனர். மாநாட்டின் இரண்டாம் நாளன்று பல தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. அவற்றுள் ஒன்று, பாட்னா முடிவை ஏற்றுக்கொள்வது என்பது. அது ஒவ்வொருவரும் கட்டாயம் கதர் ஆடையையே அணிய வேண்டும் என்பதும், சட்ட சபைத் தேர்தல்களைக் காங்கிரஸ் நடத்துவதும் ஆகும். அத்தீர்

மானத்தைச் சிலர் ஆதரித்தும் சிலர் பலமாக எதிர்த்தும் பேசினர். ஆதரித்துப் பேசியவருள் குறிக்கத் தக்கவர் சீனிவாச ஐயங்கார் டாக்டர் வரதராசுலு நாயுடு என்பவராவர். எதிர்த்துப் பேசியவருள் தலையாயவர் ஈ. வே. ராமசாமி நாயகர், எஸ். இராமநாதன் என்பவராவர். தலைமை வகித்த சுந்தரனார் இறுதியில் தீர்மானத்தின் முதல் பகுதியாகிய கட்டாயமாகக் கதர் அணிவதை வாக்குக்கு விட்டார். அத் தீர்மானம் பெருவாரியான வாக்குகளைப் பெற்று நிறைவேறியது.

பிறகு வேறு இரு தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. அதில் சட்டசபையில் வகுப்பு வாரிப்பிரதிநிதித்தும் வழங்கப்பட வேண்டும் என்பது ஒன்று. மற்ருென்று சட்டசபைத் தேர்தலை நடத்தத் தகுதிவாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுக்க, தேர்வுக்குழு ஒன்று அமைக்கவேண்டும் என்பது. அவ்விரண்டு தீர்மானத்துள் முன்னையதை ஈ. வே. இராமசாமி நாயக்கரும், எஸ். இராமநாதனும் கொண்டுவருவதாக ஏற்பாடாகி இருந்தது. அத்தீர்மானம் மகாநாட்டிற்கு வருவதற்கு முன்பே விஷயாலோசனைக் கூட்டத்தில் தோல்வியுற்றது. பின்னையது டாக்டர் பி. வரதராசலு நாயுடுவால் கொண்டுவரவிருந்தது. இவ்விரண்டு தீர்மானங்களும் இப்போதைக்கு ஒவ்வாதவையென்றும், ஒழுங்குமுறைக்கு மாருனவையென்றும் சுந்தரனுர் நிராகரித்தார். தலைவரது நிராகரிப்பு ஈ வே. இராமசாமி நாயக்கருக்கு எரியூட்டியது. சினந்து எழுந்து காரணம் கேட்டார். சுந்தரனுர் அவ்வாறு செய்வதற்கு ஏதுவாய் இருந்த காரணங்களை ஒன்றன்பின் ஒன்ருய் எடுத்துக்கூறி அமர்ந்தபோது நாயக்கரும், இராமநாதனும், சுரேந்திரநாத் ஆரியாவும், சக்கரைச் செட்டியாரும் கோபித்துக் கொண்டு

மாநாட்டைவிட்டு வெளியேறியதைக் கண்டார். அதுமுதல் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் காங்கிரஸ் தொடர்பினின்று தம்மை விடுவித்துக் கொண்டார்.

சுந்தரனார் அவ்விரண்டு தீர்மானங்களையும் நிராகரித்தது கூட்டத்திடையிலும், பத்திரிகையுலகத்திலும், பரபரப்பை உண்டுபண்ணியது. பத்திரிகைகள் இவரைப் பற்றிப் பலப் பட எழுதி அடங்கின. நாயகர் நடாத்திவந்த குடியரசுமட்டும் சில மாதங்கள்வரை வசைமொழி பொழிந்த வண்ணம் இருந்தது. சுந்தரனார், அவைகளுக்கு எவ்வித மறுப்பும் கூறாது, வாளாவிருந்தார். இறுதியில் 'குடியரசு'க்கு நல்ல பாடம் போதிக்க உன்னி 'எனது நிலை' என்ற தலைப்பீந்து 'நவசக்தி' யில் ஆசிரியக்கட்டுரை யொன்று வரைந்தார். அக்கட்டுரை வெளியான பின்னர்தான் குடியரசின் வசைமாரி நின்றது.

இவ்வாண்டில் சுந்தரனார் தலைமைத் தாங்கிய மாவட்ட மாநாடுகளும் தாலுக்கா மாநாடுகளும் அநேகம். ஒவ்வொரு மாநாட்டின்போதும் இவர் ஆற்றிய தலைமையுரை கேட்டவர் செவிக்கு இன்னமுதாயினித்தது.

காஞ்சீபுரம் மாநாடு நடந்த பிறகு ஒருமாதங் கழித்து கான்பூரில் **கவியரசி சரோஜினிதேவியார்** தலைமையில் அகில இந்திய காங்கிரஸ் மாநாடு கூடியது. அம்மாநாடு சட்ட சபைத் தேர்தலில் காங்கிரஸே நேரடியாகச் சேர்ந்து போட்டியிட வேண்டுமென்று தீர்மானித்தது. அத்தீர்மானம் காஞ்சி மாநாட்டிற்கு முன்பே அகில இந்திய காங்கிரஸ் நிறை வேற்றியிருப்பின் நாயக்கர் கொண்டுவந்த தீர்மானத்தை நிராகரிக்கும் பொறுப்புச் சுந்தரனாருக்கு ஏற்பட்டிராது, நாயக்கரும் காங்கிரஸை விட்டு விலக நேர்ந்திராது. கான்பூர் முடிவு அப்போதைக்குத் தமிழ் நாட்டுக் காங்கிரஸ்

தலைவராக இருந்த எஸ். சீனுவாச ஐயங்காருக்குப் புத்துணர்ச்சி ஊட்டியது. ஐயங்காரும், சுந்தரனாரும் சேர்ந்து தென்னாடு எங்கணும் போந்து தேர்தலில் நிற்றற்குத் தகுதி வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபட்டனர், இருவருமாய்த் தேர்ந்தெடுத்த பெயர்களை ஐயங்கார் சென்னையில் கூடிய தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கூட்டத்தில் படித்துக் காட்டினார். கூட்டத்தில் அங்கத்தினர் சிலரால் வேறு பெயர்களை கூறப்பட்டன. ஐயங்கார் அவைகளையும் மனத்திற்கொண்டு புதியதொரு பட்டியலைத் தயார் செய்து படித்தார். அப்பட்டியலில் காணப்பட்ட பெயர்களையெல்லாம் கூட்டத்தினர் ஒரு முகமாக ஏற்று இருவரது செயலையும் புகழ்ந்தனர்.

தேர்தலுக்குத் தக்க அறிஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட சில தினங்களுக்கெல்லாம் பிரசாரம் ஆரம்பித்தது. அப்பிரசாரத்தில் பெரும் பங்கு கொண்டவருள் சுந்தரனாரும் ஒருவர். காங்கிரஸ் சட்டசபையில் பெருவாரியான இடம் பெறல் வேண்டும்; அதன் மணம் நாடெங்கும் கமழ்தல் வேண்டும் என்ற ஒரு நோக்கத்துடன் நகர் நகராக கிராமங் கிராமமாகச் சென்று தேர்தல் பிரசாரம் செய்து வந்தார். இவரது பேச்சு நுழைந்த இடமெல்லாம் காங்கிரசுக்கு ஆக்கம் கிட்டியது. இவரதுபேச்சு ஜஸ்டிஸ்கட்சியின்கோட்டையாய்த் திகழ்ந்த செங்கற்பட்டுப் போன்ற இடங்களில் புகுந்து அக் கோட்டையைச்சரித்ததுமன்றிக் காங்கிரஸ் கட்சிக்கும் அங்கு ஆக்கம் தேடித்தந்தது. செங்கற்பட்டு மாவட்டத்திலேயே தம்மை எதிர்த்து நின்று வெற்றி காணுவார் எவருமிலர் என்று இறுமாந்திருந்த ஏ. இராமசாமி முதலியாரைச் சுந்தரனாரது தேர்தல் பிரசாரம் தோல்விகாணச் செய்தது என்றால் அவரது பேச்சாற்றலை என்னென்று புகழ்வது?

அது முதல் ஜஸ்டிஸ் கட்சியின் கோட்டையாகிய செங்கற்பட்டுக் காங்கிரஸ் கோட்டையாயிற்று. சுந்தரனார் பிரசாரத்தால் காங்கிரஸ் பெற்ற வெற்றி எடுத்தியம்பும் தரத்தன்று.

தேர்தல் பிரசாரம் நடந்து கொண்டிருந்த காலை மக்களிடையே வதந்தி ஒன்று புகுந்தது. அவ்வதந்தி சிறிது சிறிதாகப் பெருகி இறுதியில் பத்திரிகையில் வெளியாகும் அளவுக்கு முற்றியது: காங்கிரஸ் பெருவாரியான இடங்களைக் கைப்பற்றின் அது சட்டசபையில் எதிர்க்கட்சியாயிராமல் மந்திரி சபையை அமைக்கவே முயலும் என்பது அவ்வதந்தியின் உள்ளடக்கம். அதுகேட்ட சுந்தரனார் உண்மையை அறிவான் வேண்டி ஐயங்காரைக் கண்டு கேட்டார். அதற்கு ஐயங்கார், காங்கிரஸ், சுயேச்சைக்கட்சிக்கு ஆதரவு கொடுத்து, ஜஸ்டிஸ் கட்சி மந்திரிசபை அமைக்காதவாறு தடுக்கும் என்றும் சுயேச்சைக் கட்சியை மந்திரிசபை அமைக்கத் தூண்டுமென்றும் கூறினார். உண்மையை அறிந்த சுந்தரனார் பெரிதும் வருந்தினார். பிள்ளைப் பருவம் முதல் தமது மனச்சான்று வழியே நின்று பழகிய சுந்தரனார் அப்போதும் தமது மனச்சான்று வழி நிற்கத் துணிந்து காங்கிரஸில் வகித்து வந்த காரியக் கமிட்டி அங்கத்தினர் பதவியை விட்டு விலகத் துணிந்தார்; தமது இராஜிநாமாக் கடிதத்தை நேரில் ஐயங்காரிடம் கொடுத்துத் தாம் சாதாரண நான்கணா அங்கத்தினராகவே இருக்க விரும்புவதாகக் கூறினார். இவரது முடிவு ஐயங்காரைக் கலக்கியது. கடிதத்தைத்திருப்பிப் பெறுமாறு ஐயங்கார் வற்புறுத்தினார்; சுந்தரனார் தமது உறுதியினின்று அசையவில்லை.

இவர் காங்கிரஸ் செயற்குழு அங்கத்தினராக இல்லையெனினும் அதன் வளர்ச்சிக்கு வேண்டிய தொண்டாற்று

வது நிற்கவில்லை. 1920-ஆம் ஆண்டில் மீண்டும் புதுப்பிக்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கத்திலும், பிறகு நாட்டில் எழுந்த உப்புச் சத்தியாக்கிரகத்திலும் ஈடுபட்டு அரும்பணியாற்றினர். இடையில் ஐயங்கார் லாகூர் சென்று மீண்டார். அவரைக் காணச் சுந்தரனர் சென்றார். அப்போது ஐயங்கார், மோதிலால் நெஹ்ரூவும் மற்றவரும் தமக்கு இழைத்த தீங்கினையும், செய்த சூழ்ச்சிகளையும் எடுத்தியம்பினர். மேலும் தாம் காங்கிரஸ் பந்தத்தை அறுத்துக் கொண்டதாக விளம்பினர். ஐயங்காருக்கு வடநாட்டில் செய்யப்பட்ட தீங்கைக் கேட்ட சுந்தரனர் அதற்கெல்லாம் காரணம் செருக்குற்ற தலைவர்களின் போக்கே என்று விளம்பி, காங்கிரஸ் சபையில் சாதாரண உறுப்பினராகக் கூடத்தாம் இருக்க விரும்பவில்லை என்று கூறித் தம்மில்லம் போந்தார்; மறுநாளே தாம் கூறியவாறு செய்து முடித்தார்.

ஆனல் அவர் வாளாவிராமல் தமிழ்நாட்டுக் காங்கிரசுக்குள் குடிகொண்டிருந்த ஊழலும், எதேச்சாதிகாரமும் நீங்க வேண்டுமென விழைந்து, நிர்வாகத்தை மாற்றியமைக்கப் பிரசாரம் செய்தார். அவரது பிரசாரம் பதவிப் பற்றற்ற உண்மையான காங்கிரஸ்காரரைத் திரட்டியது. அவரது எண்ணத்திற்குத் தென்னடெங்கும் ஆதரவு கிடைத்தது. அத்தருணத்தில் சென்னைக் கடற்கரையில் இராசகோபாலாசாரியார் ஆற்றிய சொற்பொழிவு சுந்தரனரது மனத்தை மாற்றியது. இராசகோபாலாசாரியார், “திரு. வி. கலியாண சுந்தரனர் ஓர் உண்மை தேசபக்தர்; வெள்ளை உள்ளம் படைத்தவர்; குற்றத்துக்கு அஞ்சுபவர்; அவர் காங்கிரசைத் தூய்மைப் படுத்துவதற்காக மற்றொரு காங்கிரஸ் அமைப்பை உண்டாக்கவோ அன்றித் தற்போதிருக்கும் அமைப்பினின்று விலகவோ தேவையில்லை. அவர்

செய்ய எண்ணிய தொண்டை இப்போதிருக்கும் அமைப்புக்குள் இருந்துகொண்டே செய்யலாம். அதையே நானும், மற்றத் தலைவர்களும் விரும்புகின்றோம். எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி அவர் புது அமைப்புக் காணும் முயற்சியை விடுத்து எங்களுடன் சேர்ந்து, உழைக்க வேண்டுகின்றோம்," என்று பேசினார். அம் மொழிகள் சிறிது அணித்தே இருந்து செவிமடுத்த சுந்தரனாரது உள்ளத்துள் பதிந்து, அவர் புது அமைப்பு காணும் முயற்சியைக் கைவிடச் செய்தன.

சுந்தரனார் காங்கிரசிலிருந்து விலகிக்கொண்டாரெனினும், அவரது சேவையைத் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் எப்போதெல்லாம் விரும்பியதோ, அப்போதெல்லாம் வரையாது வழங்கி வந்தார். அவர் காங்கிரஸ் இயக்கத்தை ஒருபோதும் வைதாரல்லர். சுய நலத்துக்காக அதைப் பயன்படுத்திக் கொண்ட தனிப்பட்ட சிலரையே அவர் தாக்கி வந்தார். அதன் பெருமை குலைவதற்குக் காரணகர்த்தராய் இருந்தவரைக் கண்டித்தார். காங்கிரஸ் பிற்போக்காளர் வசம் சிக்கிக்கொள்ளக்கூடாது என்பது அவர் ஆவல். அதையே நாட்டவரிடையேயும் பிரசாரஞ் செய்தார். அதன் நிருவாகத்தார் எப்போதெல்லாம் என்னென்ன தவறு செய்தார்களோ, அத்தவறை யெல்லாம் அவ்வப்போது எடுத்துக் காட்டினார். அவரதுவாழ்நாளில் பெரும்பகுதி அரசியலிலும் தொழிலாளர் இயக்கத்திலுமே கழிந்ததாகலின், அவரது தொழிலாளர் தொண்டினையும் சிறிது நோக்குவோமாக.

## 7. சுந்தரனாரும் தொழிலாளரும்

சுந்தரனார் ஸ்பென்சர் கம்பெனியில் ஊழியம் செய்து வந்தபோதே தொழிலாளர் நலத்துக்குத் தாமும் பாடு

படவேண்டும் என்ற எண்ணமும் உணர்ச்சியும் அவருக்கு உண்டு. அதற்குக் காரணம் அவர் ஸ்பென்சர் கம்பெனியில் கணக்கர் வேலை செய்துகொண்டிருந்தபோது, இங்கிலாந்து தேசத்துக் காமன்ஸ் சபை அங்கத்தினரும் தொழிற் கட்சித் தலைவருள் ஒருவருமாகிய **கீர்ஹார்டி** என்பார் 1908–ஆம் ஆண்டில் நம் நாட்டில் நிகழ்ந்த சுதேச இயக்கக் கிளர்ச்சியை நேரிற்காண இந்தியாவுக்கு வந்தவர் சென்னையில் தங்கி இருந்தார். அவர் தமக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்கு ஸ்பென்சர் கம்பெனிக்கு வருவது வழக்கம். அவரது தோற்றமும், அவரைப் பற்றிப் பத்திரிகையில் எழுதப்பட்ட கட்டுரைகளும் சுந்தரனாரைப் பெரிதும் கவர்ந்தன. கீர்ஹார்டியைக் கண்டது முதல் சுந்தரனார் வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் மேல்நாட்டுத் தொழிலாளர் இயக்க வரலாற்றைப் படித்து வந்தார். அதனால் அவரது உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சி தோன்றியது.

அவர் வெஸ்லிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராய் இருந்தபோது, சென்னை சூளையைச் சேர்ந்த பட்டாளத்தில் சமயத் தொண்டாற்றிவந்த **'வேங்கடேச குணாமிர்த வர்ஷனி'** என்ற கழகத்தின் கூட்டமொன்றில் பேச நேர்ந்தது. அக்கூட்டத்தைக் கூட்டியவர் மேற்கூறிய சபையின் செயலாளராய ஜி. செல்வபதி செட்டியாரென்பவராவர். திரு. வி. க. அக்கூட்டத்தில் அகத்தைக் கவரும் அழகிய பேருரை நிகழ்த்தினர். அக்கூட்டத்திற்கு வந்திருந்தவருள் பெரும்பாலார் தொழிலாளரேயாவர். அவரது சொல்வன்மையால் கவரப்பட்ட அத்தொழிலாளரும், கழக நிருவாகத்தாரும் சுந்தரனாரைப் பன்முறை அங்கு அழைத்துப் பேசுமாறு செய்தனர். அதனால் அவர் தொழிலாளரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பும் கிடைக்கப் பெற்றார். சுந்தரனார் அங்குப்

போந்த போதெல்லாம் தொழிலாளர் தங்களுக்குற்ற குறை பாடுகளை அவர்பால் இயம்பி வந்தனர்.

அங்நிலையில்தான் சுந்தரனாரது நாட்டுப்பற்று, கல்லூரித் தமிழ்ப்பணியை விடுத்து அரசியல் வாழ்க்கையை மேற் கொள்ளச் செய்தது. அவர் 'தேச பக்தன்' ஆசிரியராய்த் தொண்டாற்றிவந்தகாலை ஐரோப்பிய யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதன் காரணமாக ஐரோப்பாவினின் றும் ருஷ்யாவினின்றும் வெளிவந்த செய்திகள் சுந்தரனு ரைப் பெரிதும் கவர்ந்தன. மேலும் 'சென்னை மாகாணச் சங்க'த்தின் தலைமைப் பீடத்தில் இருந்த திவான்பகதூர் கேசவப் பிள்ளையின் தொடர்பும், அவர் 'இந்தியன் பேட் ரியட்'டில் எழுதிவந்த தொழிலாளரைப் பற்றிய கட்டுரை களும் சுந்தரனார் உள்ளத்தில் தொழிலாளர் தொண்டென் னும் வித்தை நன்கு ஊன்றின.

எனவே சுந்தரனாரது மனம் தொழிலாளர்க்கெனச் சங்கமொன்று காண்டலில் ஈடுபட்டது. அதன்படி 1918-ஆம் ஆண்டில் கூட்டம் ஒன்றில் நம் சுந்தரனார் மேலைநாட் டில் தொழிலாளர் இயக்கம் தோன்றி வளர்ந்த வரலாற்றை யும், அதனால் மக்களுக்கு ஏற்படும் நன்மைகளையும், தொழி லாளர் சங்கம் காணவேண்டியதன் அவசியத்தையும் நன்கு எடுத்தியம்பினார்.

அக்கூட்டம் நடந்த சில திங்களில் **'சென்னைத் தொழி லாளர் சங்கம்'** நிறுவப்பட்டது. **திரு. வாடியா** அச் சங்கத்தின் தலைமைப் பதவியை ஏற்றார். சுந்தரனார் துணைத்தலைவருள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அச் சங்கம் காணப் பட்ட நாள் முதல், சுந்தரனார் அதற்கு ஆக்கந் தேடலானார். அவரது பேச்சும், மற்றத் தலைவர்களுடைய பேச்சுச்

ளும் நாடெங்கும் சங்கங்கள் காணச் செய்தன. அவ்வாறு எழுந்த சங்கங்களுள் **தென்னிந்திய இருப்புப் பாதைத் தொழிலாளர் சங்கம், போலிஸ் சங்கம், எம். அண்டு எஸ். எம். தொழிலாளர் சங்கம்** என்பவை சிறப்பித்துக் கூறத் தக்கனவாம்.

சுந்தரனாரால் எழுப்பப்பெற்ற தொழிற்கிளர்ச்சி, காட்டுத் தீயைப் போல நாடெங்கும் பரவியது. 'சென்னைத் தொழிலாளர் சங்கம்' இந்தியா முழுமைக்கும் தாய்ச் சங்கமாகியது. அதுவே இந்தியாவில் ஏற்பட்ட முதல் தொழிற் சங்கமாகும். அச்சங்கம் தோன்றிய சில தினங்களில் எழுத்தினாலும் பேச்சினாலும் அதற்கு எதிர்ப்புக்கள் தோன்றின. அவற்றிற்கெல்லாம் சுந்தரனார் 'தேசபக்தன்' வாயிலாக மறுப்புக் கூறிவந்தார்.

அச்சங்கம் நிறுவப்பட்ட காலம் முதல் நிகழ்ந்த கதவடைப்புக்களும், வேலை நிறுத்தங்களும், துப்பாக்கிப் பிரயோகங்களும் எண்ணில.

திரு. வாடியா அவர்கள் ஐரோப்பாவுக்குப் போக வேண்டியிருந்தமையால், **கவியரசி சரோசனிநாயுடு**வின் சகோதரியாருள் ஒருவராகிய **திருவாட்டி மிருணளினி சட்டோபாத்தியாயா**வைத் தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபடுத்திவிட்டுச் சென்றார். அவ்வம்மையார் மத்திய சங்கம் என்றோர் அமைப்பைக் காணவேண்டி அரும்பாடுபட்டார். சுந்தரனார் அதைக் குறித்து வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் பேசியும் எழுதியும் வந்தார்.

1920–ஆம் ஆண்டில் நடந்த மாகாணத் தொழிலாளர் முதல் மாநாட்டின்போது, சுந்தரனார் மத்திய சங்கத்தின் அவசியத்தை எடுத்துக் கூறி, அதை உடனடியாக நிறுவுதல்

வேண்டும் என்று வலியுறுத்தினர். அதன் பயனாக அதே ஆண்டில் **'மத்திய சங்கம்'** காணப்பட்டது. அதன் தலைமைப் பீடத்தைச் சுந்தரனார் ஏற்றுச் சுமார் ஒன்றரையாண்டு காலம் திறம்பட நடத்தி வந்தார். அக் காலத்தில் இருந்த எல்லாச் சங்கங்களும் மத்திய சங்கத்தில் அங்கம் வகித்தன. அவை செய்து வந்த செயல்கள் அப்போது சென்னை கவர்னராய் இருந்த **வில்லிங்டன் பிரபு**வைச் சினமுறச் செய்தன. அவரது சினம் தொழிலாளர் சட்டமொன்று இயற்றுமாறு தூண்டியது. அப்போது தொழிலாளர் செய்த கிளர்ச்சியின் பயனாக அச்சட்டம் நிறைவேறுமற்போயிற்று. அதற்கிடையில் வாடியா மீண்டும் இந்தியாவுக்கு வந்தார். சுந்தரனார் சங்கத்தின் தலைமைப் பதவியை வாடியாவை ஏற்கச் செய்தார்.

தொழிலியக்கத்தின் வைரிகள் சென்னைத்தொழிலாளர் சங்கத்தை எப்படியேனும் ஒழித்துவிட முனைந்தார்கள். அத்தறுவாயில் 'பக்கிங்ஹாம் கர்னாடிக் மில்'களில் நிருவாகக் குழப்பங்கள் சில தோன்றின. ஆகவே தொழிலாளர் கிளர்ச்சி செய்தனர். அதனால் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இளைஞர் இருவர் குண்டுக்கு இரையாயினர். சிலர் காயமடைந்தனர். அந்நிலையில் வாடியாவும் சுந்தரனாரும் செய்த தொண்டும் முயற்சியும் வேலை நிறுத்தத்தை நிறுத்தின.

வாடியா மீண்டும் அயல் நாடு செல்ல நேர்ந்தமையால், சுந்தரனார் மீண்டும் தலைமைப் பதவியை ஏற்றார். அப்போது இந்திய அரசாங்கம் தொழிற் சங்கம் பற்றிய சட்டமொன்றை இயற்றி அதை நடை முறைக்குக் கொண்டுவந்தது.

சுந்தரனார் ஒரு சமயம் திருப்பாதிரிப்புலியூர் சென்றிருந்தபோது, 'கர்னூடிக் மில்லில் குழப்பம்' என்னும் செய்தியைப் பத்திரிகை வாயிலாக அறிந்து, சென்னைபோந்து, குழப்பத்திற்குக் காரணங்களை அறிந்து, சங்கத்தின் அனுமதியின்றி வேலை நிறுத்தம் செய்தது தவறு என்பதைத் தொழிலாளர்க்கு எடுத்துக் கூறி, அவர்களை வேலைக்குப் போமாறு செய்தார். "அவ் வேலை நிறுத்தம் காரணமாக எல்லாத் தொழிலாளர்களுடைய 'போனசும்' பறிமுதல் செய்யப்பட்டது," என்று மில் அதிபர் கூறினார். அதைச் சுந்தரனாரும், தொழிலாளரும் எதிர்த்தனர். அரசாங்கத்தின் உதவியையும், தொழில் இலாகா அதிகாரியின் உதவியையும் நாடினர். அவர்கள் அது விஷயத்தில் தலையிட மறுத்ததன் பயனாக மற்றுமொரு வேலைநிறுத்தம் தோன்றியது. அவ் வேலைநிறுத்தப் போராட்டம் ஆறு திங்கள் வரை நடைபெற்றது. அப் போராட்டத்தைக் குலைக்க எண்ணங்கொண்ட அதிகாரிகள், கைக்கூலிகள் சிலரை ஏவி, மூர்க்கச் செயலில் இறங்கச் செய்தார்கள்.

ஆயினும் தொழிலாளர் போராட்டம் நாளுக்கு நாள் வலுத்துக்கொண்டே வந்தது. அதை அறிந்த வில்லிங்டன் பிரபு தம்மை வந்து காணுமாறு தொழிலியக்கத் தலைவர் ஐவருக்கு அழைப்பு அனுப்பினர். அதன்படி அவர்கள் மறுநாள் மாலை கவர்னர் மாளிகைக்குச் சென்றார்கள்.

அவர்களை நோக்கிக் கவர்னர், "தொழிலாளர் வேலைநிறுத்தத்தால் சென்னையில் கத்திக் குத்தும், வெடி வீச்சும், தீவைப்பும் நடந்து வருகின்றன. அவற்றுக்கெல்லாம் மூலகர்த்தர்கள் நீங்கள் என்று அறிகிறேன். நாட்டின் அமைதியைக் காக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது,"

என்று கூறினர். அப்போது அவ்வைவருள் ஒருவர், "யாம் காரணம் அல்லேம்" என்றார். மற்றொருவர், "நீதி மன்றம் இருக்கிறதே," என்றார். இன்னொருவர், "விசாரணை வேண்டும்" என்றார். வேறொருவர், "தொழிலாளர் சங்கத்திற்கும் எனக்கும் தொடர்பே இல்லை," என்றார். சுந்தரனார் மட்டும், "எல்லாருக்கும் நியாயத் தீர்ப்பு நாள் ஒன்று இருக்கின்றது," என்று கூறினர். அக்கூற்று வில்லிங்டன் பிரபுவை ஒரு கணம் சிந்திக்கச் செய்தது. பிறகு அவர் "யான் உங்களை எச்சரிக்கை செய்யவே அழைத்தேன். இதுவரை நடைபெற்ற கோரச் செயல்கள் இனியும் நிகழுமாயின், நீவிர் நாடு கடத்தப்படுவீர்," என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டார்.

அன்றிரவு **டாக்டர் நடேச முதலியார்** சுந்தரனார் இல்லம் சென்று, "வில்லிங்டன் பிரபு உங்களை நாடு கடத்தவே நீலகிரியினின்றும் சென்னைக்கு வந்தார். அதை அறிந்த சர். தியாகராய செட்டியாரும், சென்னை முதல் அமைச்சர் பனகல் அரசரும் உங்களை நாடு கடத்தும் செயலால் ஜஸ்டிஸ் கட்சிக்குத் திங்கு விளையும் என்றும், நாடு கடத்தினல் தாங்கள் பதவியினின்று விலகும் அவசியம் நேரிடும் என்றும் கூறித் தடுத்தனர்," என்று கூறிச் சென்றார்.

ஆயினும் கலகம் நின்ற பாடில்லை. அக் கலகத்தின் காரணமாகத் தொழிலாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. அப்போது உயிர் நீத்தவர் எழுவர். காயமுற்றவர் நூற்றுக்கணக்கானவர். மேலும் இரண்டு நாட்கள் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. அதனல் இருவர் மாண்டனர். பலர் காயமடைந்தனர். அத்தருணத்தில் சர். தியாக

ராய செட்டியார் தலைமையிட்டுத் தொழிலாளரை ஒன்று திரட்டி, இராசதந்திரம் பொதிந்த ஒரு சொற்பொழிவாற்றினார். அதன் பயனாகத் தொழிலாளர் வேலைக்குச் சென்றனர். அவ்வாறாக அவ்வேலை நிறுத்தம் முடிவுற்றது.

பின்னர், 1923–ஆம் ஆண்டில் சுந்தரனார், தொழிற் சங்கத் தலைமைப் பதவியை **நடேச நாயக**ருக்குத் தந்து விலகினார். 1935–ஆம் ஆண்டு வரை சங்கம் நாயகரையும், **ஜி. எஸ். அருண்டேலை**யும், **பி. சிவரா**வையும் தலைவராக ஏற்றுப் பணியாற்றி வந்தது. மீண்டும் தொழிலாளர் பலரின் விருப்பத்திற்கிணங்கி, 1935–ஆம் ஆண்டில் சங்கத்தின் தலைமைப் பதவியைச் சுந்தரனார் ஏற்றார்.

அவர் தலைமைப்பதவி ஏற்று நான்காண்டுகள் கழித்துச் **'சென்னைச் சூளை மில்'** என்னும் மற்றொரு மில்லில் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. அதையொட்டி அதன் முதலாளிகள் அந்த மில்லையே மூடிவிட்டார்கள்.

1942–ஆம் ஆண்டு மீண்டுமோர் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. அதன் பயனாகப் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதில் ஒன்பதின்மர் மாண்டனர். பலர் காயமுற்றனர். அதே ஆண்டு ஆகஷ்டு மாதம் மில்லுக்குள்ளேயே வேலை நிறுத்தம் நடைபெற்றது. இரண்டு மில்களும் மூடப்பட்டன. தலைவரின் முயற்சியினால் தொழிலாளர் மீண்டும் வேலைக்குச் சென்றனர்.

14–4–1943–ஆம் ஆண்டில் சென்னைத் தொழிலாளர் சங்கத்தின் **வெள்ளி விழா** கொண்டாடப்பட்டது. அவ்விழா நடந்து ஒரு திங்கள் கழித்துச் சுந்தரனார் தம் தலைமைப் பதவியினின்றும் விலகினார். சுந்தரனார் தொழிலியக்கத் தொண்டினின்று முற்றிலும் விலக எண்ணினார். எனினும்

தொழிலாளர் அவரது தொடர்பை இழக்க விரும்பாமல் அவர் இறை எய்தியவரை அவரைச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக இருக்கச் செய்து தங்கள் நன்றியைத் தெரிவித்தனர். அன்றியும் அவர் 17–9–53–இல் உயிர் நீத்த ஞான்று அவர் உடலத்தைத் தங்கள் சங்கத்துக்குக் கொண்டுசென்று, ஆண்டிருந்து ஊர்வலமாக இடுகாட்டுக்கு எடுத்துச் சென்று, அன்று முழுமையும் சொரிந்த பெரு மழையையும் பொருட்படுத்தாமல் இறுதிவரை நின்று, ஈமச்சடங்குகளை முடித்துத் தங்கள் பிரிவாற்றுப் பெருந்துயரத்தையும், தங்கள் அளப்பரும் நன்றியையும் வெளிப்படுத்தி நின்ற நிலை கண்டவர் கண்கள் நீருகுப்பச் செய்தது.

பக்கிங்ஹாம் கர்னட்டிக் மில் தொழிலாளரின் பொருளாதார உயர்வுப் போராட்டம் ஒன்று 1947–ஆம் ஆண்டில் **திரு. அந்தோணிப் பிள்ளை**யின் தலைமையில் மூண்டது. அதன் காரணமாகச் சங்கத் தலைவர் அந்தோணிப் பிள்ளை நாடு கடத்தப்பட்டார். தொழிற் சங்க முக்கியஸ்தர் பலர் சிறைபிடிக்கப்பட்டனர். அத்தறுவாயில் அப்போராட்டத்தை நடத்தச் சுந்தரனாருக்கு எல்லா உரிமைகளும் வழங்கப்பட்டன. அவ்வேளையில் அவர் தொழிலாளருக்கு உணர்ச்சியூட்டி, அவர்களிடையே கட்டுப்பாட்டை வளர்த்து, மிகவும் அமைதியான முறையில் அப்போராட்டத்தை நடத்தி வந்தார். அப்போது அவரைச் சிறையில் வைக்க அரசாங்கம் துணியாமல், அவர் இல்லத்தைப் போலீஸ் கண்காணிப்பில் வைத்து அவரது இல்லத்தையே சிறைக்கூடமாக்கியது.

அப்போராட்டம் **நூற்று மூன்று** நாட்கள் நடைபெற்றது. சுந்தரனார் அக்காலத்தில் செய்த தொண்டு இளங்காளைகளும்

வெட்கமுறச் செய்தது. அக்காலே அவர் அறுபது ஆண்டைக் கடந்திருந்தாரெனினும், இளைஞரைப் போன்றே எழுச்சி கொண்டு பணியாற்றினர். சுந்தரனர் 1922–ஆம் ஆண்டில் முதலாளிகளால் காணப்பட்ட 'வெல்பேர்' (Welfare) அமைப்பை ஒழித்துக் கட்டும் வரையில் தலேப்பாகை அணிவதில்லை என்ற சூளுரையை ஏற்றிருந்தார். அந்தோணிப் பிள்ளையின் இடையரு உழைப்பாலும், உலேவிலா ஊக்கத்தாலும் அவ் 'வெல்பேர்' அமைப்பு ஒழிக்கப்பட்டுச் சுந்தரனருக்கு மீண்டும் தலேப்பாகை அணிவிக்கப் பட்டது.

சுந்தரனரின் வாழ் நாட்களில் பெரும் பகுதி அரசியலிலும் தொழிலியக்கத் தொண்டிலும் கழிந்தனவெனினும், எஞ்சிய சிறு பொழுதில் அவர் மாதர் தொண்டு, சீர்திருத்தம், சமயத்தொண்டு முதலிய தொண்டுகளேச் செய்துவரலானர். அவர் செய்த மற்றத் தொண்டுகளிற் சிலவற்றை நோக்குவோம்:

## 8. பிற தொண்டுகள்

சுந்தரனர் ஆற்றிவந்த தொண்டுகள் பலவாம். அவற்றுள் சமயத் தொண்டும் சன்மார்க்கத் தொண்டும் குறிப்பிடத்தக்கவை. சுந்தரனர் சைவக் குடியில் பிறந்தவராகையால் சைவ சமயத்தின் மீது அளவிலாப் பற்றுக்கொண்டிருந்தார். அவர் மாணுக்கராய் இருந்த போதே சமயத் தொண்டு ஆற்றிவரலானர். யாழ்ப்பாணம் கதிரைவேற் பிள்ளே, ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர், அன்னி பெசன்டு அம்மையார், பூவை கலியாணசுந்தர முதலியார், ஞானியாரடிகள், ஆதிமூல முதலியார் ஆகியவர் தொடர்பு சுந்தரனரைச் சைவத்தில் ஆழ்ந்து திளேக்கச் செய்தது. அவர் ஒப்புமை கூறமுடியாத அளவுக்குச் சிறந்த சைவராய் விளங்கினரெனினும், சைவம்

கிறித்துவம் இஸ்லாம் ஜைநம் பௌத்தம் முதலிய பிற சமயங்களை மற்றச் சைவர்கள் போல வெறுத்தும் இழித்தும் பேசாமல், மதித்தும் போற்றியும் பேசி வந்தார். ஒவ்வொரு சமயமும் வெவ்வேறு புற வழக்கங்கள் கொண்டதெனினும், அவை எல்லாம் ஒரே நோக்கத்திற்காகத் தோன்றியவை என்பதை அவர் மக்களுக்குப் போதித்து வந்தார். அவர் எல்லா மத நூல்களையும் படித்தார். அவைகளிலிருந்து கொள்ளத் தகுந்த எல்லாவற்றையும் கொண்டார்; தள்ளத் தக்கவற்றைத் தள்ளினர்.

சுந்தரனர் இளைஞராய் இருந்தபோதே சமயப்பற்றுடையவராய் இருந்தமையால், அவர் வசித்த இராயப்பேட்டையில் சைவ சமயத்தை வளர்க்கச் சபையொன்று காண்டல் வேண்டுமென்று விரும்பினர். அதன்படி **பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை**யைக் கண்டார். பல ஆண்டு காலம் அதில் அங்கம் வகித்துத் தமிழ் நூல்கள் பலவற்றை மக்களுக்கு எடுத்தோதினர். அன்றியும் அவர் **திருவல்லிக்கேணி சிவனடியார் திருக்கூட்டம்** என்னும் சைவ சபைக்கும், **புதுப்பாக்கம் சிவ சுப்பிரமணிய பக்தஜன சபை**க்கும் தலைவராய் இருந்து, சைவ சமயத்தொண்டாற்றினர். பெரிய புராணப் பிரசங்கம், திருமுருகாற்றுப்படை, கந்தரநுபூதி பாராயணம் ஆகியவற்றைத் தொடர்ந்து நடத்திவந்தார். சைவ சித்தாந்த மகா சமாஜம் போன்ற சமய சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டு சைவ சமயத்தின் சிறப்பைப் பற்றிப் பேருரைகள் நிகழ்த்துவது அவர் வழக்கம். சமயம் நேர்ந்துழி சமய வாதமும் செய்துவந்தார். எல்லாச் சமய நூல்களையும் ஆராய்வது அவருக்கு இனியபொழுது போக்காய் இருந்தது. அவர் சமய மாநாடுகட்குத் தலைமை வகிப்பதும் சொற்பொழிவாற்றுவதும் தமது கடமையாய் மதித்தார். சைவத்தை

இழித்துப் பேசியவர்களை வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் வாதுக்கழைத்துத் தாம் போற்றிவந்த சைவமே சிறந்தது என்பதை வாதாடி நிலை நாட்டி மகிழ்ந்து வந்தார். அவர் செய்த சமயத் தொண்டை மட்டும் எழுதினால் ஒரு தனி நூலாகும்.

அடுத்தபடி சுந்தரனார் மாதர் உலகத்துக்கு ஆற்றிய தொண்டைச் சிறிது கவனிப்போம்: சுந்தரனார் தம் இல்லக் கிழத்தியாராகிய கமலாம்பிகையம்மையாரையும் இனிய புதல்வர் இருவரையும் இழந்த பிறகு பெண்ணின் பெருமையை அனைவர்க்கும் எடுத்துக் காட்டவேண்டுமென்ற உறுதி கொண்டார்.

இராயப்பேட்டைச் சகோதர சங்கத்தினரால் நடாத்தப் பெற்று வந்த பள்ளிக்கூடங்கள் பலவற்றுள் ஒன்றாகிய 'பவானி பாலிகா பாடசாலை' சுந்தரனாரது மேற்பார்வையில் நடைபெற்று வந்தது. சுந்தரனார் அப்பள்ளியை நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது முதல், அப்பள்ளி சென்னைக்கே ஒரு எடுத்துக்காட்டாய் விளங்க வேண்டுமென்று கருதி அரும்பாடு பட்டார். அப்பள்ளியை நாட்டுமுறையில் நடாத்தினார். பிள்ளைகளிடத்தில் தேசபத்தியும், தெய்வ பத்தியும் திகழச் செய்வதே பள்ளியின் குறிக்கோளாய் அமையவேண்டுமென்பது அவர் ஆவல்.

சுந்தரனாரின் தூண்டுதலால் **மார்த்தா** என்னும் அம்மையாரால் இராயப்பேட்டையில் **மாதர் சங்கம்** என்ற ஒரு கழகம் காணப்பட்டது. அதில் அவ்வப்பொழுது சொற்பொழிவு நடைபெறும். அச்சங்கத்தார் அடிக்கடி சுந்தரனாரை அழைத்துப் பேசச் சொல்வது வழக்கம். அவருக்குச் சமயம் நேர்ந்த பொழுதெல்லாம் மாதருக்கு அறிவு

கொளுத்துவதையே தமது கடமையாய்க் கொண்டார். ஒரு முறை சுந்தரனர் '**கிறிஸ்துவும் பெண்மையும்**' என்னும் பொருளைப்பற்றிப் பேசிய போது, கிறிஸ்து பெருமான் பெண்மை நிலை எய்தியவர் என்று கூறினர். அதைக் கேட்ட பாதிரிமாருள் ஒருவர், சுந்தரனர் கூறியதைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் மறுத்துப் பேசினர். பாதிரியார் மறுத்துக் கூறியதற்கு மறுப்புக் கூறுமாறு மாதர் சங்கத்தார் மீண்டும் சுந்தரனரை வேண்டினர். சங்கத்தாரது வேண்டுதலை ஏற்று, பெண்மை என்பது குணத்தைக் குறிப்பதென்றும் பருமை என்பது வடிவத்தைக் குறிப்பதென்றும், பெண்மை என்பது வடிவத்தைக் குறிப்பது அன்று என்றும் தமது பேச்சுக்கு விளக்கம் கூறினர். கூட்டத்தில் ஈண்டியிருந்த மக்களனைவரும் சுந்தரனரது விளக்கத்தைக் கேட்டு மகிழ்வெய்தினர். மறுத்துக் கூறிய பாதிரியார் மட்டும் அதை ஏற்றாரல்லர்.

ஜஸ்டிஸ் சதாசிவ ஐயரும் சுந்தரனரும் சேர்ந்து கைம் பெண்கள் நலத்துக்கெனக் கழகமொன்று காண எண்ணி முயன்றனர். அவர்களது முயற்சியால் ஒரு சிறு அமைப்பும் காணப்பட்டது. அவ்வமைப்பின் வளர்ச்சிக்கென்று சுந்தரனர் அரும்பாடுபட்டார். பின்பு கணிகையர் நலம் கருதித் தேசபக்தனில் ஆசிரியக் கட்டுரைகள் பல எழுதி, '**நாக பாசத்தார் சங்கம்**' என்ற கணிகையர் கழகம் ஒன்று தோன்றுமாறு செய்தார். அதற்குத் தம்மாலியன்ற உதவிகளனைத்தையும் செய்து வந்தார். அக்கழகம் பின்னர் '**இசை வேளாளர் சங்கம்**' என்ற பெயரால் அழைக்கப்பட்டது. அச்சங்கத்திற்குத் தூண் போன்றிருந்து பெரும்பாடு பட்டவர் வேலூர் **இராமாமிர்தம் அம்மையார்** என்பவராவர். அவ்வம்மையார் முயற்சியால் 1925-ஆம் ஆண்டில் தஞ்சை

மாவட்டம், கூறை நாட்டில் மாநாடு ஒன்று நடைபெற்றது. அவ்வம்மையாரின் முயற்சிக்குத் துணை நின்றவர் பலர். அவருள் குறிப்பிடத் தக்கவர் மயூரமணி சின்னையா பிள்ளையும், எஸ். இராமநாதனும், சுந்தரனாரும் ஆவர். அம்மாநாடு **யமுனா பூரண திலகம்** என்ற அம்மையாரின் தலைமையில் சிறப்பாக நடந்தேறியது. அம்மாநாட்டில் சுந்தரனாரும் கலந்து கொண்டு சொற்பொழிவு ஆற்றியபோது, நம்நாட்டில் கணிகையர் தோன்றிய விதத்தையும், அவர் நாட்டியத்தையும் இசையையும் வளர்த்த திறத்தையும் எடுத்துக் கூறி அவர்கள் மணவாழ்க்கையில் ஈடுபடுதல் வேண்டுமென்று அறிவுறித்தினார்.

**திலகம்மாள்** என்பவரால் நடத்தப்பட்டு வந்த **'யுவதி சரணாலயம்'** ஆக்கம் பெறச் சுந்தரனார் பெரிதும் முயன்றார். சுந்தரனார் தமது 'நவசக்தி'யில் கட்டுரைகள் பல வரைந்து, சீர்திருத்த மணத்தை வற்புறுத்திக் கலப்பு மணத்தின் நன்மைகளை எடுத்து விளக்கி வந்தார். அவர் நமது நாட்டில் இருந்து வந்த பல தார மண வழக்கத்தை வன்மையாகக் கண்டித்து வந்தார். இளமை மணத்தை ஒழிக்கக் கொண்டுவரப்பட்ட **சாரதா மசோதா**வுக்குச் சுந்தரனார் முழு ஆதரவு காட்டி வந்தார். அம்மசோதாவுக்கு எழுந்த மறுப்புக்களுக்கெல்லாம், பத்திரிகை வாயிலாகவும், பேச்சு மூலமாகவும் மறுப்புக்கள் கொடுத்து வந்தார். அவற்றால் அம்மசோதாவுக்கு நிரம்ப ஆதரவு கிடைத்தது.

சுந்தரனார் பெண்ணின் மாண்பைப்பற்றிப் பேசிய பேச்சுக்களில் சிலவும் வரைந்த கட்டுரைகளில் சிலவும் **'தமிழ்ச் சோலை அல்லது கட்டுரைத்திரட்டு'** என்னும் நூலில் பாக்கக் கிடக்கின்றன. அன்றியும் சுந்தரனார் பெண்மையின் உயர்வை

நாட்டியச்செய்ய விழைந்து, 'பெண்ணின் பெருமை' என்னும் தனி நூலை எழுதி வைத்தார். அந்நூலுக்கு இணையாக அத் துறையில் வேறு நூலே இல்லை என்று உறுதியாகக் கூறலாம்.

சுந்தரனார் உண்மைச் சைவராகையால் சாதிக் கட்டுப் பாடற்றவராய் விளங்கினார். ஆதித்திராவிடர் திருமணங் கட்குச் சென்றால், அங்கு உண்ணுது வாரார். ஒருபொழுது புதுவையில் நடந்த 'கலைமகள்கழக' விழாவில் கலந்து கொள்ளுவதற்குச் சென்றிருந்த காலை, கிறித்தவர் ஒருவர் இல்லத்தில் உணவு கொண்டார். அதை அறிந்த ஒரு மடத்துச் சைவர், சுந்தரனாரது செயல் சைவத்துக்குப் புறம்பானது என்று கூட்டத்தில் கூறிக் கண்டித்தார். அவரது குற்றச் சாட்டிற்கு மறுப்புக் கூறுமுகத்தால் சுந்தரனார், நாயன்மார் வரலாறுகளை எடுத்துக்காட்டித் தாம் செய்தது சைவத் திற்கு மாறுபட்டதன்று என்பதை நிலைநாட்டினார். சுந்தர னாரது கொள்கையைக் கூட்டத்தலைவரும் ஏற்று அவரைப் புகழ்ந்து பேசினார்.

இத்தகைய — தொண்டே உருவாகிய — சுந்தரனாரின் சிறப்பையும் புகழையும் இச்சிறு நூலில் அடக்குவது இயலாத செயலாகும். அவரைப்பற்றிய வரலாறு முழுமையும் அறிய விரும்புகின்றவர் அவர் தம்மைப்பற்றி எழுதியுள்ள பரந்த பெரிய இனிய நூலைப்படித்து இன்புறலாம்.

## 9. சுந்தரனாரின் எழுத்தும் கருத்தும்

சுந்தரனாரின் கணக்கர் தொழில், பள்ளியாசிரியர் தொழில், கல்லூரிப் பேராசிரியர் தொழில், பத்திரிகாசிரியர் தொழில் ஆகியவற்றை அறிந்தோம். அன்றியும் அவர்

ஆற்றிய அரசியல் தொண்டு, தொழிலாளர் தொண்டு, சமயத் தொண்டு, மாதர் தொண்டு ஆகியவற்றையும் ஓரளவு அறிந்தோம். ஆனால், அவர் ஆற்றிய தொண்டுகளுள் முன்னணியில் வைத்து எண்ணத் தக்க அவர்தம் **தமிழ்த் தொண்**டைப் பற்றி அறிய வேண்டுவது இன்றியமையாததாம். தமிழ் மொழி வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய தொண்டு அளப்பரிதாகும். இற்றைக்குச் சுமார் முப்பத்தைந்தாண்டுகளுக்கு முன்னர், தமிழ் மக்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழ் மொழியில் பேசுதல் அநாகரிகம் என்று கருதினர்கள்; "தமிழில் எனக்குப் பேசவராது," என்று கூறுவதைப் பெருமையென்று எண்ணினர்கள். மேலும் தமிழருள் சிலர், "தமிழ் மொழியா! அது எற்றுக்கு உதவும்?" என்று தமிழை இழித்தும் கூறினர். தமிழில் பேசியவரை எள்ளி நகையாடுவது அக்காலத்தில் சிலர் வழக்கம். பொதுவாகக் கூறுமிடத்துத் தமிழ், தமிழ் மக்களிடத்தில் நிலைமறைந்திருந்த காலம் அது. தமிழில் பேசுபவர் அருகி இருந்த காலம் அது. தமிழ் மொழியில் பேச ஆற்றல் பெற்றிருந்தவரும் தமிழில் பேசப் பயந்த காலம் அது. அக்காலத்தில்தான் தமிழின் தாழ்ந்த நிலையைக் கண்டு அதற்குப் புத்துயிர் அளிக்க அறிஞர் சிலர் எழுந்தனர். அவருள் **பரிதிமாற் கலைஞர்** என்ற **வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், மறைமலை அடிகளார்** என்ற **சுவாமி வேதாசலம், சுப்பிரமணிய பாரதியார்,** நம் **சுந்தரனர்** முதலியவர் சிறப்பித்துக் கூறத் தக்கவர். அவர்கள் மக்களிடத்தில் போதிய தமிழ்க் கல்வி யில்லாதிருந்ததும், ஓரளவு தமிழ் கற்றவரும் படித்தறிய முடியாதபடி தமிழ் நூல்கள் அனைத்தும் பாக்களால் யாக்கப்பட்டிருந்ததும், மக்கள் அயல் மொழியாகிய ஆங்கில மொழியில் கருத்தூன்றி நின்றதும் தமிழ் மொழி குன்றி வந்ததற்

குரிய முக்கிய காரணங்கள் என அறிந்தார்கள். ஆகவே, இனிய எளிய நடையில் தமிழைப் பேசுவதும் எழுதுவதுமே தமிழுக்கு ஆக்கம் தேடும் அரிய வழியென உணர்ந்து அத்தொண்டில் அவர்கள் முனைந்து நின்றார்கள்.

எனவே தமிழை வளர்க்கும் பணியில் ஈடுபட்டு, அருந்தொண்டாற்றிய பெருமையிற் பெரும்பங்கு அவர்களுக்கு உரியது. அவர்கள் தொண்டால் இன்று நாடு முழுதும் தமிழ் மணம் வீசுகிறது; எங்கும் தமிழ்ப் பேச்சுக் கேட்கின்றது; 'தமிழ்! தமிழ்!' என்னும் ஒலி வானைப் பிளந்து எழுகின்றது. இதற்குத் துணைபுரிந்த தமிழ் அறிஞர் பலர் எனினும், முன்னே குறிக்கப்பட்ட நால்வரும் முன்னணியில் வைத்து எண்ணத் தக்கவர் என்பதில் இழுக்கொன்றுமில்லை.

சுந்தரனாருடைய எழுத்துக்களில் அழகு ததும்பும்; இனிமை சொரியும்; இசை நடமிடும். அவரின் எழுத்தோவியங்கள் 'உயர்தனிச் செம்மொழி'க்கு ஓர் எடுத்துக்காட்டாய் விளங்குவன. அவர் இயற்றிய ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு இலக்கியமாக அறிஞர் புலனுக்குத் தோன்றுவது. அவர் வடித்த நூல்களுள் '**மாதர்தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்**' என்ற பாரதி கருத்துக்கு ஏற்ப நிற்கும் '**பெண்ணின் பெருமை**'யும், '**கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக**' என்ற இராமலிங்கரின் அடியொற்றிய '**சீர்திருத்தம் அல்லது இளமை விருந்தும்**,' '**அறிவே தெய்வம்**' என்று கூறிய தாயுமானவரின் கூற்றை விளக்கும் '**கடவுள் காட்சியும் தாயுமானு**'ரும், '**அன்பே கடவுள்**' என்று கூறிப்போந்த அருள் வெள்ளமாகிய இயேசுநாதரின் கொள்கையை இயம்பும் '**கிறிஸ்துவின் அருள் வேட்ட**'லும் சிலவாம். இத்தகைய கருத்துக்கள் பொதிந்த

பல உரைநடை நூல்களும் செய்யுள் நூல்களும் அவரால் இயற்றப்பட்டுள்ளன. அவர் இயற்றியுள்ள நூல்களின் பட்டியலை இந்நூலின் இறுதியில் கண்டுகொள்க. அந்நூல்களுள் பொதிந்து கிடக்கும் கருத்துக்களில் சிலவற்றை அவர் எழுத்துக்களிலேயே ஈண்டுக் காணலாம் :

1928-ல் அருப்புக்கோட்டையில் கூடிய வாலிப நாடார் இரண்டாவது மாநாட்டுத் தலைமை உரையில் சடங்குகளைப் பற்றி அவர் வெளியிட்ட கருத்து வருமாறு :

"இந்நாளில் நமது நாட்டில் நடைபெற்று வரூஉஞ் சடங்குகளில் சில குருட்டு நம்பிக்கைகள் நுழைந்திருக்கின்றன. அவற்றில் மூன்றைச் சிறப்பாகக் குறிக்கின்றேன். ஒன்று, சடங்குகளைச் சமயத்துடன் தொடர்பு படுத்துவது; மற்றொன்று, பிறப்பில் குறிக்கொண்டு நல்வினை தீவினைகட்குப் பண்டாரத்தையோ தேசிகனையோ பார்ப்பானையோ பிறனையோ அழைப்பது; இன்னொன்று, குறிப்பிட்ட ஒரு மொழியிலேயே மந்திரஞ் சொல்ல வேண்டுமென்பது."

(பக்கம்—31)

1929-ல் யாழ்ப்பாணம் மாணவர் மாநாட்டில் பேசிய போது பெண்களைப்பற்றி அவர் கூறியவை. (அ) ஆணும் பெண்ணும் ஒன்றே. (ஆ) பெண்ணுரிமை தடுத்தலாகாது. (இ) உலகக் கூறில் ஆண் ஒரு பாதி; பெண் ஒரு பாதி என்பன. இவற்றை அவர் கூறும் திறம் நோக்கற்பாலது.

"பெண்ணடிமை மற்றுமொரு கொடுமை. உலகம் பெண் ஆணால் ஆக்கப்பட்டிருக்கிறது. உலகின் ஒரு கூறாகிய பெண்ணினம் மட்டும் தாழ்த்தப்பட்டதற்கு ஏதாயி

னும் பொருளுண்டோ? பெண்ணுலகம் தாழ்த்தப்பட்டால் ஆணுலகமுந் தாழ்த்தப்படும். இரண்டும் உரிமை பெற்றுள்ள இடத்திலேயே உரிமை ஞாயிறு ஒளி செய்துகொண்டிருக்கும். ஒன்று அடிமைப்படின் மற்றொன்றும் அடிமைப்பட்டு, முடிவில் நாடே அடிமைக் குழியில் வீழ்ந்துபடும்."

(பக்கம்—74)

அதே மாநாட்டில் அறிவுக்கொவ்வா வழக்கங்களைக் கண்மூடி வழக்கங்கள் என்றும், அவற்றிற்குக் காரணம் அறியாமை என்றும், அறியாமைக்குக் காரணம் போதிய கல்வி அறிவு இன்மையே என்றும் கூறுகின்றார்.

"கண்மூடி வழக்கங்கள் பல, நாட்டுக்கேற்றவாறு ஆங்காங்கே ஆட்சி பெற்றிருக்கின்றன. அவற்றைப் படிப்படியாக இறக்குவதே அறிவுடைமை. கல்வியறிவுக் குறைபாடே கண்மூடி வழக்கங்கட்குக் காரணம். கல்வியறிவு ஒளி படரப் படரக் கண்மூடி வழக்கங்களென்னும் இருட்குழாம் தானே இரிந்தோடும். ஆகவே கல்வியறிவு நாட்டிற் பெருகல் வேண்டும்."

—சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து (பக்கம்—75)

1936-ல் சென்னையில் சௌந்தரிய மண்டபத்தில் கூடிய இயற்கை வைத்திய மாநாட்டின்போது இயற்கை வைத்தியமே மற்றெல்லா வைத்தியத்தினும் சிறந்ததென்றும், ஒவ்வொருவரும் இயற்கையோடு ஒன்றி வாழ்தல் வேண்டுமென்றும் இயம்பியது.

"இயற்கை வைத்தியமாவது இயற்கையோடு இயைந்து வாழ்வது. ஒளியாரும், காற்றாரும், நீராரும், மண்ணாரும்,

தனியாரும், கீரையாரும் இயற்கை வைத்தியராவர். மலச்சிக்கலுக்கு நோன்பாருஞ் சிறந்த வைத்தியர். நோன்பினுல் போகாத நோயில்லை."

(பக்கம் 38)

1945—ல் சென்னை செயின்டு மேரி மண்டபத்தில் நடந்த தமிழ் இசை மாநாட்டின்போது கலைகள் எல்லாவற்றுள்ளும் இசைக்கலையே சிறந்ததென்று பகர்ந்தது.

"கலைகள் பலதிறத்தன. அவைகளுள் விழுமியது இசைக்கலை. இக்கலை எல்லாக் கலைகளிலுங் கலந்தும் தனித்தும் இயங்கும் பெற்றி வாய்ந்தது. இதனுல் இது விழுமியதாகிறது. இசைக்கலை இயங்குமிடத்தில் பிற கலைகளின் மணம் ஓரோ வழியாதல் கமழாமற் போகாது. இத்தகைய இசைக்கலையை மற்றக் கலைகளின் உயிர்நாடி என்று சொல்வது தவருகாது."

—தமிழ்த் தென்றல் அல்லது தலைமைப் பொழிவு (பக்கம் 419)

உலகத்து இரு கூறுகளுள் பெண்மை ஒரு கூறு என்றும் அச்சமே பெண் என்றும், அப் பெண் பின்னர் இல்லக் கிழத்தியாகி, தாயாகி, இறுதியில் இறையாகிருள் என்றும் புலப்படுத்துவது.

"பெண்மை என்பது கட்புலனுயதோர் அமைதித் தன்மை. அமைதி நிலையே சிறந்த கடவுள் நிலை என்று மறை முழங்குகிறது. கடவுளை யாண்டும் 'சாந்தம்' 'சாந்தம்' என்று வேதாந்தம் போற்றுகிறது. அமைதி, பெண் வடிவாகக் கண்ணுக்குக் காட்சி அளிக்கிறது; காட்சி அளிப்பதோடு நில்லாது, உலக வாழ்வில் தலைப் பட்டுக் கடவுள்

நெறியைக் காட்டுகிறது; அந்நெறியால் இறைமைக் காட்சி யையும் வழங்குகிறது. பெண்மைக்கணுள்ள இந்நுட்பங் களையெல்லாம் உலகம் உணர்வதாக.

பெண்மைக்குள்ள பெருமை யாது? பெண்மையின் மாட்டு, உலக வளர்ச்சிக்குரியதும் தொண்டுக்குரியதுமாகிய தாய்மை பொலிதலான் அது பெருமை யுடையதாகிறது. பெண்மைக்குள்ள பெருமை யெல்லாம் தாய்மையால் என்க. தாய்மையில் நிலவுவது இறைமை. இறைமை பெண்மையின் முடிந்த நிலையாகும்.

இறை எது? சமய நூல்கள் பலவாறு கூறும். அக்கூற்று களை ஈண்டு ஆராய வேண்டுவதில்லை. பொய், பொறுமை, அவா, சீற்றம், தன்னலம் முதலியவற்றைக் கடந்த ஒன்று இறை என்பது. ஒருவர் உள்ளத்தில் அன்பு நிகழும்போது இப்பொய், பொறுமை முதலியன நிலவுமோ? பொய், பொறுமை, அவா முதலியவற்றால் எரியும் ஒருவன் உள் ளத்தில் அன்பு ஒதுங்கி நிற்றல் (ஒவ்வொருவர் தம் தம் அநுபவத்தால்) உணரக்கூடியது.

அன்பு என்பது பொய் பொறுமை முதலியவற்றைக் கடந்து நிற்பது. பொய், பொறுமை முதலியவற்றைக் கடந்து நிற்கும் ஒன்றே இறை என்றுஞ் சொல்லப்படுகிறது. ஆகவே இறையே அன்பு, அன்பே இறையாதல் காண்க."

**—பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை**
(பக்கம் 453)

பண்டைக் காலத்தில் புராணங்கள் எந்நோக் கத்துடன் எழுதப்பட்டனவென்றும், பின்னர் அவை எவரால் இழிந்த நிலைக்குக் கொண்டுவரப்பட்டன

என்றும், போலிப் புராணங்களால் விளையும் கேடுகள் யாவை என்றும் கூறுவது.

"புராணங்கள் முதல் முதல் நன்னோக்கத்துடன் எழுதப் பட்டன. நன்னோக்கத்துடன் எழுதப்பட்ட புராணங்களில் இயற்கை உண்டு; பாட்டு உண்டு; இறை உண்டு; வாழ்வு உண்டு; அறம் உண்டு; ஒழுக்கம் உண்டு; அன்பு உண்டு; எல் லாம் உண்டு. புராணங்களின் உட்கிடக்கையை ஓராது, பின்னே பாட்டுப் பாடப் பயின்றோரெல்லாரும் புராண நாட கத்தில் புத்தி செலுத்தி நடிக்கத் தொடங்கினர். அவரால் புராணம் பெருங் கூத்தாக முடிந்தது. சமய வெறியர் பலர், பிற சமயக் கடவுளர் நிந்தனை யொன்றையே குறிக்கொண்டு, போலிக் கதைகள் புனைந்து புராணம் பாடத் தொடங்கி னர். காமுகர் சிலரும் புராணம் பாடியுள்ளனர். இப்புராணங் களிலுள்ள வருணனைகள், மொழி அன்னையின் எழின் முகத் தில் அம்மைப் புள்ளி வார்த்து, இயற்கையை மறைப்பன வாயின; கதைகளோ, விலங்கும் வெறுக்கத்தக்கன. இப் போலிப் புராணங்களால் மொழிக்கும், கடவுள் நெறிக்கும், வழக்க ஒழுக்கங்கட்குங் கேடு விளைந்தது என்று சுருங்கச் சொல்லலாம்."

— முருகன் அல்லது அழகு (பக்கம் 110)

உலகில் உள்ள மக்களெல்லாரும் ஒரே குலத்தவர். அவர்களுள் சண்டை மூளலாகாது. அறிவே மக்கள் வாழ்க்கையை அழகு செய்வது என்னும் கருத்தைக் கீழே காண்க.

"எல்லா நாட்டாரும் மக்கள் குலத்தில் சேர்ந்தவரே. எல்லார்க்கும் இரு கால், இரு கை, இரு கண், இரு செவி

ஒரு மூக்கு, ஒரு தலையே இருக்கின்றன. ஒரு குலத்திலா சண்டை மூள்வது.

உலகம் ஒன்று. அது நாடுகளாய்ப் பிரிகிறது. பிரிவை மக்கள் செய்தார்களில்லை; மலையும், காடும், ஆறும், கடலும், பிறவும் நாடுகளைப் பிரித்துள்ளன. இப்பிரிவால் சகோதர நேயத்தையா இழப்பது?

சாதி நிறம் மொழி நாடு முதலியவற்றை ஒட்டி எழுந்த போராட்டங்கள் போக: ஒழிக. இனி எவ்வகைப் போராட்டமும் எழாதவாறு காப்பது அறிவுக்கு அழகு. அறிவு, மக்கள் வாழ்க்கையை அழகுசெய்யாது இனி வாளா கிடக்குமோ? அறிவு, அன்பால் புரட்சி செய்யும். அறிவும் அன்பும் சேர்ந்த புரட்சியே அறப்புரட்சி என்பது.''

—**பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி** (பக்கம் 140)

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது எதுவோ அதுவே கடவுள் என்னும் உண்மையை விளக்கும் சமரச நெறியைக் கீழே காண்க.

“இயற்கையிற்றானே விளங்குகின்றவராயுள்ளவரென்றும், இயற்கையிற்றானேயுள்ளவராய் விளங்குகின்றவரென்றும், இரண்டுபடாத பூரண இன்பமானவரென்றும், எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லாப் பதங்களையும், எல்லாச் சத்திகளையும், எல்லாச்சத்தர்களையும், எல்லாக் கலைகளையும், எல்லாப் பொருள்களையும், எல்லாத் தத்துவங்களையும், எல்லாத்தத்துவிகளையும், எல்லாவுயிர்களையும், எல்லாச் செயல்களையும், எல்லா இச்சைகளையும்,

எல்லா ஞானங்களையும், எல்லாப்பயன்களையும், எல்லா அனுபவங்களையும், மற்றெல்லாவற்றையும் தமது திருவருட் சத்தியால் தோற்றுவித்தல், வாழ்வித்தல், குற்றம் நீக்குவித்தல், பக்குவம் வருவித்தல், விளக்கஞ் செய்வித்தல் முதலிய பெருங்கருணைப் பெருந்தொழில்களை இயற்றுவிக்கின்றவரென்றும், எல்லாமானவரென்றும், ஒன்றுமல்லாதவரென்றும், சர்வகாருணியரென்றும், சர்வ வல்லபரென்றும், எல்லாம் உடையராய்த் தமக்கு ஒருவாற்றானும் ஒப்புயர்வில்லாத் தனிப்பெருந் தலைமை அருட்பெருஞ்சோதியரென்றும், சத்திய அறிவால் அறியப்படுகின்ற உண்மைக் கடவுள் ஒருவரே அகம்புறம் முதலிய எவ்விடத்தும் நீக்கமின்றி நிறைந்த சுத்த மெய்யறிவென்னும் பூரணப்பொது வெளியில், அறிவாரறியும் வண்ணங்கள் எல்லாமாகி விளங்குகின்றார்."

(பக்கம் 46)

நல்லார் இணக்கத்தால் பெறப்படும் பயனையும் தீயோர் நட்பால் அடையப்படும் தீங்கினையும் சுந்தரனார் அறிவுறுத்துவதைக் காண்க.

"நன்னெறியில் வாழ்வு நடாத்தி, நிலைத்த நெஞ்சம் பெறுவதற்கு முதலாவது நல்லோரிணக்கம் வேண்டற்பாலது. தீயோர் கூட்டுறவால் பலதிறக் கேடுகள் விளையும். இக்காரணம் பற்றியே தீநட்பு களைதலை ஓர் அதிகாரத்தில் ஆசிரியர் திருவள்ளுவனார் வலியுறுத்தி யுள்ளார்.

தீயோர் எவர்? நல்லோர் எவர்? கடவுளிடத்து உறுதியின்றித் தீயொழுக்கத்திற் கிடப்போர் தீயோராவர்; கடவுளிடத்துறுதி கொண்டு நல்லொழுக்க முடையராய் வாழுநர் நல்லோராவர். 'கண்ணுவரேனும் உனைக் கைகுவியாராகி

நின்றால், மண்ணுவார் நட்பை மதியேன் பராபரமே' என்னும் தாயுமானார் திருவாக்கும் ஈண்டுக்கருதற்பாற்று."

—இராமலிங்க சுவாமிகள் திரு உள்ளம் (பக்கம் 122)

திருமணங்களுள் எவ்வழி மணம் சிறந்ததென்பதையும், அத்தகைய மணம் நடைபெற மக்களுக்கு உழைக்கும் உரிமை எத்தகையது என்பதையும் ஈண்டுக் கூறுகின்றார் சுந்தரனார்.

"காதல்வழி மணஞ்செய்துகொள்ளும் உரிமையே போற்றற்குரியது. உரிமைகளுள் உயிர் போன்றது அதுவே."

(பக்கம் 11)

உலகம் வெள்ளை உள்ளம் படைத்தவர்களுக்கு நல்லதாகவும், கள்ள உள்ளம் கொண்டவர்க்குத் தீயதாகவும் தோன்றும் என்று அறைவதை உணர்க.

"உலகம் நல்லதா? தீயதா? உலகம் நல்லதென்று சொல்வோரும் உளர்; தீயதென்று சொல்வோரும் உளர். நன்மையும் தீமையும் உலகில் இல்லை. இரண்டுக்கும் இடம் உள்ளமே. நலம் திகழும் உள்ளத்திற்கு உலகம் நல்லதாகத் தோன்றும்; தீமை நெளியும் உள்ளத்துக்கு உலகம் தீயதாகவே தோன்றும்."

முடியா? காதலா? சீர்திருத்தமா? (பக்கம் 142)

இயற்கையும் இறையும் உடலும் உயிரும் போன்றது. இயற்கை வழிபாட்டால் மக்கள் இறையை வணங்கத் துவங்குவர். இறை எங்கும் உளன் என்ற உணர்வைப் பெறுவர். இவ்வுணர்வால் பிற உயிர் மீது அன்பு காட்டுவர் என்பது.

"இயற்கை வழிபாடுகள் பலதிறத்தன. அவற்றுள் சிறந்தது ஞாயிறு வழிபாடு. ஞாயிறு வழிபாடு பழைய மாசுகளைக் கடிந்து உயிரை ஒளி மயமாக்கும். அவ்வுள்ளொளி, இயற்கை உடலாகவும், இறை அதன் உயிராகவும் உள்ள நிலையைப் புலப்படுத்தும். இது, தன் வழிபாடென்னும் உயிர்வழிபாட்டைக் கூட்டும்.

தன்னில் ஆண்டவனை நினைந்து நிகழ்த்தும் வழிபாடு, தன்னிலுந் தன்னனைய உயிர்களிலும் ஆண்டவன் கோயில் கொண்டிருத்தலை யுணர்த்தும். இவ்வுணர்வு, உயிர்கட்கு விடுதலை நல்கும்.

தன்பால் கோயில் கொண்டுள்ள ஆண்டவன், மற்ற உயிர்களிடத்தில் கோயில்கொண்டிருத்தலை உணரும் ஒருவன், எவ்வுயிர்க்காதல் தீங்கு செய்ய நினைப்பானோ? எவனும் தன்னுறுப்புக்குத் தானே தீங்கு செய்ய உடன்படான். தன்னுயிரும் பிறவுயிரும் ஆண்டவனுக்கு உறுப்புக்களாக இருத்தலை உணரும் ஒருவன், பிற உயிர்க்குத் தீங்கு நினையான்."

—**நினைப்பவர் மனம்** (பக்கம் 152)

ஒன்றே தெய்வம். அவ்வோர் இறையை ஒருவர் எச்சமயத்திலிருந்தேனும் வழி படலாம் என்றும், பிற சமயங்களைப் பழித்தலாகா என்றும் அறிவுறுத்துவது மனத்திற் கொள்ளற்பாலது.

"இறை ஒன்றே. அவ்வொன்றற்குப் பல மொழியில் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. உலகில் அவ்வப்போது குருமார் தோன்றி, அவ்வக்கால தேச வர்த்தமானத்துக்கு ஏற்ற வண்ணம் இறை உண்மையை அறிவுறுத்தி

செல்வார். அவர்தம் போதனைகள் யாவும் ஓர் இறையையே குறிக்கொண்டு நிற்பன.

குருமார் போதனைகள் பல சமயங்களாகக் கொள்ளப் பட்டன. பலவகைப்பட்ட மனோநிலையுடைய மக்களுக்கு அவர்தம் போதனைகள் பல வழியிலும் பயன்பட்டு வருமுறையில் அமைந்திருக்கின்றன. எவர்க்கு எப்போதனையில் அன்பு நிகழ்கிறதோ, அவர் அப்போதனை வழி நின்று ஒழுகலாம். அவர் பிற போதனைகளை நிந்தித்தலாகாது. 'நம்து நெறியைப் போன்றே பிற நெறிகளும் இருக்கின்றன' என்று எண்ணுதல் சிறப்பு. எல்லாப்போதனைகட்கும் பொருளாயிருப்பது ஒரே இறையாதலின், அவ்விறையையே சாரும்.

ஊர் ஒன்று. அதற்குப் பல வழிகள் இருக்கின்றன. எவ்வழிச் சென்றாலும் அவ்வூரை அடையலாம். அது போல இறை ஒன்றே. அதற்குரிய எந்நெறிபற்றி ஒழுகினும் அதை யடையலாம். ஒன்றைக் குறை கூறுவது எற்றுக்கு? அஃது அஞ்ஞானம்!''

—**தமிழ்நாடும் நம்மாழ்வாரும்**—(பக்கம் 67)

முன்னாளில் இமயமலை நீருள் மூழ்கிக்கிடந்ததென்றும் பின்னரே அது வெளிப்போந்தது என்றும் கூறும் சுந்தரனாரின் நிலநூல் அறிவு போற்றற்குரியது.

"இமய மலையின் தொன்மை மீது சிறிது கருத்துச் செலுத்துவோம். இமய மலையின் தொன்மையைக் காலத்தால் அளந்து கூறல் இயலாது. இதுகாறும் வெளிப் போந்துள்ள நிலவியல் ஆராய்ச்சிகளையும், மற்ற ஆராய்ச்சிகளையுங் கூர்ந்து நோக்குழி, இமய மலையைப் பற்றிய நுட்பங்கள் பல கிடைக்கின்றன. இப்பொழுது இந்து மகா சமுத்

திரம் என்று சொல்லப்படும் நீர்ப்பரப்பு, நிலப்பரப்பாயிருந்த தொன்று, இமய மலையின் உடலும், அதன் சூழல்களும் நீருள் மூழ்கிக்கிடந்தன என்றும், விந்திய மலையின் வடக்கேயுள்ள நிலப்பரப்பும் நீருள் அழுந்திக் கிடந்ததென்றும் ஆராய்ச்சிக் காரர் கூறுப.

இமய மலையின் பல பாகங்களில் கடல்படு பொருள்கள் சில இன்னும் படிந்து கிடத்தல் கண்கூடு. அப்பொருள்கள் நிலவியல் நீரியல் ஆராய்ச்சிக்காரருக்குக் கருவிகளாக நின்று துணை செய்கின்றன. அவைகளைக் கொண்டும், வேறு பல நிகழ்ச்சிகளைக் கொண்டும் இமயத்தின் உடல் நீருள் கிடந்தமை நிறுவப்பட்டிருக்கிறது.''

—**இமயமலை அல்லது தியானம்** (பக்கம் 7)

இது வரை சுந்தரனாரின் பரந்த அறிவைச் சிறந்த முறையில் பிறர்க்குப் பயன்படுமாறு தமக்கே உரிய இனிய எளிய தனித்தமிழ் நடையில் பொதிந்து வெளியிட்ட உரைநடை நூல்கள் என்னும் அமுத குடங்களுள் இதிலொன்றும் அதிலொன்றுமாக ஒவ்வோர் அகப்பை அள்ளி வழங்கப்பட்டது. இனி அவர் பாக்கள் மூலம் பகர்ந்த கருத்துக்களுள் சிலவற்றைக் காண்போம் :

எல்லாவற்றையும் கடந்து நிற்கும் ஒன்றே கடவுள், அவர்க்குப் பெயர் எதுவும் இல்லை. அவ்வாறிருக்க, புலவர் அவரைச் சிவன் என்று அழைத்துவிட்டனர். எனவே முன்னோர் வழியும் ஆன்றோர் வழியும் நின்று நானும் உன்னை அப்படியே அழைக்கிறேன் என்று கூறுகிறார்.

"அருவல்லை; உருவல்லை; அளவெல்லை யல்லை;
ஆதியல்லை; அந்தமல்லை; அகண்டவெறும் பாழ்நீ;
மருவுமுன்னைப் படைப்பதெது? மாண்புடைய சிவமே!
மன்னுமுன்றன் பாழ்வெளியில் மாநிலங்க ளெல்லாம்
அருவுருவாய் ஆங்காங்கே அமைந்தமைத்த கோட்டில்
அசைந்தசைந்தே இயங்கிவரும் அதிசயந்தா னென்னே!
ஒருபெயரும் ஒன்றுமில்லா உனையுஞ்சிவ மென்றே
உரைத்துவிட்டார் புலவரந்நாள்; ஓதுகின்றேன் அதையே."

—சிவனருள் வேட்டல் (கடந்த நிலை–2)

கடவுள் ஒன்றே. மதம் அவசியமற்றது. 'நான்' என்னும் அகந்தை அகல வேண்டும். பாவம் தவிர்க்க வேண்டும். இந்நெறியைப் பெற இறைவனை வேண்டுகிறார்.

"கடவுள்நெறி யொன்றென்னுங் கருத்துநிலை வேண்டும்;
கட்டுமதக் கலைகளெலாங் கால்சாய்தல் வேண்டும்;
நடமாடுங் கோயிலுக்கு நலம்புரிதல் வேண்டும்;
'நான்' அழிந்து தொண்டுசெயும் ஞானமதே வேண்டும்;
கொடியகொலை புலைதவிர்க்குங் குணம்பெருகல் வேண்டும்;
கொலைநிகர்க்கும் வட்டிவகை குலைந்திறுதல் வேண்டும்;
இடமொழியுங் கலையுமென்றும் இயங்கிடுதல் வேண்டும்;
இயற்கைவனப் புளங்கவரும் இனிமையும் வேண்டுவனே."

—உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல்
(வேண்டுதல் பாட்டு–1)

முதலில் ஓரறிவு உயிர் தோன்றி, படிப் படியே வளர்ந்து, பின்னர் ஆறு அறிவு உள்ள மனிதன் தோன்

றிஞன் என்னும் உயிர்நூல் தத்துவம் மிளிரும் பாவி னைக் காண்க.

"ஓரறி வுயிரே ஈரறி வுயிராய்,
ஈரறி வுயிரே மூவறி வுயிராய்,
மூவறி வுயிரே நாலறி வுயிராய்,
நாலறி வுயிரே ஐயறி வுயிராய்,
வளர்தலை முன்னோர் அளந்தளந் துரைத்தனர்;
'மாவும் மாக்களும் ஐயறி வினவே'
ஆறும் அறிவுக் கூறே மனிதன்
ஐந்தில் கிடக்கும் விந்தை என்னே!
கொலைபுலை தவிர்த்தால் குலமும் ஆறே;
ஆறும் அறிவுப் பேறு, புவியை
அகிம்சையில் வளர்க்கும் மகிமை உடையது."

—பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும்
(பக்கம் 13)

ஆன்றோரின் வழி நின்றொழுகினால் தெளிவும் ஒளி யும் உண்டாகும்; நிலையும் நினைப்பும் தூயதாகும் என்று கீழ்வரும் செய்யுள் அறிவு கொளுத்துவது கவ னித்தற் பாலது.

"முன்னோர் மொழியைப் பொன்னேபோல் போற்றுக;
அன்னவர் செம்மொழி மன்னி வானில்
ஒலியாய்ப் படிந்தே உலகை ஓம்பலை
உன்னி உன்னிப் பன்முறை உன்னுக;
தெளிவுண் டாகும்; ஒளியுண் டாகும்;
மூனைப்பறுந் தொழியும்; நினைப்பும் தூயதாம்;
அந்நினைப் புடையார் நன்மொழி அமிழ்தம்

இடையீ டின்றித் தொடர்ந்து வழிவழிப்
பெய்து பெய்து மெய்ந்நெறி காக்கும்;

முதுமை உளறல் (பக்கம் 48)

காய்தல் உவத்தல் இன்றி எல்லார்க்கும் பணி செய்து கிடப்பவரே மாந்தருள் மாணிக்கம் என்னும் விழுமிய கருத்தை விளக்கும் கவியை ஈண்டுக் காண்க:

"தீய ரிடத்திலும் நேய ரிடத்திலும்
பாவ ரிடத்திலும் பணிகள் செய்வர்
வழுக்கி வீழ்ந்தவர் வாழ்க்கை பண்பட
ஒழுக்கத் தொண்டுகள் பழுக்க ஆற்றுவர்
அவரே அந்தணர்; அவரே முனிவர்;
அவரே சித்தர்; அவரே புத்தர்;
அவரே பெரியார்; அவரே தொண்டர்;
அவரே இனியர்; அவரே மனிதர்."

—இருமையும் ஒருமையும் (பக்கம் 29)

அருள் ஆட்சி மற்றெல்லா ஆட்சிகளை விடச் சிறந்ததாகும். எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாதவனை எல்லா உயிரும் தொழும். அவ்வெண்ணத்தைப் போற்றி வளர்த்தல் வேண்டும் என்று அறிவுறுத்தும் சுந்தரனாரின் குறள் வெண்பாக்களைக் காண்க :

1. மக்களின் அன்பில் மலரும் அருளாட்சி
தக்கது தக்கது தான். —(பக்கம் 20)

2. எவ்வுயிர்க்கும் தீங்கெண்ணு எண்ணமோ நல்ல தந்தச்
செவ்வி வளர்த்தல் சிறப்பு.

—இருளில் ஒளி (பக்கம் 34)

யோகியாகி தவம் செய்யின் முத்தி கிடைக்குமோ? கிடையா. முத்தி பெற வேண்டுமாயின் இயேசு கிறிஸ்து போதித்த வழியைப் பின்பற்றி நட. அதுவே சாலும் என்பதாகும்.

வாக்கை அடக்கின், வயிற்றை ஒடுக்கின், மயிர்வளர்த்து
மூக்கைப் பிடித்திடின், மூச்சைத் தடுத்திடின், முத்தியின்பம்
தேக்குமோ ஐயோ செகத்தீர்! அடைமின் சிலுவைஉயிர்
போக்கிய ஏசுவின் பொன்னடி இன்பம் புகுத்திடுமே.

—**கிறிஸ்துவின் அருள்வேட்டல்** அறத்தின் இயல் (4) (பக்கம் 6)

எத்தகைய பணிகள் செய்யவேண்டும்; எவ்வெப் பணியால் எவ்வெக் குற்றம் மக்களை அணுகாது என்பதை ஈண்டு விளக்குகின்றார்:

"தொண்டால் மூர்க்கம் அண்டா தொழியும்;
மூர்க்கப் புரட்சியால் பார்க்கு நாசம்;
அகிம்சைப் புரட்சியால் அகிலம் உய்யும்;
கொலைபுலைக் குறையைக் கலையால் விளக்கும்
அறிவுக் குருகுலம் பரிவால் அமைக்க;
கொள்ளை காமம் கள்பொய் கொலையென
உள்ளம் தெரியப் பள்ளி காண்க;
கொல்லும் கருவிசெய் அல்லல் களத்தைச்
சீல விளைவுசெய் ஆலயம் ஆக்குக;
அருளற நெறியின் பொருளைப் பரப்புக;
அந்த நெறியால் ஐந்து பாவமும்
அருகி அருகி அருகிப் பொன்றும்
அருளற நெறியில் பொருநிலர் இலரே."

—**சித்தம் திருந்தல் அல்லது செத்துப் பிறத்தல்** (பக்கம் 18)

இதனுடன் திரு. வி. க. வின் செய்யுள் கருத்துகளுள் சில முற்றுப்பெறுகின்றன. இவைகளையன்றி இன்னும் சில இடம்பெறாத 'உள்ளொளி,' என் கடன் பணி செய்து கிடப்பதே' போன்ற நூல்கள் உள்ளன. அவற்றையும் படித்து இன்புறுவீராக. பொதுவாக திரு. வி. க. நூல்களில் ஒன்றிரண்டு நீங்க பிறவெல்லாம் எக்காலத்தும் பயன்படக் கூடியவையாய் விளங்குவன. அத்தகைய நூல்களை ஒவ்வொருவரும் படிப்பது அவசியமாகும்.

உலகில் வழங்கும் மொழிகளில் உரைநடை வளத்தில் ஓங்கி நிற்பது ஆங்கிலம். ஆங்கில உரைநடை ஆசிரியருள் பலர் தமக்கே உரிய தனி நடை கற்பித்துக் கொண்டு சிறப்பெய்தினர். நம் தமிழ் மொழியிலோ உரை நடை நூல்கள் இயற்றிய ஆசிரியர் சிலரே. அவருள்ளும் தமக்கே உரிய தனி நடையை வகுத்துக்கொண்டு நூல் இயற்றியவர் இலர். அக்குறையை அகற்றி வைத்த பெருமை நம் சுந்தரனார்க்கே உரியது. எனவே, அவர் உரை நடையின் செவ்வியினை யறிந்து அவர் இயற்றிய நூல்கள் அனைத்தையும் படித்து மாணவர் பயன் பெறுவர் என்னும் நோக்கத்துடனேயே இவ்விறுதி அத்தியாயம் இந்நூலின் கண் இடம் பெற்றுள்ளது. வாழ்வாங்கு வாழ்ந்த வள்ளலார் வாழ்க்கையைச் சுருக்கிக் கூறும் இந்நூலைப் படிப்பவரின் வாழ்க்கையும் செம்மையுறுமென்பது திண்ணம்.

**வாழ்க திரு. வி. க. வின் திருநாமம் !**

CONNEMARA PUBLIC LIBRARY

# திரு. வி. க. இயற்றிய நூல்கள்

---

திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்
பெரியபுராணம்—அரும்பத விசேட ஆராய்ச்சிக்குறிப்புரையும் வசனமும்
திருக்குறள் விரிவுரை: (முதற்பகுதி—பாயிரம்—நான்கதிகாரம் இரண்டாம் பகுதி அறத்துப்பால்—ஆறு அதிகாரம்)
தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை
இந்தியாவும் விடுதலையும்
தமிழ்த் தென்றல் — உள்ளொளி
நாயன்மார் வரலாறு — முருகன் அல்லது அழகு
சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து
இராமலிக்க சுவாமிகள் திருவுள்ளம்
முடியா? காதலா? சீர்திருத்தமா?
பொதுமை வேட்டல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே
சைவத்தின் சமரசம் — சைவத் திறவு
சமரச சன்மார்க்க போதமும் திறவும்
சமரச சன்மார்க்கத் திறவு
தமிழ்நாடும் நம்மாழ்வாரும் — இருளில் ஒளி
இமயமலை அல்லது தியானம்
காரைக்காலம்மையார் திருமுறை—அரும்பதக் குறிப்புரையுடன் — ஆலமும் அமுதமும்
கடவுள் காட்சியும் தாயுமானாரும் சித்தமார்க்கம்
தமிழ் நூல்களில் பௌத்தம்
உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல்
முருகன் அருள் வேட்டல்
திருமால் அருள் வேட்டல்
கிறிஸ்துவின் அருள் வேட்டல் — புதுமை வேட்டல்
நாயன்மார் திறம் — சமரச தீபம்
நினைப்பவர் மனம் — சைவ சமய சாரம்
முதுமை உளறல் — இருமையும் ஒருமையும்

# கலங்கரை விளக்கம் - திரு. வி. க.

ஆசிரியர் :

அருணாசலம்

2792

CONNEMARA PUBLIC LIBRARY
24 FEB 1955
MADRAS

முரசொலிப் பதிப்பகம்

131, பிராட்வே, சென்னை-1.

0—8—0

முதற் பதிப்பு, ஜனவரி—1954

CONNEMARA PUBLIC LIBRARY
4 FEB 1955

# முன்னுரை

நம்மைநீத்து இயற்கை எய்திய மணவழகனாரெனத் தகுந்த திரு. வி. க, அவர்களின் வாழ்க்கைச் சிறப்புகளை எடுத்தியம்பு முகத்தானெழுதப் பட்டதல்ல இந்நூல்.

அன்னாரின் செயல்கள் யாருக்காக எதற்காக இருந்து வந்தனவோ அதனை எண்ணி அச்செயல்கள் நாட்டா ரெனப்படும் ஆண் பெண் பெரியார் சிறியாரனைவர்பாலும் செயற்படவேண்டும் என்பதே என் நாட்டம்.

அதனை உளத்துட்கொண்டே கலங்கரை விளக்கமாக அப்பெரியாரை முற்கொண்டு, கலமிருப்பினும் கரைசேர வகையறியாது தவிப்போரும் கடலெனத்தகும் நாட்டிடையே தவிப்போரும் அவரவர் காணஎண்ணி யாங்கு வெற்றிக்கரையைகாணவும் கண்டபின்னர் கவலையின்றிக் களிப்புடன் வாழவும் வழிவகுத்துள்ள அன்னாரின் செயற்படிவங்களின் துணைகொண்டு எழுதலானேன்.

இந்நூலை நல்ல முறையில் குறுகிய கால அளவில் பதிப்பித்த **முரசொலிப்பதிப்பகத்தார்க்கும்,** என்னையும் ஓர் பொருட்டாக்கித் தமது அரிய மதிப்புரையைத் தந்த **புரட்சிக்கவிஞர் — பாரதிதாசன்** அவர்கட்கும் என்றும் நன்றியுடையேன்.

யானெழுதும் முதல் நூலிதுவே யாதலின் தவறுகளே மலிந்திருத்தல் கூடும். அதனை நீக்கிப் பணியினை ஏற்று மீண்டும் பணிப்பார்களென நம்புகின்றேன்.

சென்னை. இங்ஙனம்,

**1—1—1954** 512-78 **அருணசலம்**

CONNEMARA PUBLIC LIBRARY
24 FEB 1955
MADRAS

# மதிப்புரை

மணவழகர் இயற்கைதனை எய்தினர்அம்
மறக்கமுடியா அறிஞர்தம்மை எண்ணிக்
குணவழகர் நம்அருணுசலனர் இங்கோர்
குளிர்சொல்லால் சுவைநடையால் தமிழால்யாரும்
உணர்வழியில் உரைநடை நூல் ஒன்றுசெய்தார்
உவப்புற்றேன் உவப்புறுவார் மாணவர்கள்
புணர்வில்லை, பிழைச்சொற்கள். ஆக்கியோரின்
பொன்னனை உள்ளந்தான் என்றும் வாழ்க.

பாரதிதாசன்

24 FEB 1955

# பதிப்புரை

தாமரையும் அல்லியும், தண்ணீரின்மேலே வந்து தலை நீட்டும்,—தாங்கள் யார் என்பதைக் காட்டிக்கொள்ள. சாதாரண மக்களும், இப்படி, தங்களுக்குத் தாங்களே தம்பட்ட மடித்துக் கொள்வர்.

ஆனால்—அறிஞர்கள்,.........

இந்த "அல்லிப்பூவேலை" செய்ய ஆசைப்படுவதில்லை, இம்மாதிரிப் 'பெயர் வியாபாரமும்' அவர்களுக்குப் பிடிக்காது,

அவர்கள்—

பூமியின் கர்ப்பத்திலே வாழும் பொன் கட்டிகள். அவர்கள்—மலையின் வயிற்றிலே, வாழ்நாளைப் போக்கும் வைரமணிகள்.

காரணம்.

பொன்—வைரம், வெட்டப் படாமல் தோண்டப் படாமல் வெளியே வருவதில்லை.

இதை அறிந்து, முரசொலிப் பதிப்பகம், தமிழறிஞர், திரு. வி. க. அவர்களின் சொந்தக் கதையை எழுத வைத்திருக்கிறது; அன்பர் அருணசலம் அவர்களைக் கொண்டு. அவரும் எழுதி இருக்கிறார், தமது எழுத்து வார்த்தைகளைக் கொண்டு.

இது போன்ற பெரியார்களின் வரலாறுகள் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டுமென்று கருதுகிறது முரசொலிப் பதிப்பகம்.

என் கருத்தும் இதுவே!

முரசொலிப் பதிப்பகம்
131, பிராட்வே, சென்னை-1.

சுரதா
1—1—54

CONNEMARA PUBLIC LIBRARY
24 FEB 1955
MADRAS

# கலங்கரை விளக்கம் - - திரு. வி. க.

மாவீரனே !' வணக்கம். மனிதருள் மாணிக்கமே நன்றி செயலாற்றல் மிக்கோனே! சிறியேன் என் அன்புப் பணியை ஏற்றருள்வீராக. அறிவின் இருப்பிடமே! அமைதியின் பிறப்பிடமே! அமைவின் இலக்கணமே! ஆர்வத்தின் விளை நிலமே! உன்னைப் போற்றிப் புகழ்வதன்றிச் செயலில்லாத நிலையினை அடைந்திருக்கிறது இந்த நாடு. இந்நாட்டின் இவ்விடர்ப்பாடுற்ற நிலை கண்டு தான், இனியும் இருந்தலாகாதென ஏகினீரோ? அன்றி வான் வெளியிலே நின்று எம்மூச்சிற் கலக்கும் காற்றாய் இலங்கி எம்முள் ஆற்றலைப் பெருக்கும் அருந்திறல் நோக்கோடு அருவானீரோ? எங்கே காண்போம் என்று ஏங்குகின்றதே நெஞ்சம். 'பிள்ளையின் மனப்பாங்கின்படி செல்லவிடுத்து நல்வழிப் படுத்தும்' தந்தை போன்று எம் நல்வழிக்குப் பணி செய்த பெருந்தகையே! மறந்திரோ எங்கள் நிலையை? மறக்க மாட்டீர். மறக்க நினைத்திருக்க மாட்டீர். தீப்பற்றிய தாமே, நும் உடம்பிலே! அய்யய்யோ எங்களின் சீர்கேட்டை எண்ணி எண்ணிக் கொதிப்படைந்திருக்குமே! அதிலே தீயும் சுடுவதா? எங்களுக்கு உழைத்து இழைத்துப்போன உடல், தீ மிக விரைவில் பற்றியிருக்கும். அய்யய்யோ தாயகமே!

தந்தையை இழந்த உன்னைக் கைம்மைப் பழி தூற்றுமே உலகம். என்னருமை நாட்டினரே! உம்மிடையே விஞ் ஞானம் உண்டு; ஆற்றலுண்டு. ஆயினும், உயிரற்ற உடலின் உருவுண்டு என்று எந்தையை வைத்துப் பார்க்கும் வகையற்றுப் போனீரோ! மடிந்த உள்ளமும் மலருமே அவ்வுருவைக் கண்டால். வஞ்சகர் அஞ்சுவரே—துவண்டவன் துள்ளி எழுவானே ஏன் சுட்டெரித்து விட்டீர்கள்? உங்கள் நிலையைப் பார்த்துப் பார்த்து உங் களுக்கு மடமையிருளைக் கடந்து செல்ல அறிவுக் கண் ணைத் திறந்து தன் கண்களின் ஒளியையும் போக்கி கொண்டாரே! அதெல்லாம் நினைவுக்கு வரும் அவர் உட லைக்கண்டால் என்று நீற்றிவிட்டீரோ! எங்கே தொழிற் சங்கம்—எங்கே தொழிற் சட்டம்—எங்கே தொழி லாளர்கள் என்று தேடி நசுக்கத் திரிந்த நாச காலர்களை நடுங்க வைத்த நல்ல தோற்றம் நாட்டிலே இருந்தாலும் எழுச்சி வந்து விடுமென்று எத்தர்கள் எவரேனும் எரிக்கச் சொன்னாரோ? அல்லது எடுப்பார் கைப் பிள்ளை யாக மாறும் உங்கள் நிலைகேட்டை உணர்ந்து எந் தையே தான் எரிக்கச் சொல்லிவிட்டு இறந்து போனாரோ? என்றாலும் எப்படி ஒப்பினீர்கள். தமிழ்ப் புலவர்களே! எங்கே உங்கள் திரு. வி. க. உங்கள் குழு விலே ஒருவராக, உங்கள் உயர்வுக்கு உழைத்தாரே! அவரெங்கே? ‘எனக்குத் தமிழ் பேசவராது’ என்று கூறுபவர்களும் தமிழர்களாக வாழும் இந்த நாட் டிலே நல்ல செறிந்த உயர்ந்த நடையிலே தனித் தமிழ் பேசும் பண்பை வளர்த்தாரே! அந்தப் பைந்தமிழ்

மறவர் எங்கே? எங்கே அவர்? அவர் உடலைக் கூட எரித்து விட்டார்களாமே! உடல் சென்னை நகரின் ஒரு பகுதியின் வழியே மட்டும் எடுத்து செல்லப்பட்ட தாமே? நகரெங்கும் காட்சிப் பொருளாய் காட்டி எடுத் துச் சென்றிருந்தாலும், காண்போர் கண்டதன் காரணம் அறிய முற்படும்போது கன்னித் தமிழ் வளர்த்த அடிகளை அறிந்திருக்குமே இந்நகர் அதற்கும் வகை யற்றீரோ? வாயெல்லாம் தேனொழுகப் புலமையுற்ற புலவரெனப் புகழ்ந்து போற்றும் பான்மை கேட்டும் வாளா இருந்தீரோ.

நீவிரென் செய்வீர். தமிழ் பேசி, தமிழர் வீரம் பரப் பித் தமிழ்த் தாயகத்தை ஆளவந்தாரே, கடமை மறந்த னரே! அவராட்சியிலுள்ள நீவிரென் செய்வீர். எத்திசை யும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே, என்று கூறிய 'மனோன்மணியம்' சுந்தரனிருந்திருந்தால் கலி யாணசுந்தரனைக் கருதாத கல் நெஞ்சரைக் கண்டு, தன் ஏட்டைத் திருத்தி இரானோ? "தெருவெல்லம் தமிழ் முழக்கம் செழிக்கச்" செய்துகாண அவாவியபாரதியிருந் திருந்தால்இத்தமிழர் தம் செயல் கண்டு, தெருவெல்லாம் "தமிழ்மணத்தை சிரிக்கச் செய்யீரென்று அரற்றியிருக்க மாட்டானோ? இன்றுஅரசியலில் புலியென்று தாவிக்களிக் கும் செயல்களை முன்னே அழிக்க முற்பட்டார் செயலை அழித்தொழிக்கப் பணி புரிந்த அண்ணலை; பொருள் விரும்பிப் புலம் கொடாத உறுதியாளனை, உத்தமனை, எங்கு தேடினும் ஈடாகக் காணமுடியாத ஒரே ஒருவனை இழந்ததே தமிழகம். மொழியாலும்—அரசியலாலும்

உயர்வுக்கு உயர்வானவனை உணராது வாளா இருந்த நாடே இனியும் நீ விழிப்புறுதலெங்கே. வருங்கால வழித் தோன்றல்களாகத் திகழ்ந்திடும் வாலிப நண்பர்களே! இனி நாடு உங்களுடையதாக வேண்டும். நயவஞ்சகம் நலிந்தொழிய வேண்டும். நாட்டுப் பற்று மேலோங்க வேண்டும். இதுதான் நீங்கள் செய்யவேண்டிய கடமை. எனவே உறுதி கொள்ளுங்கள் திரு. வி. க. காண விரும்பிய நாட்டை, அவர் காண அவாவுற்ற மொழி உயர்வை அவர் அமைக்கத் துடித்த சமத்துவத்தை அவர் உள்ளக் கிடக்கையான அரசியலை—அறநெறியை—அவர் பணியின் அடிச் சுவட்டை மக்கள் உணர்வை ஆக்கித் தாருங்கள். 'நன்றிகெட்டது இந்த நாடு' என்ற சொல்லை மாற்றுங்கள். உங்களைத் தடுப்பார் எவருமில்லை! உங்கள் பணியென்னும் கப்பல் செலுத்தப் பட வேண்டிய கடலிருக்கிறதே மிக ஆழமானது. அதன் அடியிலே; பொறாமை, வஞ்சம், உடனிருந்து அழித்தல், போன்ற சுழல், சுறு, திமிங்கலங்களுண்டு அதனை அறிவு விளக்கம், ஆராய்தலென்னும் கூர் கத்தி கொண்டு அகற்றி அழித்துச் செல்லுங்கள். மடமை—ஆத்திரம்—வேகம் முதலிய சூறுவளிகள் சூழலாம். மணற்காற்று வீசலாம். கொந்தளிப்பு நேரலாம். அவற்றைக் கலங்காமை என்னும் நங்கூரமிட்டு நின்று வெற்றிக் கரையைச் சேருங்கள். நம்பிக்கை மோசமென்னும் பெரும்பாறைகளுண்டு. அந்தத் திக்கை அறிவிக்கத் தொலைவிலே கலங்கரை விளக்கம் இருக்கும். அதன் இருப்பிடமறிந்து கரை ஏறுங்கள்.

உங்கள் கப்பலிலே மத வேற்றுமை—கட்சிப் பாகுபாடு-வேற்றுமை மனப்பான்மை. இவை போன்ற வற்றை நீக்கி விடுங்கள் இவைகள் உங்கள் கப்பலை அமிழ்த்த நேரிடலாம். எனவே வருங்காலத்தை ஆக்கி வழி வகுத்துக் கரைசேர்க்க கலங்காது நிற்கும் திரு வி. க. என்னும் கலங்கரை விளக்கத்தையும், தன்மையையும் அறிந்து புறப்படுங்கள், புறப்பட்டுச் செல்லும்போது பூசலும் ஏசலும் குறுக்கிடலாம். அவை எப்போதும் இருந்து கொண்டே இருக்கும்; அதற்குச் செவி கோடாதீர்கள். கடலிலே பயணத்தைத் தொடங்கும்போது இலட்சியம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செல்லுங்கள். தயக்கம் ஏற்படும்போதெல்லாம் வீண்யோசனைக்கும் ஆலோசனைக்கும் இடமளிக்காதீர்கள். அங்கே தான் அழிவு ஆரம்பமாகிறது பல வேளைகளில். ஆதலால் திட்டமாக வழிவகுத்துக் கொண்டு செயலாற்றுங்கள். கடலின் நடுவிலே ஆழத்திலே பாறைகளின் இடுக்குகளிலே நன்முத்துக்கள் விளைந்து கிடக்கின்றன. அவற்றை எடுத்துவர மூச்சடக்கி முயலும் தன்மையை வரவழைத்துக் கொள்ளுங்கள். கொடிகளில் பின்னப்பட்டுச் சீழ் நிறைந்த சிப்பிகளின்உள்ளே அவை அடங்கியிருக்கும். ஆராய்வதுகடினம். அதனுடன் சொத்தைச் சிப்பிகளும் உண்டு. எல்லாவற்றையும் எடுத்து வாருங்கள். கப்பலின் மேற்றட்டுகளிலே கொண்டு வந்து சோதித்துப் பாருங்கள், சொத்தைகளை நீக்கிவிட்டு நன்முத்துக்களை எடுத்து வாருங்கள். முத்துக் குவியலிலே சேருங்கள். இதோ கலங்கரைவிளக்கம், இது கரை இருக்கும் இலக்கை அறிவித்துக் கொண்டேயிருக்கும். வழிதவறி விடாதீர்கள்.

அண்ணலே! உமது எண்ணம் நிறைவேறப் போகிறது. இளைஞர்கள் செல்லுகின்றனர். எமது வெற்றியை அங்கங்கே நின்று காணமுடியாது. இப்போதே—வானவெளியிலே நின்று எம்மை வாழ்த்துவீராக. புலவர்களே-மத வாதிகளே-அரசியல் துறையினரே ஒத்துழையுங்கள். திரு. வி.க. அவர்களின் ஆசை நிறைவேற—ஆன்மா அமைதியுற--அவர் பெற்ற இன்பம் நாம் பெற.

## கலங்கரை விளக்கம்

நாட்டிலே பல கலகங்கரை விளக்கங்கள். எங்கெங்கு துறைமுகம் இருக்கிறதோ அங்கெல்லாம் கலகங்கரை விளக்கம். கலங்கரை விளக்கம் மிகப் பலருக்குக் காட்சிப் பொருளாக இருந்தாலும், சுழலிலே—புயலிலே சிக்கிப் பல நாட்கள் திசை தெரியாது நடுக்கடலிலே தத்தளித்து, கரைகாணுவோமென்ற நம்பிக்கையைக் கைவிட்டுத் தனித்து நின்று தவிக்கும் கப்பற்காரர்களுக்குக் கடவுள் போன்ற ஒன்று. அதேபோல வாழ்க்கையிலே திமிங்கிலங்கள் சஞ்சரிக்கும் இடங்களையும் வறுமைச் சூறுவழியையும், சமுதாயப் பாறைகளில் மோத இருப்பதையும் தவிர்க்க ஏற்பட்ட கலங்கரை விளக்கங்களைக் கண்டால், தாழ்ந்த-வேதனைப் பட்ட-உள்ளம் உடைந்த—விடுதலை கிடைக்குமா என்று ஏக்க முற்ற; தொழிலாளி—வகுப்பால் கீழ்மைப் படுத்தப் பட்டவன்-சாதியால் தாக்கப்பட்டவன் என்னும் நிலைகளில் சுழலும் மாந்தருக்கு இன்பம் மேலிடுவது இயற்கை. கப்பலோட்டிக்குக் கலங்கரை விளக்கத்தை

அறிவுறுத்தியவனிடம் பற்றுதலேற்படுவது போல; அவனை வியந்து பாராட்டுவதைப்போல; மனிதசமுதாயத்தை இன்பக்கரை சேர்க்க உதவிய அறிவியற்றுறைக் கலங்கரை விளக்கங்களை நாம்போற்றுவதில்லை. பாராட்டுவதில்லை. இது போன்ற கலங்கரை விளக்கங்களான அறிஞர்கள் தமிழ்நாட்டிலே மட்டுமல்ல :—

மக்கள், மடமையைக் கைக்கொண்டு வீணேமடிவதைக் காணப்பொருது ஏதன்ஸிலே—உரோமிலே—இரஷ்யாவிலே எங்கெங்கெல்லாம் மடமையும் அடிமையும் சமுதாயக் கொடுமையும் தலைவிரித்தாடியதோ அங்கங்கெல்லாம் தோன்றின.இந்தக்கலங்கரை விளக்கங்கள் மண்ணால் உருவாக்கப்பட்டு இயந்திரத்தால் இயக்கப்பட்டுச் செயலாற்றிக் கொண்டிருப்பன அல்ல வென்றாலும் அதைப் போலவே வெயில்—மழை—நோய்—வறுமை இவற்றைப் போன்ற இயற்கைச் சதிகளினால் தாக்கப்பட்டும், பயன் விரும்பாது பணியாற்றி வருகின்றன. அதிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டிலே ஒரு துறையிலல்ல. மொழி—அரசியல்—இசை—விஞ்ஞானம்,—வழக்கியல்—இவைகளிலெல்லாம் தோன்றி அல்லலுக்கு ஆறுதல் தர அயராது அல்லும்பகலும் பணியாற்றி வந்திருக்கின்றனர். அவர்கள் வாழ்ந்திருந்த காலத்திலெல்லாம் அவர்களை-உணராது அகல இருப்போர்கள் அவர்களின் மறைவுக்குப் பின்னர் 'மயானத்துக்குச் செல்வது முதல் வாயாரப் பேசுவதோடு நின்று விடுகின்றனர். இதற்கோர் எடுத்துக் காட்டுத் தேவையில்லை. இனியும் அவ்விதம் இருந்து விடாமல் நாட்டிற்குப் பணி

யாற்ற முற்படுவார்களாக. நாட்டின் பெரியார்களின் வரலாறுகளை இளைஞர்களுக்கு அறிவிக்கவேண்டியது ஒவ்வொரு பெற்றோரின் கடமையாகும். இளைஞர்கள்; வருங் காலத்தை உருவாக்கும் பணியாளர்கள். அவர்களுக்கு இதுபோன்ற வரலாறுகள். அறிவிக்கப்பட வேண்டும்.

## நல்லெண்ணம்

நாட்டிலே எல்லோரும் வாழுகின்றனர். அதில் யார் வாழ்ந்தாலென்ன? யார் தாழ்ந்தாலென்ன? என்ற எண்ணத்தோடு, நாமும் வாழுகின்றோமென்று நாளைக் கடத்திச் செல்லாமல் நம் போன்று ஏனையோரும் வாழ வேண்டுமென்ற எண்ணத்தோடு, தம் வாழ்வையும் பாழாக்கிக்கொண்டு பணியாற்றும் பண்பாடு வியந்து போற்றத்தகுந்தது. போற்றாவிட்டாலும் தூற்று கின்றனரே நாட்டினர், அதை எண்ணும்போது உள்ளம் பதைக்கிறது. 'வாழப்பிறந்தவனுயிற்றே! அவன் வாடுகின்றானே! சமுதாயம் அவனைச் சிதைக்கின்றதே! தொழில்துறை வாட்டுகின்றதே! கல்வியின்றிக் கலங்கு கின்றானே! என்ற கருத்துக்கொண்டு, சமுதாயச் சிக்கல் களைத் தீர்க்கும் வழிகளைஎடுத்துக் கூறியும் எழுதியும் விளக்கிக் காட்டியும் வாழ்நாளை அதற்காகவே பலியிட்டு விட்ட அவர்களின் நல்லெண்ணத்தை நாடறியும் நாள் எந்நாள்? கட்சிப் பூசல்களுக்கிடையே ஒவ்வொருவரும் கவலையுறும் வண்ணம் கைகலக்கவும் கலகம் விளைக் கவும், கருத்தற்றவாறு செயலாற்றி மடியவுமாயிருக்கும் நிலைகளைக் கண்டிரங்கி 'என்கடன் பணிசெய்து கிடப்

பதே' என்று அறிவிப்பு விடுத்து அறநெறி நிற்கும் அருஞ் செயலாளரை அவனி அறியும் நாள் எந்நாள்? அந்நாளே நன்னாளாகும். இதுவரை எழுதிவருவது திரு. வி. க. அவர்களைப் பற்றியதே யாகும். திரு. வி. க. அவர்கள் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல உலகுக்கே ஒரு விளக்கமாக விளங்கினார். அவர் வாழ் நாளிலே அவர்செய்து வந்த பணி ஒரு சாரரால் மட்டுமல்ல, ஒவ்வொரு மனிதனும் எண்ணி மகிழற்குரியது. இன்றைய தமிழகம் வெறும் பழமை வரலாறு பேசுவதும் எதையும் நேர்முறையில் கூற அஞ்சியும் வாழ்ந்து வருகிறது. ஒரு துறையிலே யல்ல எல்லாத் துறைகளிலும். அவ்விதம் பழைமை பேசிச் சிறப்புடன் வாழ்கிறதா எனக் கவனித்தால் இல்லை; இல்லை; இல்லை. சிதைவுற்றுத்தான் இருக்கிறது. இதனைப்பற்றிச் சிந்திப்பாருண்டு- செயலாற்றுவாரில்லை. இதனை எண்ணியவர் திரு. வி. க. எண்ணியதைச் சிந்தித் தார். முடிவு செய்தார். செயலாற்றினார், செயலால் நாடு சற்றே விழிப்புற்றது. அவ்வளவோடு கைவிட்டு நம்மையும் விட்டுப்போய் விட்டார். அவர் அகன்றார். அவரை நாம் அகன்றோம். அவர் உடல் தீக்கிரையாகி யது. உடலிலே தீப்பற்றவில்லை. ஒரு திட்டத்தின் கோட்டையிலே செயலின் இருப்பிடத்திலே, தீப்பற்றி விட்டது. அதனை நாமும் கண்டோம். அத் தீ வாளளா விச் சென்று விட்டதுபோல நம் நினைவும் சென்று விடுதல் கூடாது. அவர் எண்ணங்களை, செயல்முறை வழிகளை நாம் கைக்கொண்டு பணியாற்றவேண்டும். அதற்காக அவரை நாம் நம் முன்வழிகாட்டியாக

எண்ணவேண்டும். அதுவே நாட்டைப்பற்றிய நல் லெண்ணமாகும்.

## வளரும் பயிர் முளையிலே

இந்நாட்டிலே வழங்கி வரும் ஓர் பழஞ் சொல் இது. இச் சொல் எப்போது பயன்படுத்தப்படுகிறதெனின்; பயிர்வளர்ந்து பயன்படுத்தப்படும்போது. இச்சொல்லைக் கையாளுவோர், வளர்ப்பவன் வாளா இருந்து விட்டால் முளையிலே வளமாயிருந்தபயிரெனினும் எவ்வாறு வளரும் என்பதைச் சிந்திப்பதில்லை. இவ்வாறே நாட்டின் உயர்வுக்குப் பாடுபட்டவர்களைப் பற்றிச் சொல்லும்போதும் இச்சொல்லைப் பயன்படுத்திக் கடந்த காலங்களான அன்னாரின் இளமைக் காலச் செயல்களைப் பற்றிக் கூறி அவ்விளமை நிகழ்ச்சிகளில் அவர்களின் பிற்றைநாள் ஆற்றல் தென் பட்டதாகக் கூறுவர். உண்மை; ஆனால் அதே போன்று தம் இளவல்களை, மக்களை இயல்பு கண்டு வளர்க்க முற்படுகின்றாரில்லை. இங்கேதான் இவர்கள் வளரும் பயிரைப் பற்றிக் கவலை கொள்ளாதிருக்கின்றனர், என்று கூறப்பட வேண்டியவர்கள்.

சிற்பி ஒருவன்; அவன் இளமையிலேயே தந்தையிடமோ ஆசிரியர் வழியாகவோ அச் சிற்பக் கலையைப் பயில்கிறான்; அப்போதே அவன் கருத்திலே இது இது போன்ற சிற்பங்களை உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் மேலோங்குகிறது. ஆனால் அதைச் செயலாற்ற

முடியாத நிலையை அவன் அடைந்து விடுகின்றான். அவன் என் செய்வான், கற்சிலையையும் அதன் மாண்பையும் தன்னுடனேயே அழித்துக் கொள்கிறான். அதற்குக் காரணமாயிருந்தவர்கள் யார். அவனைக் கையாண்ட நாட்டினரல்லவா? உதாரணமாக அவன் தந்தையோ அல்லது சிற்பத்தை உருவாக்க ஆணையிட்டவரோ அழகிய பெண்ணின் சிலையை விரும்புகிறார். அவனோ உடற்கட்டும் உரமும் கொண்டவலு மிக்க சிலை வடிவங்களால் மக்களுக்கு கட்டுற்ற உடல் வளர்ச்சியிலே கருத்துச் சென்று அதன் பயனாக நல்ல மேனியராய் விளங்கினால் நாட்டிற்குப் பயன்படுவார்களே என்று கருதுகிறான், அவன் செயலாற்றல் நிலையோ அதற்குநேர் முரணாகிறது. என் செய்வான். அவன் உள்ளக் கிடக்கை பாழாவதையன்றிப் பயன்படுமா? இதை எல்லாம் செயலாற்றத் தூண்டுபவர் சிந்திக்க வேண்டும். சுருங்கச் சொன்னால் நாட்டினர் ஒவ்வொருவரின் உள்ளத்திலேயும் நாட்டுப்பற்று அமைதல் வேண்டும். அப்போதுதான் அவர்கள் அதனைச் செயலாற்ற; செயலாற்றுவிக்க முடியும்.

இதுவரை எத்தனையோ வரலாறுகளை, வீரரின் வாழ்க்கை முறைகளை; விடுதலை வழங்கிய வெற்றி விளக்கங்களைக் கற்றிருப்போரும்; தம் சொந்த வாழ்க்கையிலே நேர்ந்த நிகழ்ந்த வீறுமிக்க செயல்களையும் வாய்குளிர நாள் முழுதும் பேசுவர். ஆனால் அவற்றைத் தம் வரையில் செயலாற்ற முற்படுவோர் மிகச் சிலரே. அதனாலேதான் இன்னும் பல வரலாறுகளைக் கூறி வருகி

காலத்தை எதிர்பார்க்கும் நிலையிருந்து வருகிறது. இவ் வரலாறும் அந்த அடிப்படையிலேதான் உருவாகிற்று. ஏனைய வரலாறுகளை விட திரு. வி. க அவர்களின் வர லாறு யாவரும் ஒப்புக்கொள்ளத் தக்கதாயிருக்கும். காரணம் அவர் சமயவாதி—அரசியல்வாதி—ஆன்ம வாதி. கட்சிக் கொள்கைகளை அலசி ஆராய்ந்தவர். இவ்வாறெல்லாம் இருந்த அவர், தன் வரையில் ஒரே கொள்கையை உள்ளத்துள்ளே கொண்டு வாழ்ந்து வந்தார். எனவே மதம்-கட்சி அரசியல் இவை யனைத்தும் ஒரு தனி மனிதனின் வாழ்க்கையிலே உள்ளத்துள் இருந்தாலும் நிலையான நாட்டுப்பற்றைக் கொண்டே வாழக்கூடும் என்பதை எடுத்துக் காட்ட அவர் வரலாறு பயன்படும். அவர் வாழ்க்கையின் பகுப் புகுகளை, இளமையிலிருந்தே அவர் நாட்டிற்குப் பயன் படுத்தவேண்டும் என்ற எண்ணத்தோடு வாழ்ந்திருக் கிறார் என்பதைக் கண்கூடாகக் காணலாம்; இயல்பாக அல்ல அறிந்து செயலாற்றி வந்தவை.

அவரது பள்ளிக் காலங்களிலே தமது விடா முயற் சியினால் முதன்மையுற்று விளங்கி வந்த அவர், போற்றற் குரிய முறையிலும் முன்னேறி வந்திருக்கிறார்; அவர் வெஸ்லிபள்ளியில் படித்து வந்தபோது சம்பள மில்லாமல் (ஸ்காலர்ஷிப்) படிக்க அமைக்கப்பட்டார். பெற்றோர்களாலல்ல; அவர் படிப்பின் ஆர்வத்தை அறிந்த பள்ளி ஆசிரியர்களால். இந் நாள் பெற்றோர் களுக்கு நன்றாகத் தெரியும் இலவசச் சம்பளம் பெறு வது எத்தன்மையது என்பது. அவ்வாறு படித்து வந்த

அவர் உடல் நோயுற்றபோது நலிந்த உடல் நிலையை மருந்துண்டு தேற்ற விரும்பினாரில்லை. உடற்பயிற்சியின் மூலம் உடலை நல்ல நிலைப்படுத்திக் கொண்டார். இது தம் மக்களை 'விளையாடச் செல்லாதே' 'உடற்பயிற்சி எதற்காக' என்று கேட்கும் பெற்றோருக்கு ஒரு விளக்க மாகும். இளைஞர்களுக்கும் அது ஓர் பாடமாகும். உடல் உரமுற்றிருந்தால் அஞ்சாமை-நாணுமை இவை ஏற்ப டும் என்பதையே அவர் செயலாற்றியுள்ளார். இவ் வாறு உடல் நோயுற்றுத் தெளிவடைந்த பின்னர் சிலம்பம், மல்யுத்தம் முதலியவைகளால் வளம்பெற்று மீண்டும் படிப்பைத் தொடர்ந்தார். படித்த நாட்களில் 'சண்டேஸ்கூல்'களுக்குச் சென்று படித்தார். படித்த போது அங்கேயே அவருக்குக் கிறித்தவர்களின் தொடர்பு ஏற்பட்டது. பைபிளைப் படித்தார். பிற மத நூல்களைக் கண்ணுல் காண்பதும் மன்னிக்க முடியாத பாபம் என்றெண்ணும் பெற்றோர் இதனையும் அறிய வேண்டும். இத்தகைய பிற மத நூற் படிப்பும் ஆய் வும் அவருக்கு மதம் பற்றிய மயக்கத்தைப் போக்கப் பிற் காலங்களில் உதவியது பைபிளை ஆராய்ந்ததால் அதன் கருத்துக்களைச் சிந்தித்ததால் அவர் உடனே கிறித்த வராகிவிடவில்லை. இற்றையோர் சொல்லும் சைவ மதத் தினராகவே யிருந்தார். இவ்விதம் ஆரம்பாரம் வரைக் கல்வியில் வளர்ந்த திரு. வி. க. விற்கு யாழ்ப்பாணம் கதிரை வேற்பிள்ளையவர்களின் தொடர்பு ஏற்பட்டது. கதிரைவேலர் தமிழாசிரியராக வந்தார். அவரிடம் பள் ளிப் பாடங்களைக் கற்பதை விட தமிழ் கற்க அவாவுற்

ஞர். கலியாண சுந்தரனூர் பயின்ற பள்ளியில் அவர் ஒருவரே அவ்விதம் அவாவுற்றவர். ஏனையோரும் மாண வர்களே! தமிழார்வம் கொண்ட அவர் உள்ளம் கதிரை வேலரை நண்பராக, ஆசிரியராக, அன்பராகக் கொண்டாடிற்று என்பது, கதிரைவேலருக்கும் இராம லிங்கர் கூட்டத்துக்கும் நடந்த வழக்கிலே சான்று சொல்வோராகச் சென்ருர் திரு. வி. க. என்பதனைக் கொண்டே அறியலாம். தமிழ் மொழிப்பற்று அவரை உணர்ச்சி மிக்கூரச் செய்தது. தமது ஆசிரியரின் வழக்கு நடைபெறுகிறது. அந்நிகழ்ச்சிகளைக்காண வழக்கு மன்றத்திற்குச் சென்று வந்திருந்தார். அதன் பயன் அவர் மெட்ரிக்குலேஷன் வகுப்பில் தேர முடியாது போயிற்று. இப்பகுதியைப் பெற்ருேர்கள் உடனே கைக்கொள்வர். "இதைத்தான் சொல்லு கிருேம் பிள்ளைகள் வேறு நிகழ்ச்சியில் கவனம் செலுத் தினல்படிப்புக்கெடுமே என்று" என்றுசொல்லமுனைவர். அவர்களுக்குக் கூறுவேன் படிப்பைவிட அவர் நாட்டம் சென்ற இடத்தை நோக்கப் படித்துக்கூடப் பெறமுடி யாத பொது அறிவை அவர் பெறமுடிந்ததே என்று. இதனையடுத்துள்ள அவர் செயல்கள் ஒவ்வொன்றும் வரலாற்றமைப்பாகவே அமைந்து வந்திருக்கிறது. தனது பள்ளிப்படிப்பை அத்துடன் முடித்துக் கொண்ட திரு. வி. க. தமிழ் கற்பதில் முனைந்தார். அவ்விரைவு அவரைக் கதிரைவேலரின்பால் இடையருத் தொடர்பு படுத்திற்று. கதிரைவேலர் மறைவின் பின்னரும் அவர் தமிழார்வம் குறைந்ததில்லை. இங்கேயும் ஒரு சிறு

புரட்சி. கதிரைவேலரிடம் இவருடன் தமிழ்பயின்ற ஒரு சிலர் கதிரைவேலரிடம் மணவராயிருந்த நாம் அவருக்குப்பின் மற்றோராசிரியரிடம் தமிழ் கற்பதில்லை என்ற முடிவு செய்தனர். எத்துணை பேதைமை! இதன் மூலம் கதிரைவேலருக்கு உயர்வு தந்து விட்டதாக அவர்கள் கருதியிருக்கலாம். பயனென்ன? கதிரைவேலரின் தமிழ் அவரோடு அழிந்து விட்டதா? அதன்மூலம் புலவர் குழுவையே பழிப்பதைப் போன்றல்லவோ நேரும். இதனை ஒப்பவில்லை திரு. வி. க. மயிலை, மகாவித்துவான் தணிகாசல முதலியாரவர்களிடம் சென்று பாடங்கேட்டார் அதற்காக அவர் குருத்துரோகி என்றும் தூற்றப்பட்டார். எனினும் அதனைப் பொருட்படுத்தினரில்லை. தற்போதும் இத்தகைய செயல், நாட்டிலே பலரிடம், அரசியல்—வாழ்வியல்களில் காணப்படுகின்றது. தருணத்திற்குத் தக்கவாறு நிறம்மாற்றிக் கொள்ளும் பச்சோந்தியாக மாறக்கூடாதே தவிர ஆராய்ந்து முடிவு செய்து நேர்மையைக் கைக்கொள்ளல் தவறன்று. இங்கொன்று கூறுதல் இன்றியமையாதது. மதவாதிகளையும் சடங்குகளையும் புறக்கணிக்க—நீக்க பணியாற்றும் பலர் தாமும் ஒரு மதவாதியாகவே வளர்ந்து வருகின்றனர். மதவாதிகள் ஏதோ குறிப்பிட்ட கடவுள், அதற்கோர் வரலாறு, பூசனை முதலியன செய்கின்றனர். அது போன்றே பொதுப்பணியாற்றுவோரும் ஏதோ ஒரு தலைவர் அவர் வரலாற்றைப் புகழ்தல் போற்றுதல் பாராட்டுதல், படம் உருவம் முதலியவற்றை வணங்குதல், மாலையிடுதல், திறத்தல், விழா நடத்துதல் முதலியனவும் ஒருமதமாகவே கருதப்படும். சிறந்த கருத்தை

நாட்டிற் காக நல்கியவர்களைப் போற்றிப் பூசனை செய்வதைவிட அவர்களின் உள்ளப்பான்மையை உணர்ந்து நடை முறையில் முனைதல் சிறப்பாகும். அதுவே நம் கடமையுமாகும். இதைத்தான் செயய்தார். திரு. வி. க. அதுஇன்றைய உலகுக்கோர் நல்ல பாடமாயது. தணிகாசலனாரிடம் தமிழ் சமயம் சாத்திரம் முதலியவற்றைக் கற்றுத் தேர்ந்தார். வடமொழியையும் பாடங் கேட்டார். தமிழ்தானே கற்கிறோம். வடமொழிஎதற்காக என்று அவர் கருதவில்லை. அதனால் வடமொழியையே அவர் போற்றிப் பேணவுமில்லை. மொழியறிவு பெறவிரும்புதல் இயல்பு. ஆயினும் தாய்மொழி மாண்பு மறத்தல் இழிவு என்பதை தமிழ் நாட்டிலே இந்தி கட்டாய பாடமாக வந்தபோது இந்தி தமிழனை மந்தியாக்கும், மந்தியாக்கும், மந்தியாக்கும் என தமது முறையான மும்முறை கூறலிலே வலியுறுத்தினார். இது ஒன்றே மொழிகள் பலவற்றைக் கற்றாலும் உரிய மொழிமையைக் கெடாதிருக்க உற்ற நேரத்தில் பணியாற்றுதல் கடன் என்பது பெறப்படுகிறது.

பள்ளிவாழ்க்கை நீங்கிய பின்னரும் மாணவப்பருவத்தில் இருந்து வந்த திரு. வி. க. மணப்பருவத்தையும் அடைந்தார். அவரது வாழ்க்கைத்குத் துணையாகக் கமலாம்பிகை என்ற அம்மையாரை மணந்தார். அதன் பயனாக அன்புப் பிணைப்பு, மக்கட் பேறு, பிரிவுத்துன்பம் ஆகியவற்றை அவர் பயின்று கொண்டார். அந்தப் பருவம் அவருக்கு அவ்வாறுதான் உதவியது என்று

தான் சொல்லவேண்டும். ஏனெனில் அவர் மணமகனாக வும், கணவராகவும், தந்தையாகவும் விளங்கியகாலம் ஆறு ஆண்டுகளேயாகும். அதுவரை அவர் அதனையும் தன் வாழ்க்கையின் ஒருபகுதிக் கல்வியாகவேதான் கொண்டிருக்கமுடியும். எனினும் அவ்வளவு குறுகிய கால அனுபவமும் அவருக்குப் பெருந்துணை புரிந்திருக் கிறது என்பது 'பெண்ணின் பெருமை' முதலிய நூல் களின் வாயிலாக நாம் அறிய முடிகிறது. கமலாம்பிகை அம்மையாரை மணந்தது 1912-ல். அவரைப் பிரிந்தது 1918-ல். இதற்கிடையில் ஆண், பெண் என்று இருமகக ளைப் பெற்றனர். அம்மகவின் வாழ்க்கை நிலையா மையை உணர்த்தி இயற்கை எய்தினர். மனையாட்டியைப் பிரிந்த ஒன்பதாவது ஆண்டில் (1927-ல்) பெண்ணின் பெருமை வெளியாயிற்று. பெண்ணின் பெருமையின் ஒவ்வோர் அமைப்பும் அவர் இல்வாழ்வில் கண்ட உண் மையும் மறுக்கொணுத் தகைமையும் வாய்ந்ததாகவுள் ளது. திருமணம் செய்து கொள்ளாமலும் பெண்ணின் பெருமை உணர்தல் கூடுமாயினும் திரு. வி. க. வின் வாழ்க்கையும் அதற்குப் பயனுற்றது என்பதே பெரிதும் எண்ண இடமளிக்கிறது. அதில் அவர் தன் அனுபவத் தைத்தான் அறிவித்துள்ளாரோ அல்லது அறிந்த வற்றை ஆராய்ந்துதான் வெளியிட்டாரோ அறிதற் கில்லை. என்றாலும் அனுபவமும் ஆராய்வும் இணைந் ததே அந்நூல். அதன்கண் தற்காலத்தார் கூறும் காதல் முதலியன எவ்வாறிருத்தல் வேண்டுமென்பதும் அதன் விதிகளும் விளங்குகின்றன. காதல் என்ற புனிதமான

சொல்லைப் பயன்படுத்தி தன் காமக்கருத்தை நிறைவேற்றிக் கொண்டு கண்ணெனப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய பெண்ணினத்தைக் காரியுமிழச் செய்து கைவிடும் கயமையை வன்மையாகக் கண்டிக்கிருர். மற்று எதனை நம்மவர் உணர்ந்தாலும் கைவிட்டாலும் அதனைக் கடைப்பிடித்தல் இன்றியமையாததாகும். பெண்கள்; வாழ்வின்—நாட்டின் கண்கள். அவர்களைப் புண்ணுகை நாற்றமெழச் செய்யும் புன்மை மனம் படைத்தவர்களுக்குக் கற்று உணர்ந்து தேர்ந்து நடக்கவேண்டுமென்ற தன்மை கிடையாதெனினும் கற்ற சிலராவது அவர்களைத் திருத்தலாம் என்பது திரு. வி. க. அவர்களின் கருத்து. உண்மையும் அதுவே. கல்வியிலே சிறப்புருத நாடு இது எனினும் கற்றவர் நிறைந்த நாடு. கற்றவர்தம் செயல், கல்லாதவரைக் கற்கவைத்தல். அது இயலாதாயின் கற்றதன் தன்மையை இயன்ற வரையில் செயலாற்றல் என்பதன்ருே? நாட்டின் நிலை மாற்றமும் தடுமாற்றமும் பெண்ணின உலைவிலிருந்தேபிறந்த தென்று கூடக் கூறலாம். பணத்திற்குத் தேவையும் பணச்செலவிற்கு முதன்மையுமாய் அமைந்திருப்பது திருமணம்:— கொள்ளல்-கொடுத்தல். இவை இரண்டாலும் ஒருவர்க்கு மிகுதிச் செலவும் மற்ருருவருக்கு அச்செலவிற்குத் தான் தகுதியுற்றவன் என்பதை நிறுவ ஒருவகைச் செலவும். இதன்பயன் என்ன என்பதை இருசாரார்ரும் உணர்வதில்லை. இதன்காரணத்தாலேயே பெரிதும் காதல் என்ற சொல் களங்கப்படுத்தப்படுகிறது. எவ்வாறெனின்:— உள்ளம் ஒன்றி இரு

திறத்தவர் காதல் கொள்கிருர்கள். மனிதனது அறிவற்ற தன்மையால் காதல்கைவிடப் படுகிறதென்று பலர் கூறுவர். அதுசிறுபான்மையே யாகும். பெரும்பான்மை-பணக்காரன் ஏழை என்ற எண்ணம்; திருமணத் தால் தனக்கு நாட்டில் வரஇருக்கும் புகழைத் தவிரத் துன்பம் இவற்றை எண்ணுகின்றனர். கைவிடப் படுகிறது காதல். அதுமட்டுமல்ல. காதல் என்ற பெயரை தன் காமச் செயலுக்கும் இட்டு அதனைப்பாழாக்கவும் முனைகின்றனர். அந்நிலை மாற வேண்டும். காதல்உரிமையும் வேண்டும். காதலின்றி வாழ்ந்துவரும் பெண்ணினத்திற்கு மறுமண உரிமையும் வேண்டும் என்கிருர். இதனுல் அவர்கள் தம் இளமை கெடாததோடுமட்டுமல்ல இழிவும் வராது என்பதேஅவர் எண்ணம். இவற்றையெல்லாம் காணும் போது திரு. வி. க. இவ்வாறெல்லாம் இருந்திருப்பார் என்றும் அதனுல் தான் "பெண்ணின்பெருமை" வெளியாயிற்று என்றும் கருதிவிட இயலுமா? பெண்ணினம் உலகின் தாயினம் - பலபேயர்களால் பேதையினமாக ஆக்கப்பட்டிருக்கும் அவலநிலை அவரை எழுதத்தூண்டியது என்ருல் அதிலென்ன தவறு? காதல் காதலென்று கூறிக் கருத்தையும் கண்ணியத்தையும் கைவிட்டுப் பெண் பித்தர்கள் திரிவதையும்; உண்மையான உள்ளத்தோடு ஒன்றுபட்டவர்கள் உரியவாறு வாழ முடியாது தவிப்பதையும் நோக்க திரு. வி. க. வின் பெண்ணின் பெருமையும் பயன்படாதிருக்கும் நிலைஎண்ணிவருந்துவதைத்தவிறச்செய் வகையென்ன இருக்கிறது.

## நாட்டின் கண்கள்

பெண்கள், நாட்டின் கண்கள். அவர்களில் தற்போதுபலவகைகளில் முன்னேற்றம் பெற்றவர்கள்

ஆணடிமை கொள்பவர்களாகவும் மாறிவிடுகின்றனர். முன்னேற்றம் கல்வியில் மட்டும் இருந்தால் போதாது. முதன்மையாகப் பெண்மையில் முன்னேற்றம் வேண்டும். பெண்மையென்பது புடவையும் இரவிக்கையும் அணிவதும் பூச் சூடலும்தான் என்றால்; பெண்களைப் பேற்றுக்கருவி, சமயற்கருவி, இன்பக்கருவி என்று எண்ணப்படுதலும் அதுவும் ஒன்றேயாகும். பெண்மை: நாணம், மடம், அச்சம், பயிற்பு ஆகிய பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும். களங்கமற்ற உள்ளமும், தெளிந்த அறிவும் நிதானித்துச் செயலாற்றுவதும் போன்றவற்றைக் கொண்டிருக்கவேண்டும். இவை பெண்மை. என்றால் ஆண்களுக்கு இருக்கக்கூடாதென்பதல்ல; ஆண்களுக்குப் பொருந்தியிருத்தலைவிடப் பெண்களுக்கு இன்றியமையாதன என்பதே கருத்தாகும். பெண்களை நாட்டின் கண்கள் என்பர் மூதறிஞர்கள். அதனைப் பொன்னேபோல் போற்றிச் செயலாற்ற வேண்டும். பெண்: தாய், தங்கை, தாரம், இன்னும் கடவுள் பகுப்பிலே கூடக் காணமுடிகிறது. பெண்கள் நாட்டின் வருங்காலச் செல்வங்களை வளர்த்துத் தருவதிலே தாய்; உடனிருந்து ஏனைய பெண்களோடு பழகவேண்டிய முறையைப் பயிற்றுத் தருவதிலே தங்கை, தமக்கை; நம்மிற் பங்குகொண்டு, செயல் வழிகளிலே சிக்கலிருப்பினும் அதற்குரிய அமைதியான முறையினைப் பயிற்றுவிப்பதிலே ஆசிரியர் போன்றவர்கள். இந்நாளில் பெற்றோர்கள் குழந்தைகளை வளர்ப்பதில் செடிகொடியின் மீதுள்ள பற்றுக்கூட பிள்ளைகளினிடத்திலே கொள்

கின்றார்களில்லை. பிள்ளை என்றால் ஏதோ ஒரு பொம்மை யெனக் கருதுகின்றனர். அவ்விதமே அப்பிள்ளைகளும் வளர்ந்து பொம்மையாக வாழுகிறது. பொம்மை யெனவே நாட்டையும் நாட்டுமாந்தரையும் கருதுகின்ற நிலை ஏற்பட்டுவிடுகிறது. தங்கையர் தமக்கையர்கள் அண்ணன் தம்பி என்றிருந்தால் அவர்கள் கொடுக்கும் தகைமை (பணம்) பெற்றிருக்கவேண்டும் என்ற ஒரே நினைவுடன் இருக்கின்றனர், இவ்வாறேதான் அவர்கள் பெறும் குழந்தைகளும் அமைந்துவிடுகின்றனர். காதலால் ஒன்றுபட்டவாழ்வினராக இருக்கின்றனர் மிகப்பலர். அவர்களை விடக்கட்டாயத் திருமணம் செய்து கொள்கின்றவர்களே மேலெனப்படுகிறது. ஏனெனில் காதலும் காதலரும் உடலின்பம் ஒன்றையே குறிப் பாகக் கொண்டு காதலைக் கைக்கொள்ளுகின்றனர். இதனை வெளிப்படையாகக் கூறிக் கொள்ள இயலாமை யால் அதற்குப் புராணக் கற்பனைகளையெல்லாம் புகுத்து கின்றனர். இதனால் பலவித இடையூறுகளுக்குப் பெண்ணினங்கள் ஆளாவதும் நேர்மையானவர்கள் நிலை யழிவதும் ஏற்படுகிறது. காதலிப்பது,நன்றாக ஆராய்ந்து வாழ்க்கையின் பிற்றை நாளை எண்ணி உணர்ந்து மன தைத் திறத்தல் வேண்டும். அப்படியில்லையாயின் கட்டாயமணமே மேலானதாகும். இனி மனைவியர்: கணவனுக்குக் கல்விப்பயிற்சிஇல்லையாயின் தான் கற்ற வளாக இருந்தால் கணவனுக்கு ஏனைய போதனைகளைச் சொல்லுவதைவிட கல்வியைப் போதித்தல் நல்லது. கணவன்கற்றவனாயிருப்பின்; அவன், மனைவிக்கு அழகு

அமைப்பு இருக்க வேண்டுமெனஎண்ணுவது போலக் கல்வியும் இருத்தல் வேண்டுமென எண்ணிப் பயிற்று வித்தல் வேண்டும். இவ்வாறு புதுவரலாற்றின் தலைவர் களாயமைந்த கணவன்மனைவியர், காதலன் காதலியர் செயலாற்றினுல் கல்வியின்மை மறைந்தொழியும். அறிவு வளரும், நேர்மைகுடிபுகும், இன்பம் நிலைக்கும். இதனை, பலஇடங்களிலே பலவகையாக வலியுறுத் தியிருக்கின் ருர்,தகாதனவற்றைக் கண்டித் திருக்கின்ருர். அணிபணி களால் அடையும் ஆக்கமின்மை-மனமாண் பற்றவாழ்க் கையில் உள்ள வெறுத்தற்குரிய செயல்கள். இவைகள் அவர்கடிந்த பலவற்றுள் சில. பெண்ணின் கைம்மையை நீக்கத் தான்எத்தனைபிறப் பாயினும் பிறந்து செய லாற்று வேனென்று கூறுகின்ருரெனின் பெண்மை வளர்ச்சியின் பால் அவர் கொண்ட உயர்வுக்கு அளவும் உண்டோ? ஏன் அவர் அவ்வாறு கருதுதல் வேண்டும். பெண்ணினம் ஆக்கத்தின் முதலிடம். ஓடிக்கொண் டிருக்கின்ற பெரிய ஆலைக்கு முதற் சக்கரம் (பிளைவீல்) போல மனித இன இயக்கத்தின் முதலிடம் பெண். எனவே தாய்மை இனமாகிய அதன் நலிவுள்ள நிலை நீக்கப்படவேண்டுமெனக் கருத்துட் கொண்டார் நம் திரு. வி. க. இவற்றையெல்லாம் அறிந்த பின்னராகிலும் பெண்களை இழிவு படுத்தும் நிலையை விட்டு அவர்களைக் கல்விக் களஞ்சியங்களாக, நாட்டின் கண்காணிப்பாள ராக, உடனிருந்து செயலாற்றும் உத்தமத் தோழர் களாக எண்ணி அதற்கான முறையில் ஆணினம் செய லாற்றுமாக. ஆணினம் தவறி விட்டாலும் பெண்ணி

னம் தனக்குரிய தகைமையும் கடமையும் உணர்ந்து தானே முந்துற்றுச் செயலாற்றுமாக. உலகம் ஒவ்வொருவருக்கும் உடைமையானது. அதற்கு ஆதாரமும், ஆள் முறைவகையும் அறிவுதான். அதனைப்பயன்படுத்துங்கள். எங்கெங்கோ திசைமாறிச் செயலின்றி நாலாபக்கங்களிலும் திரிந்து நிலை இது தானென்று, உண்மைக்கு மறைப்பிட்டிருப்பதை அறியாது மயக்குற்றிருக்கும் மாதரினத்திற், குமங்காத ஒளியுடன் விளக்கமான விசாலமான பரப்புடன் ஒளி தருகின்ற கலங்கரை விளக்கம் திரு. வி. க. அந்த விளக்கத்தின் வழியிலே அடிக்கடி எடுத்துக் காட்டும் மடமை வெறு நம்பிக்கை போன்ற இருள் சூழல்களைக் கடந்த கரைக்கு வந்து சேருங்கள். சேர்ந்த பின் மீண்டும் இருப்பவர்களுக்கு உங்கள் கடமை மறவாது நல்வழிகளை நயமுற விளக்குங்கள். அப்போது நாடு ஆக்கமுறும். தீமைகள் தீய்ந் தொழியும். நல்லன நிலவும். இதுதான் என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற கொள்கையை இறுதி மூச்சு வரையும் விடாது செயலாற்றிய ஏந்தலுக்கு நீங்கள் செய்யும் கைமாறு. தந்தையின் சொத்துக்கு மகன்-அந்த அழைப்புக்கு இலக்காகி இருந்து ஆளுவதைப்போல என் கடன் பணி செய்து கிடப்பதே என்பதைக்கொள்ளுங்கள். கொண்ட கொள்கையைக் குறைவின்றி நிறைவேற்றுங்கள். செய்வீர்களா? செய்தால் கிடைக்கும் பயனை எதிர்நோக்குங்கள். பயனென்ன? அறிவற்றவரைப் பெற்ற தாயர்கள் இருக்கமாட்டார். கல்வியில் தேராத கணவன் மனைவியரைக் காண முடியாது. கண்

மூடித்தனமான கட்டுப்பாடுகள் கெட்டொழியும். கெடு மதி படைத்தோர் பூண்டற்றுமறைவார்கள். எல்லா நல மும் ஒருங்கே வந்தெய்தும். இதுதான் திரு. வி. க. காண விரும்பிய தாயகம். அவர் வாழ் நாளிலே வகுத்து வழி நடந்த இடம் இலட்சியக்கோட்டை. எத்தனையோ பூசலையும் ஏசலையும் தாங்கச் செய்த தன்நலமற்றபணி. இதனைச்செய்ய மறந்தார் திரு. வி. க. வை மறந்தவரே! இல்லை தாயகத்தை மறந்தவரே என்பதில் தவறென்ன இருக்க முடியும். இதோ பெண்ணினத்தின் பேதமை நீக்கிய கலங்கரை விளக்கம்.

உயர்ந்த நோக்கத்தோடு குழந்தைகளை வளர்க்க வேண்டும். என்று முழுமுயற்சியுடன் பாடு பட்டு வரும் பெற்றோர்களும் இளைஞர்களும் உண்டு. செடி கொடி களையும் மரமட்டைகளையும் சீர்திருத்தி விடுகிறான். புது மையைப் படைக்கிறான் விஞ்ஞானி. அவை உயிர் உணவு உடையவையாயினும் உலவ உந்த உரையாடவகையற் றன. மனிதன் அப்படியல்ல. இளைஞர்களை அவ்விதம் சீர் செய்வதும் முடியாது, அவரவர்களுக்குத் தம் வாழ் விலே அக்கரை வேண்டும். தம்பீ! நீ நல்ல ஆடை உடுத்த விரும்புகின்றாய்-உணவு உட்கொள்ள ஆசைப்படுகின்றாய் அதேபோல் உன் அறிவையும் வளர்க்க ஆசைப் பட வேண்டும். அடிக்காத ஆசிரியரைப் போற்றுகின்றாய்! அடித்துப் பாடஞ் சொல்லும் ஆசிரியரை வெறுக்கின் றாய். அவர் உன்னை அடிப்பது எதன் பொருட்டு-அச் சுறுத்துவது ஏன்? என்பதை நீ உணர வேண்டும். அவர் உனக்குப் பகையாளியல்ல. சண்டைக்காரரல்ல. உன்

உயர்வுக்காகப் பாடுபடுபவர். அதை நீ உணர வேண்டும். தாய் தகப்பனாரைத் தொல்லை படுத்தாதிருக்க வேண்டும். எல்லோராலும் போற்றப் படுபவனாக வாழ வேண்டும்.

திரு. வி. க என்றொரு தாத்தா இருந்தார் தெரியுமா உனக்கு. அவரைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறாயா ? மிகவும் நல்லவர். உன் வயதிலெல்லாம் அவர் பள்ளிக் கூடத்திலே முதல் தரமாகப் படிப்பவர்: ஆசிரியர்களுக்கு அவரிடம் அதிக மதிப்பு. படிப்பில் மட்டுமல்ல தேகப் பயிற்சி, தோட்டவேலை இவைகளிலெல்லாம் முதன்மை பெற்றவர். அவரைப் பற்றி நீ தெரிந்து கொண்டால் மட்டும் போதாது. அவரைப் போல் இருக்க நீயும் முயற்சி செய்ய வேண்டும். அப்போது அவரைப்போலவே உன்னையும் உலகோரெல்லாம் புகழ்வார்கள். கொண்டாடுவார்கள். உனக்குப் படிப்பிலே சோம்பேறித்தனம் வரும் போது அந்தத் தாத்தாவை நினைத்துக் கொள். அவர் சோம்பலின்றிப் படிப்பார், பரீட்சை வரும் போது அவரை நினை. அவர் பரீட்சையில் முதன்மையாகத் தேரியவர்,

நீ தேகப் பயிற்சி வகுப்புக்குச் செல்லாத நாட்களில் அவரை எண்ணிக் கொள். அவர் தன் உடலை மிக வலுவுடன் வைத்திருந்தார். அதை எண்ணிக் கொண்டாயானால் தேகப் பயிற்சி வகுப்புக்கு நீ போகாமல் இருக்க மாட்டாய். உனக்கு எப்போதாவது நோய் வந்து விட்டால் மருந்து உட்கொள்வதோடு மட்டும் நின்று விடாதே. நோய் குணமான பிறகு இனியும் நோய் வரா

திருக்கத் தேகப் பயிற்சி செய். அவர் அப்படித்தான் செய்தார். அவருக்கு ஒரு சமயம் கால் கைப் பிடிப்பு ஏற்பட்டு விட்டது. அதற்கான மருந்துகள் உட்கொண்டு நோயைக் குணப் படுத்திக் கொண்டார். பிறகு அதனுல் ஏற்பட்ட பலஹீனத்தைப் போக்கத் தேகப் பயிற்சிகள் மூலம் உடலை வலுப்படுத்திக் கொண்டார். அவருக்கு உன் போன்ற இளைஞர்களிடம் அன்பு அதிகம். இளைஞர்களின் மகாநாட்டில் தலைமை வகித்துப் பேசியிருக்கிருர். அவரது இளமைக் கால விளையாட்டுகளும் செயல்களும் உனக்குக் கேட்க மிக விருப்பமாக இருக்கும். ஆனுல் அவர் உண்மையில் உன்னைப்போலத்தான் விளையாடிக் கொண்டிருந்தார், இயற்கைகளைக் காண்பதிலே அவருக்கு அளவு கடந்த ஆசை. அவர் இயற்கையோடு பேசுவார். மலை-மரம்-ஆறு-கடல்-அரங்கு இவைகளுடன் அவர் பேசுவார், அவை பேசாது, சென்று பேசினுலும் வாய் திறந்துபேசாது. செயலாற்றிக் கொண்டிருக்கும். அதன் ஆற்றலைக் கடமை என எண்ணி உணர்ந்து தானும் கடமையாளனுகத் திகழ வழி வகுத்துக் கொண்டார். நீயும் அவ்விதம் இருந்தால் இரக்கமும் கடமை உணர்ச்சியும் உனக்கு ஏற்படும்.

கலங்கரை விளக்கத்தைட் பற்றி நீ படித்திருப்பாய். அது கப்பல்களுக்கு திசை அறிவிக்க நிற்கிறது என்பதையும் படித்திருப்பாய். கலங்கரை விளக்கத்திற்கு என்ன கவலை. கப்பல் எந்தத் திசையில் போனுலென்ன என்று இருந்துவிடுகிறது. இல்லையல்லவா ? இப்போது உன்னை ஒரு கப்பலாக நினைத்துக் கொள். உலகம் ஒரு

கடல் அதில் இப்போது நீ பள்ளிப் பருவத்தில் பயணப் பட்டுக் கொண்டிருக்கிருய். நல்ல பிள்ளையாய் படிப் பிலே சிறந்தவனுக நீ தேர்ச்சி பெற்ற மாணவன் என்ற தகுதியை வெற்றிக் கரையிலே காண வேண்டும். இதற் குக் கலங்கரை விளக்கமாய் அமைந்திருப்பவர் திரு. வி. க. அவரது இளமைச் செயல்கள் உனக்கு வழிகாட்டும். அவர் பற்றிய உன் நினைவு உனக்கு ஊக்கமளிக்கும். மறந்துவிடாதே அவர் தந்த முறைகளை ! கருத்தாகப் படிக்க வேண்டும். தாய் தந்தையர் சொல் தவறுதல் கூடாது. யாருக்கும் தீங்கு செய்யக் கூடாது. பிற உயிர் களிடம் அன்பு வேண்டும். உன் வேலைகளைப் பிறர் செய் வதை விட நீயே செய்ய வேண்டும் என்ற ஆசையும் ஊக்கமும் வேண்டும். பிற மொழிகளைக் கற்கவும் கற்ற வர்களிடம் கேட்டு அறியவும் வேண்டும்.

உன்னுடன் படிக்கும் நண்பர்களுக்குத் தெரியாத வற்றைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். ஆனல் பரீட் சையிலே திருட்டுத் தனம் செய்வதற்கு இடம் கொடுத் தல் கூடாது இவையெல்லாம் அவர் வகுத்த வழி. அதன் ஒளியிலே வெற்றிக் கரையை நாடிச் செல். நீ தேர்ந்துவிட்ட பின்னர் உன்னை யொத்த மாணவர்களுக் கூடிய வரை பயிற்றுவித்தல் வேண்டும். கல்லாதவர் களைக் கண்டால் அவர்கள் கல்லாதவர்களென்று தள்ளி விடாதே. கற்கத் தவறியவர்கள் என்று அவர்கள் பால் இரக்கம் கொள். இயன்றவரை அவர்களுக்கு உனக்குத் தெரிந்தவைகளைச் சொல்லிக் கொடு. நீ படித்தவன் என் பதில் பெருமையில்லை. உன்னைச் சேர்ந்தவர்கள் படித்து

வர்கள் என்று பிறர் சொல்வதுதான் பெருமை. உன்னைச் சேர்ந்தவர்கள் படிப்பில்லாதவர்கள் என்று சொல்லும்போது வெட்கப்படு. அப்போதுதான் உனக்கு அவர்களிடம் அக்கரை ஏற்படும். இதுதான் உன் தாத்தா திரு. வி. க. அறிவித்த வழி. இவற்றிலெல்லாம் அரசியலாரும் பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டும். அரசியலென்பது கட்சிக்காரர்களின் கூட்டுத் தொகுப்பு என்ற முறையில் இருந்து வருகிறது, கட்சியினல் தீங்கு நன்மை என்பது ஒரு சாராருக்கு நலனும் ஒரு சாராருக்குத் தீமையும் இருப்பதாக இருத்தல் கூடாது என்பதுதான். திரு. வி. க. அவர்களையும் கூடத் தற்போதைய அரசியல் கட்சிகளில் ஒன்றாகிய கம்யூனிஸ்ட் என்று கூறுபவர் பலர்–அவர் கருத்துகளைக் கொண்டு அவர் சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்தவர் என்பர் வேறொரு வகையினர். அவர் பண்பாட்டையும் கொள்கையையும் கொண்டு அவரை சைவர் என்று கூறுவர் மதச் சார்புற்றோர் இவை மூன்றிலும் அவர் இருந்தார். மூன்றாகவும் இருந்தார். நூறு ரூபா நோட்டினுள்ளே ரூபா அணா பைசா இருப்பது போல.

இதன் மூலம் அவர் உறுதிப் படுத்தியது யாதெனின் ஒரு குறிக்கோளை நிறைவேற்றுதற்கு மத-கட்சி-வேறுபாடுகள் தடை நிற்காது என்பதேயாகும். மொத்தத்தில் அவர் இரண்டடியால் அறமுறை கூறும் குறளே போல திரு. வி. க என அமைந்த குறளாகவே இருந்தார். அரசியலிலே அவர் ; காங்கிரசிலே, சோஷலி

ஸத்திலே ஜஸ்டிஸிலே கம்யூனிஸத்திலே இருந்தார். இருந்ததோடு மட்டுமல்ல, இவையனைத்தும் மிகச் சிறிய மாறுபாடுகளைக் கொண்ட ஒரே நோக்குடையவை என்பதையும் நிரூபித்தார். மதத்திற்கும் நாட்டுப் பணிக்கும் எந்தவிதப் பகையும் கிடையாதென்பதும், மதங்களில் எல்லா மதங்களுடைய நோக்கமும் ஒன்றே என்றாலும் அவரவர் விடாப்பிடியான கொள்கைகளைக் கொண்டிருக்கின்றனர், அதனைத் திருத்துதல் இயலாது எனினும் அவரவர்களே உய்த் துணர்ந்து எம் மதமும் ஓர் மதம் என்ற அடிப்படையில் 'மனிதரில் அமைப்பால் மனிதரென்பதில்லை' என்பது போல இருத்தல் வேண்டும் என்பதையும் நிலை நாட்டினார்.

அரசியலிலே அவர் அமைந்திருந்தது போலவே சைவ-வைணவ—கிறித்தவ—பௌத்த— சமயங்களிலே கலந்து கொண்டாரென்பதும் குர்ஆன் பாடங்கேட்பதில் அவருக்கு இளமையிலிருந்த வேட்கையும் ஏனைய மதம் பற்றிய நூல்களை வெளியிட்டுள்ளார் என்பதும் எண்ணிப் போற்றத் தகுந்ததாகும். அரசியலென்பது வள்ளுவர் கண்டதும் நாட்டின் நிலையுணர்ந்ததுமாக அமைதல் வேண்டுமென்பது அவர் உயிரொன்றிய கருத்தென்பது காணக்கிடக்கின்றது. நாட்டு மக்களுக்கு அறமுறையில் தொண்டாற்றுவதே சிறந்ததென்றும் அதனை விட்டு அடக்கு முறைகளால் எவ்வித நலனும் பெற முடியாதென்றும் உறுதி உள்ளம் கொண்டவர் நம் திரு. வி. க. ஆனால் எப்போதும் எங்கும் நேர்மைக்கு வரவேற்பளித்தவர். தம்முள் கருத்து வேறு பட்டாரே

யாயினும் செயற் கருஞ் செயல் செய்தால் அதனைப் பாராட்டுவதே அவர் பண்பாக இருந்தது. இதனை காங்கிரஸில் அவர் ஈடுபட்டுப் பல இயக்கங்களை நடத்திய போது தம்முடன் பணியாற்றியவர்களின் ஆற்றல் பெருக்கையும் பின் அவர்கள் பதவி பட்டம் முதலியவற்ருல் கண்மூடிகளான போது அதனையும் எடுத்துக் காட்டியிருக்கிருர். அது :—

ராஜகோபால ஆச்சாரியாரவர்களோடு பணியாற்றியபோது அவரின் அறிவு சிந்தைஆழம், நியாய வாதம் முதலியவற்றைப் பாராட்டி எழுதிய திரு. வி. க. அவர்கள் "ஆணவம் பொதுவாக மந்திரி சபையில் நுழைந்து திருவிளையாடல் புரிந்தது" என்றும் கூறத்தவறியதில்லை. கொள்கை மாறுபடாது ஒன்றுபட்டகாலத்திலே உயர்வுதந்த ஈ. வே. ராவுக்கு கொள்கையில் மாறுபாடுற்றபோதும் அவர் பணியை வியந்து போற்றியுள்ளார். இவ்வாறு முற்போக்கைச் செய்தவர் திரு. வி. க. என்ருல் அது மிகையாகாது, அந்த இயக்கமும் இதயமும், அவரது வாழ்க்கையின் தொடக்கத்திலேயே ஏற்பட்டு விட்டது. அவர் ஸ்பென்ஸர் கம்பெனியில் வேலை பார்த்து வந்த போது அப்போதையதீவிரமான பத்திரிகைகளுள் ஒன்ருகிய வந்தே மாதரம்" பத்திரிகையைத் தொழிலாளருக்குப் படித்துக் காட்டியது குற்றமெனக் கருதப்பட்டது கண்டும், எச்சரிக்கையைக் கேட்டும் அலுவலைவிட்டு விலக்குவதன் முன்தானே விலகிக் கொள்வதென்ற முடிவைச் செய்து கொண்டு விலகிவிட்டார். அப்போது அவர் அறிவுக்காகக் கூடும் தொழிலாளரின் வாழ்வு எத்தகைய

நிலையிலே இருக்கிறது என்பதையும் அத்துடன் தொழிலாளர்களுக்குச் செய்தியை அறிவித்தல் வேண்டும் என்ற பெருநோக்கும் பாராட்டுதற்குரியது. இந்த உள்ளூறிய எண்ணந்தான் பிற்றை நாளில் அவரைத் தொழிலியக்கம் காணத் தூண்டியிருக்கவேண்டும். மேலும் தொழில், நாட்டிலே—உலகிலே எங்கெங்கும் பொதுப்பட்டு ஒன்று. ஒற்றுமை, ஒற்றுமை என்று கூறப்படுபவனவெல்லாம் தொழில் ஒற்றுமையைக் கவனித்தால் ஒற்றுமைக்கு விளக்கம் கூற வெட்கப்பட நேரிடும்.

தொழிலாளிகளின் செயலுள் ஒன்றை எடுத்துக் கொண்டாலும் அதில் எல்லாத் தொழிலாளரும் பங்கு பெற்றிருப்பார். மிகநுணுகிய எவரும் இதுவரை கண்டு பிடிக்கப்படாத விஞ்ஞானம் கண்டுபிடிக்கப் படுகிறது. என்று கூறுவர். அவர்களுக்கு உதவியது எது. சோதனைக்குழாய் அதிலே கண்ணாடிவேலை செய்பவன்- அவன் துருத்தி முதலியவற்றிற்குத் தச்சுத் தொழிலாளி தச்சுவேலைக்குரிய கருவிகளைச் செய்தல்—கொல்—இரும்புத்தொழிலாளி இவ்வண்ணம்; நல்லதுணி நெய்ய உதவியது—தறி. அதன் அமைப்பாளர்கள் முறையே இந்தத் தொழிலாளிகள். இனிமை தரும் இசை, அங்கேயும் இத்தனைபேரும் பங்கு கொள்கின்றனர், இவ்வாறு தொழிலின் தொடர்பும் ஒற்றுமையு மிருக்க அத்தொழில் போற்றப்படாததும் தொழிலாளி நலிவதும் ஏன்? தொழிலின் வன்மையை உலகினர் உணராமைதான். பெருந்தனக் காரனாக இருப்பவனும்—இருக்க வசதி

செய்துதந்தது யாரென்பதைச் சிந்தித்தால்-சட்டங்களை ஆராய்வோரும் அதன் முதற் பிறப்பிடம் எங்கே என் பதைச் சிந்தித்தால் மனிதன் தன்னை மனிதன் என்று கூறிக்கொள்ளும் தகுதியைத்தந்தது தொழில் என்பதை எண்ணுமலிருக்க முடியாது. இவற்றை உணர்தவர் திரு. வி. க. அதனுலேதான் அத்தகைய அரசியல் அலை களில் அதன் மோதுதல்களில் நின்றும் மூழ்கியும் கடந் தும் கரை இலக்கைவிடாதிருக்க முடிந்தது.

அவரின் அரசியல் அனுபவங்கள் ஒவ்வொன்றும் வருங்கால அரசியல் வழியினருக்குத் துணையா இருக் கும். அதுமட்டுமல்ல அரசியலைப் பற்றி ஆயும் வன் மையும் ஏற்படும். தற்போது அரசியல் பலரால் தூற்றப் பட்டும் போற்றப்பட்டும் வருகின்றது, அந்த ஒரு காரணத்தையும் செயலையும் கொண்டு மட்டும் மக்கள் அரசியலை அறிந்து கொண்டிருக்கின்றனர் என்று கொள்ளமுடியாது. இப்போதைய பொதுமக்களது முடிவு தந்தமக் கெனப் பாதிக்கப்படும் நிலைகளிலெல் லாம் வெறுத்துரைப்பதையும் தமக்கு ஆக்கம் விளைவிப் பதாய் இருப்பவைகளைப் போற்றியுரைப்பதுமாக இருக் கின்றனர். இதே நிலையில் போற்றுதலையும் தூற்றுதலை யும் பந்தயக் காய்களாக வைத்து ஆடும் சூதாட்டக் களமாகக் கருதுகின்றனர் அரசியலை. ஆனல் ஆட்டம் ஆடும் வரை காய்கள் நகர்த்தப்படவும் எடுக்கப்படவும் வேண்டியதுதான். ஆதலின் இது நேர்மையான அரசிய லறிவில்ல. நீங்கள் தேவையை வரவேற்பதுபோலவே அரசியலாரும் செய்கின்றனர். உடனே மனிதனுக்கே

ஏற்பட்டு விட்டதான தன்வரைச் சமாதானத்தைப் பிறர் வகையில் ஒத்துக் கொள்ள முடியாதவனாகிறான் மனிதன். தவறு அரசியலாரிடமும் அன்று. அரசியலை மக்கள் அறிந்துகொள்ளாமலிருப்பதினாலேதான். அரசியல் ஒரு தனிப்பட்ட மனிதனுக்குரியதன்று என்னும் எண்ணம் எல்லோருக்கும் ஏற்படும் வரை அது ஒருவருக்காகவே பயன்படுத்தப்பட்டு வரும்.

அதனை நீக்கிக்கொள்ள வேண்டும். அரசியல் மக்களால் ஆக்கப்படுவது. அரசியல் ஆக்கப்படுவதோடு மட்டுமல்ல அதன் அமைப்பில் ஒவ்வொருவரும் ஒரு உறுப்பினர் என்ற உணர்ச்சி ஒவ்வொருவருக்கும் ஏற்படவேண்டும். அப்போதுதான் அரசியலில் ஏற்படும் உயர்வு தாழ்வுகள், இயலாது நிறுத்தப்படும் செயற்குறைபாடுகள் தெரியவரும். அன்றியும் அத்தகைய எண்ணம் மேற்பட்டால் தனக்குத்தானே அரசியலைப் பற்றிய கவலையும் முற்போக்கில் நாட்டமும் ஏற்படும். இவ்வித நிலை நிகழ்ச்சிகளிலே வரும் காலங்களுக்காகத் தான்காத்திருந்தார் திரு. வி. க. அதை அவர் நிகழக்காண முடியவில்லை. என்றாலும் அதன் தேவைக்குரிய இன்றியமையாமையை நமக்கு விளக்கிவிட்டுச் சென்றிருக்கிறார். அதன்படி மக்கள் அரசியலமைப்பை அறிந்து கொள்ளவேண்டும். அறிந்து கொண்டால் நாட்டினர் நாட்டு அரசியல் முதலியவற்றில் பங்குகொள்ள வாய்ப்பை; அதன்பால் தவறான மாறுபாட்டு எண்ணம் தோற்றாமல் இருக்கும். இதுவரை இதனைப்பற்றிய சிந்தனை இன்றிக்காலத்தைக் கழித்து வந்தோம். இனி

அவ்வாறு இருத்தல் ஆகாது என்ற பாடத்தையும், அதன் இன்றியமையாமையையும் உணரவேண்டும். இத்தன்மை இல்லாமையாலேதான் அரசியலைப் பெரும் பூதமோ புயலோ என்றெண்ணி அஞ்சுவதும் அதன் பயனாக நேர்மை குன்றியவர்களாக நேருவதும் ஏற்படு கிறது; அத்துடன் கல்வியின்மையை நீக்கவேண்டும். கல்வியறிவுக் குறைவினால் நேரும் இழிவும் பழியும் நம் நாட்டில் மிகுதி என்பதை எண்ணி வருந்தியிருக்கிறார். வேறு அவர்தான் என்ன செய்திருக்கக் கூடும். அந்த உணர்ச்சி நமக்கு வேண்டும். கல்வியிற் சிறந்த நாடு நம் நாடு என்பதை எந்நாட்டவரும் உணர்ந்திருந்தது நீங்கக் கல்வியில்லாதவர் நிறைந்த நாடு யாதெனில் அது இந் நாடேஎன இழித்துரைக்கும் நிலையெய்தி விட்டது. இனி அது நீங்கவேண்டும். அதனைச் செய்து முடிப்பதுதான் முதன்மையான கடமையும் மறைந்த திரு வி. க. அவர் களுக்கு நாம் ஆற்றும் கைமாறுமாகும். கல்மண்டபங் களும் சிலையும் அன்னாரின் நினைவுச் சின்னங்களாக இருக்கலாம். ஆனால் அது அன்னாரின் உள்ளுறைந்த பணியை ஆற்றும் செயல் இலக்கியங்களாக முடியாது- நடவாது.

இன்று நாம் பல வீரர்கள் அறிஞர்கள் செயற் கருஞ்செயலாற்றிய செம்மல்கள் புலவர்கள் ஆகியோ ரின் சிலைகள் மண்டபங்கள் ஏனையவற்றைக் காண் கிறோம். அத்துடன் அவற்றின் பயனால் எத்தனை பேர் அத்தகையோரின் நிலையடைந்தனர் என்பதையும் நாம் அறிந்திருப்பது கடினமல்ல. எத்தனையோ பேர் என்றோ

ஒரு நாள் ஏற்படும், அவைகளின் சந்திப்பில் யாரேனும் கேட்டால் அவர்களுக்கு அவையிற்றின் வரலாற்றை வழிக்கதையாகச் சொல்லிக்கொண்டு போகும் நிலையி லிருக்கின்றனரேயன்றி அவை புகழப்படும் முறையினைக் கூடப் போற்ற அறியாத நிலையினராயிருக்கின்றனர். நாட்டில் வீரர்களோ அறிஞர்களோ புலவர்களோ இருக்கலாம். ஆனல் அவர்களெல்லாம் அச்சிலைகளைக் கண்டும் அதன் வரலாரறிந்தும் தான் உயர்வு பெற்றன ரென்றும் சிலைகளும் சின்னங்களுந்தான் ஒரு சிலரைக் கோழைகளாக்கினவென்றும் சொல்லமுடியாது. எனவே அதுவல்ல நாம் ஆற்றும் கடமை. அவ்விதம் அமைக்கப் படும் மண்டபங்களிலே புலவர்கள் குழுமி புலமை ஆய்வு நடத்தலாம். அங்கே புறநானூறு பொங்கிப் பொலிந்திலங்கலாம். ஆனல் பொலிவிழந்து நாளும் உழைத்துழைத்து உருச்சிதைந்தோர்க்கு அது ஓய்வு உறைவிடமாக ஆகலாமே தவிர ஓடிந்த வாழ்வை உருவாக்க அது அமையாது. சொல்லிக் கேட்கும் நிலை அங்கே நிலவுமேயல்லாமல் சொன்னதை ஆராயும் தன் மைக்கு அது உதவாது. நினைவுச் சின்னங்கள் எனக்கு விரோதமானவையல்ல. மேலும், ஒருவனின் விரோதத்திற்கு அஞ்சியோ அதனை எண்ணியோ நாட்டில் எதுவும் நிகழ்வதில்லை. ஆனாலும் இவை செயற்பாலன என்று சொல்லும் உரிமை மனித இனத்தை விட்டு இன்னும் பறிக்கப்படவில்லை என்று நம்புகிறேன். எனவேதான் திரு. வி. க. அவர்கள் கண்ட, நாட்டங் கொண்ட நாட்டை நாம் காட்டுவிக்க

வேண்டும் என்று கூறுகிறேன். தொழிலாளர்களிடையே நலம் நிலவ வேண்டும். எப்போது நிலவும்? உழைப்ப தற்கே தான் பிறந்திருக்கிறோம் என்ற உள்ளப் பண்பாடு என்று அவர்களை விட்டு ஒழியும். சாதி சமயச் சண்டை யும் சச்சரவுகளும் நீங்கி சமத்துவ வாழ்வு அவர்களி டையே எவ்வாறு நிலவும். பகலெல்லாம் உழைப்பில் நாட்டம் செலுத்திவிட்டு அதன் பயனைத் தற்போதை யத் தேவைக்கு அவன் பயன் படுத்திக் கொள்ள விரும் பும் போது ஏமாற்ற மடைந்து, அந்த வேகத்தில் தன் தொழிலாளர் உலகை அவன் நோக்குகிறான். அவர் களின் அவலநிலை அவன் கண்களுக்குப் புதுவெறியை ஊட்டுகிறது. உள்ளம் புழுங்குகிறான். அவன் துடித்த உள்ளம் புயலாக மாறுகிறது. ஆனால் புயல் வேகம் இந்நாட்டில் பயன்படாது போகும் என்பதை அவன் அப்போது உணர முடிவதில்லை. செயலாற்றுகிறான். செயலைச் சிதைப்போர் சீறி எழுகின்றனர். சிதைக்கப் படுகின்றனர் செயலாற்றுவோர். வீரர்களாக இருந்து செயல் புரிந்தோர் முறியடிக்கப்படவே ஏனையோர் அந்த ஒரு சம்பவத்தை உள்ளத்துள் கொண்டு அஞ்சி வாளா இருந்துவிடுகின்றனர். ஏன்? சிந்திக்கும் திறம் இன்மையால். மற்றும் ஏனையோர் ஏதோ ஒரு வகையில் செயலாற்ற முனைகின்றனர். அதில் கால தாமதம் ஏற் பட்டுவிட்டால் கைமுடக்கமாக இருந்து கடைசியில் தம் கொள்கையையே கைவிடவேண்டிய நிலையை அடை கின்றனர். இதனை உணர்ந்த எதிர்தரப்பினர் காலந் தாழ்த்தலைக்கூட ஒரு கருவியாகக் கொண்டு தமது

வலிமையை நிலைநாட்டுகின்றனர். காரணம் தமது செயலால் ஏற்பட இருக்கும் எதிர்காலத்தை அவர்கள் எண்ணிப் பாராததும். அதற்குரிய தகுதியான முறைகளை ஏற்படுத்தியிருக்கவேண்டும் என்ற நிர்ணயம் இல்லாமையுமே காரணமாகும். இன்றையத் தொழிலாளர்கள் நிலைக்கு ருஷ்யா எடுத்துகாட்டப்படுகிறது. ருஷ்யாவின் விடுதலையைப் பற்றிப்பேசப்படுகின்றதேயல்லாது எவ்விதம் இருந்த அந்நாடு விடுதலை பெற்றது என்பது விளக்கப்படவில்லை. அல்லது அதனை அறிந்துகொள்ள :இவர்கள் விரும்பவில்லை என்பதுதான் என் நண்பர்கள் பலர் கூறுவார்கள் நானந்தக் கொள்கையை விடமாட்டேன். நீ உன் எந்த வித விவாதத்தாலும் என்னை மாற்றிவிடமுடியாது என்று கூறுவார்கள். அவர்களின் விடாப்பிடியான கொள்கைக்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால் அவர்கள் விடாப்பிடி பல முறைகளில் தட்டிப் பரிக்கப்படுகிறதே? ஏன்? சரியான கம்யூனிஸக் கொள்கை எங்களுடையது என்பார்கள். ஒத்துக் கொள்கிறேன். முழுகம்யூனிஸம் என்பது அரச முறை இருக்கக் கூடாது என்பதே. 'சமத்துவம் இந்த நாட்டில் ஏற்படவேண்டும் என்பதற்காகத் தான் பாடுபட்டுக்' கொண்டுவருகிறோம், அதற்குள் அவசரப் படுகிறார்களே, இடையே புகுந்து கெடுக்கிறார்களே என்கின்றனர். சமத்துவம் ருஷ்யாவிலே நிகழ்வதாகக் கூறுவர். ருஷ்யா சென்று திரும்பிய என். எஸ். கிருஷ்ணன் அவர்களைக் கேட்டேன். அங்கே வேலை செய்பவர்களுக்

கெல்லாம் நிறையக் கூலிகொடுக்கிருர்கள் தெரியுமா. கரி அள்ளிப்போடுகிருன் அவன் ஆயிரக் கணக்கில் ஊதியம் பெறுகிருன்! என்ருர். அப்போது சிந்தித்தேன். சம்பளத்தில் ஏற்றத் தாழ்வு இருக்கத்தானே செய்யும் ஒருவருக்கொருவர் செலவு வகைகளில் மீத்து வைத்தால் அதன் நிலை ஏற்றத்தாழ்வுகளுக்கு அடிப்படியாகத் தானே இருக்கும் எவ்வாறு சமத்துவம் நிலவும்! இவற்றை எல்லாம் நோக்க அங்கேயும் அவர்கள் சர்வாதிகாரத்தில் பண இயக்கத்தில் இயங்கித்தான் வாழுகின்றனர். என்ருல்; ஆட்சியில்லாமல் இருக்க முடியுமா? ஆட்சி இருக்கத்தான் செய்யும்—சட்டம் இருக்கத்தான் செய்யும் என்பார்கள். அதுதானே இங்கும் இருக்கிறது என்பேன். அதற்கு என் நண்பர் இங்கிருக்கும் குளப்படிகள் அங்கே கிடையாது என்ருர் நான் கூறினேன்:—இதற்கு ஏன் அந்த நாட்டைக் காட்டுகிறீர்கள் இந்த நாட்டையும் அந்தக் கொள்கைகளை நிறைத்துச் செப்பம் செய்யுங்களேன் என்ருல் அதெப்படி முடியும் என்கின்றனர். ருஷ்யாவுலே புரட்சி எப்போது ஏற்பட்டது? ஜார் மன்னன் எப்போது வீழ்ந்தான் அங்கே இருந்த கொடுமையும் மக்களும் ஆட்சியுமே போரிட்டுக் கொண்டனர். ஒருபக்கம் ஜார் அவன் குழுவினர். இன்னொரு பக்கம் மக்கள் அவர்கள் தலைவர்கள். இவர்களிடையே மட்டுமே போராட்டம் அப்போதுதான் வெற்றி காண முடிந்தது புரட்சியின் எடுத்துக் காட்டாக இருக்கும் பிரஞ்சிலேதான் ரஸ்புடீன் தோன்றினன். ரஸ்புடீன் மதத்தின் பெயரால் மக்களை மருட்டி வந்தான். இங்கே தான் கவனிக்க வேண்டும்;

உள்ளம் குமுறி நொருங்கிச் சிதைந்து கொதித்தெழும் அமயத்தில் கூட மதத்தை அவர்கள் மதித்தனர். அதற்கு அஞ்சிமயங்கினர் என்ருல் உணர்ச்சியே உருவா யமைந்து போராடிய தாகக் கூறப்படும் அந்த நாட்டிலே, உலகமே கண்டிராத கொடுமைகளை நொருக்கிய புரட்சி தழைக்கக் காரணமாயிருந்த அந்த நாட்டிலே மதம் அவ்வளவு கொடுமைகளையும் அவர்களைத் தாங்கிச் செல்லுமாறு செய்த தென்ருல்பல வேறு மதங்களையும்; உழைப்பே எமது லட்சியம் என்று முழங்குவோரும் வேப்பஞ்சேலை அணிவதும், அலகு குத்திக் கொள்வதும் நடைபெற்றுவரும் மத நம்பிக்கைச் செயல்களையும் நீக்குவது என்று? இந்நாட்டில் அறிவு செழித்த அன்று, இவ்வாறு மொழி, சமயம், அரசியலென்ற பல்வகைத் துறைகளிலும் பங்கு கொண்டு பணியாற்றியவர் திரு. வி. க. அவர்களாற்றிய பணியினின்று நாம் அறிவது என்னவென்ருல் மனிதனாய் பிறந்துவிட்ட ஒவ்வொருவனும் அறிவறிந்த கால முதல் நாட்டுப்பணியைக் கருத்துட்கொள்ள வேண்டும். கருத்துட்கொள்வ தென்பது நாட்டுப்பணி ஏதோ ஒரு பொருள் அன்று அதனை மலிந்துகிடக்கும் தகைமை நோக்கி எடுத்து வைத்துக் கொள்வதென்பதும் இயலாது. முதியவர்கள் குடும்பத் தலைவாயிருப்பவர்கள் அதனை இளைஞர்களுக்குப் புகட்டவேண்டும். அது தேநீரோ குடிநீரோ அன்று. எனவே வாழ்கை நடைமுறையில் முதியவர்கள் (சிருரல்லாதார்) நடத்தி வந்தால் இளைஞர்கள் அதன்வழி நடப்பார்கள். ஓடி ஆடித் திரிந்து கொண்டிருக்கும் இளைஞனை அழைத்து மருந்து

அடம்செய்வான். ஆனால் அவனை அழைத்து நோயின் கொடுமையையும் அதற்குரிய மருந்தை அருந்தாது போ அருந்து என்றால் அவன் மறுப்பான். வெறுப்பான் ஞல் அதன்பின் அனுபவிக்க வேண்டிய பத்தியக் கொடு மைகள் இவற்றைச் சொன்னால் அவன் மருந்தை உட் கொள்ளத்தான் செய்வான். இது வாழ்க்கையிலே பெற் றோர்களுக்குப் பழக்கப் பட்டுப்போன செயல். ஆனால் வேறுவகையிலும் அவர்கள் அதனைக் கையாளு வதில்லை. குறிப்பாக பள்ளிக்குச் செல்ல மறுக்கும் செல்வனைத் தந்தை மிரட்டினால் தாய் பராமரித்து பள் ளிக்குப் போகவேண்டா மென்பதும் தாய் கண்டித்தால் தந்தை அணைப்பதுமாகப் பள்ளி நிறுத்தத்திற்கு ஒத் துழைக்கின்றார்களே யல்லாமல் அவனை நயத்திலோ பயத்திலோ கல்வியில்லாமையின் கொடுமையையும் இழி வையும் விளக்கி அவன் கல்வி முன்னேற்றத்தில் கருத் துச் செலுத்துவோரைக் காண்பதரிது. இதனால் ஏற்படு வதென்ன? கல்வி இன்மையால் நலிவான். இதன் மூலம் மடமைவளர வழி வகுக்கப்படுகிறது. இத்தகையவன் தனது வாழ்க்கையிலே என்ன நிலையடைவான். நாட் டிற்குமிக இன்றியமையாதது முதன்மையானது மொழி. மொழியின் வளர்ச்சியும் தேர்ச்சியும் மக்கட் பண்பாட் டைப் பெருக்கிக்கொள்ள உதவுபவையாகும். இதற்கு எடுத்துக்காட்டுத் தேவையிராது. ஊமையுடன் யாரும் உரையாட விரும்புவதில்லை. அதேபோலத்தான் உரை யாட உதவுவது மொழி. மொழியின் உதவியால் நாகரி கம், பண்பாடு, உறவு ஆகியவை பெருகும். இவ்வகை யில் மொழியின் உதவியினாலன்றி மக்களின் வளர்ச்சி

வளமுறமுடியாது. எனவே கலைவளர்ச்சி, இனவளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி ஆகியவற்றில் திறம்பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான் அறியாதவற்றை அறிய அறிந்தவற்றை அறிவிக்க அளவளாவ முடியும். இவற்றுள் முதலாவதாகத் தன் இனமொழி அதாவது நாட்டு மொழி அதனையே தமிழ் என்கிறோம். அத்தாய் மொழியிலே தேர்ச்சியுற்றிருக்க வேண்டும். மொழியின் மூலம் கலை பண்பாடு வளரும் என்பதைக் காரணம் காட்டி ஒருசிலர் வேற்று மொழிகட்கு நம் நாட்டிலே வித்திடுகின்றனர். அவர்களுக்கும் அவர்களைச் சேர்ந்தவர்கட்கும் கூறுவேன் பிறமொழிகளின் கலைகளும் பண்பாடும் வளரவேண்டும் என்றால் இப்போது பிறமொழி அறிவு பெற்றிருப்பவர்கள் இவ்வண்ணமே இருக்க, தாங்கள் அறிந்தவைகளைத் தம் வழித்தோன்றல் களுக்குச் சொல்லி விட்டு அவர்களைத் தம் தாய் மொழியறிவிலே உயர்த்துவதோடு அமைக. மற்றும் பிறமொழி வளர்ச்சிக்கும் பயிற்சிக்கும் உழைப்பைக் கொடுக்கும் அவர்கள் தமது மொழிக்கு ஆக்கம் தர முயல்வார்களானால் அது பெரிதும் பயன் தருவதாகும். மொழி வளர்ச்சியிலே ஏனைய நாட்டினரைவிட நம்மவருக்குப் பற்றுதல் குறைவு என்பது ஏனையநாட்டவர் கண்டுகூறும் நிலை இன்னும் இருந்துவருகிறது. இந்நிலையின் மாற்றத்திற் காகவே மறைமலையடிகள், திரு. வி. க. ஆகியோர் இயக்கம் கண்டு பணியாற்றினர். இவர்கள் மொழி உயர்ந்தால் வாணிப—வளம் யாவும் பெருகுமெனக் கண்டனர். இத்தகைய மொழி வளர்ப்பில் புலவர்கள், அமைச்சர்கள், அரசர்கள் போன்றோரெல்லாம் ஈடுபட்டிருந்தனர். குழுமிஇருந்து ஆராய்ந்தனர் என்றால் அந்நாளைப் பற்

றிய கனவும் ஒரு இன்பமாகுமன்றே ? இத்தகைய கனவு நனவாகி நிகழக்காண வேண்டுமென்பதே திரு.வி.க.அவா களின் இறுதி இதயத்துடிப்புவரை இருந்த இலட்சியம். இதற்காகவே அவர்களின் வாழ்நாட்களைப் பயன்படுத் திக் கொண்டு வந்தனர். திரு. வி. க. அவர்களின் நாட்டு நோக்கம் மிகத்திறமை வாய்ந்தது. நாட்டின் உயர்வை மக்கட்பேறு தொடங்கி அரசியல் ஈறுகப்பல பகுப்பு களாகப் பிரித்து நோக்கிக் கணக்கிட்டார்கள். அந்த முறைப்படியே சிறிது சிறிதாக அவற்றிலுள்ள குறை களையும் மாசுகளையும் நீக்கித் துடைத்து முன்னேற்றத் தைக் கண்டு வந்தார்கள். இதை அவர்களுடன் இருந்து கண்டவர்கள் கூறவும்—வாழ்க்கைக் குறிப்புகளை நோக் கவும் ஏனையச் செயலாற்றல் பகுப்பைக் காணவும் நன்கு புலனுகும். நாடு தற்போது மக்கள் முதல்வராகக் குடும்ப முதல்வராக இருப்பவர்களின் பாற்பட்டது. அவ்வாறு முதல்வர்களயிருப்பவர்கள் பல்வேறு சூழல் ஆகியவைகளினுல் தாம் முன்னின்று செயலாற்ற முடி யாது போகக்கூடும். எனவே தமது வழித்தோன்றல்களை நாட்டுப் பணிக்கான முறையில் வளர்த்தல் வேண்டும். அதற்கு அவர்கள் செய்ய வேண்டுவன தம் குலக்கொ ழுந்துகளைக் கல்விப் பயிற்சியில் முதன்மையுறச் செய்யவேண்டும். அத்துடன் அவர்கள் அஞ்சா நெஞ்சின ராய் வளரச்செய்ய வேண்டும். அதற்குரியன :— இளைஞர்களை அச்சுறுத்தாதிருப்பது, காரணமின்றி அவர்களுக்கு ஒன்று மற்ற பொருள்களிடத்திலும் பயப் படச் செய்யும் தன்மையை நீக்குவது. அவ்விதம் அஞ்

சாது வளரும் சிறுவர்கள் தங்கள் பருவக்காலத்திலே தம் செயலாற்றலிலும் அஞ்சாதிருக்குமளவுக்கு அவர்களுக்குத் துணைநிற்கும். இதனை திரு. வி. க. அவர்களின் குழந்தைமைப் பருவங்களைக் காணுந்தோறும் அறிவுக்குப் புலனாகும். அவர் பாம்பு பிடித்தல்—விளையாட்டிற் கலந்து கொள்ளல்; இவைகளிலெல்லாம் இற்றைநாள் இளைஞர்கள் கைதேர்ந்தவராகத்தான் இருப்பார்கள். எனினும் அவர்களிடையே கிளர்ச்சியைவிட அச்சம் தான் மிகுதியிருக்கிறது. இதனால் அவர்களின் அறிவு வளர்ச்சி தடைப்படவே செய்யும். உதாரணமாக வெளியே சேன்று திரும்பிய சிறுவன் வீட்டிற்கு வருகிறான். அவன் வருகை காலந்தாழ்த்திருந்தது. வீட்டிற்கு வந்ததும் அவனைக் கேட்கிறார்கள். அவன் உண்மையைக் கூறுகிறான். பயனென்ன? தண்டனையடைகிறான். எனவே அவன் உண்மை சொன்னால் தண்டனை கிடைக்கும் என்ற முடிவுக்கு வந்து விடுகிறான். அதன் காரணமாகப் பின் ஒவ்வொரு வேளையும் வரும்போதெல்லாம் நம்பத் தகுந்த காரணமாக ஒரு பொய்ச்சான்று தயார் செய்து வருகிறான். இதன் மூலம் அவன் உயர்வுக்குரிய தாய் தந்தையரை அன்பின் பிறப்பிடங்களையே ஏமாற்ற முனைகிறான். இவர்களிடம் அவன் பொய் சொல்லப் பழகியது மட்டுமன்றி தன் பொய்ச்சான்றுகளுக்கு அடிப்படையானவைகளுக்காகப் பலதவறுகளையும் கூட அவன் செய்ய நேரிடுகிறது.

தாய் தந்தையரின் அன்பை மறந்து விடுகிறான் அவன். காரணமற்ற தொடர்பற்ற சிலருக்குக் கண்ணை

மூடிக்கொண்டு மண்டியிடுகிறான். அன்பை எங்கிருந்து பருகினானோ அங்கேயே அவன் ஏமாற்றம் முளைக்கும் போது பிறரிடம் அவனுக்கு எப்படி அன்பு பிறக்க முடியும். அவரையும் ஏமாற்றுக்குரியவர் களாகவே எண்ணமிடுகிறான் அவ்வேமாற்றத்தின் தலைவனாகிறான். ஒருவர் இருவராகப் பெருங்கூட்டமாகிறது எத்தர் ஏமாற்றுக் காரர்களின் கூட்டுறவில். என்று ஒழியும் இந்த இழிவுற்ற நேமம்.

இவைகள் மறைந்தொழிந்தால் தான் நாட்டிலே இளைஞர்கள் நல்லறிவாளராகத் திகழமுடியும். பெற்றோர்களெல்லாம் கடந்த நாட்களில் எவ்வாறிருந்திருப்பினும் திரு. வி. க. அவர்கள் காட்டியுள்ள நெறி முறைகளை அறிந்த பின்னராயினும் அதனை நாட்டிலே நிலை நாட்டுவது தமது கடமை என உணர்ந்து தம்மால் இனியும் பல்வேறு ஆக்கப் பணிகளைச் செய்யமுடியாது— செயறபாலன தாம் வருங்கால வழித் தோன்றல்களை வகைப்படுத்தித் தருவதுதான் என்ற அடிப்படையில் செயலாற்றுவார்களாக.

## வருங்காலத் தலைவர்கள்.

இளைஞர்கள் தான் வருங்காலத் தலைவர்கள். தலைவர்களென்றால் கட்சித் தலைவர்களாக இருப்பதுதான் என்பதல்ல பொருள். செயற்றுரைகளில் தலைசிறந்து விளங்குவதென்பதே அதன் பொருளாகும். மொழி வாணிபம் நாடு வாழ்க்கை ஆகியவற்றின் பகுப்புகளிலே தலைசிறந்து விளங்க வேண்டும். நாடு நம்முடையது. எனவே

நாட்டுப்பற்று ஒவ்வொருவருக்கும் இருத்தல் வேண்டும். அப்போதுதான் உரிமை உணர்ச்சி ஏற்படும். "உரிமை வேட்கையை மக்களிடம் எழுப்ப வேண்டுவதற்கு அடிப்படை தாய்மொழி" என்பது திரு. வி. க. அவர்களின் பொன்மொழி. பொன்மொழி என்பது பொன்னுற் செய்ததோ அல்லது எங்மோ பொன்னுல் செதுக்கப்பட்டதோ அன்று. பொன்னைப் பொன்னுருவத்திலேயே கண்டு மகிழும் நாம் அதற்கு முன்னைய நிலைகளை அதாவது பொன்னென்ற அழைப்பைப் பெறுமுன்னம் அது இருந்த இடத்தை, அழைக்கப்பட்ட விதத்தை உணர வேண்டும். உணர்ந்தால் பொன்மொழிகளின் பெருமையையும் தன்மையையும் நுண்மையையும் உணர முடியும். கல்லுருவிலே இருந்து உடைத்தெடுக்கப் பட்டு பல திராவகம் முதலியவற்ருல் பிரிக்கப் பட்டு நம் முன்னே பொன்னென்று மின்னித் தோன்றும் அதன் வரலாற்றைப் போலவே பொன்மொழிகளும் சிக்கல் நிறைந்த சிந்தனைகளிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டு அய்யப்பாடு அச்சம் முதலியவைகள் நீக்கப்பட்டு நம் கண்முன் வடிகட்டி ஒரு சில வார்த்தைகளின் மூலம் காட்சியளிக்கிறது. இதனை நாம் உணரவில்லை என்பதை, பகட்டும் சரிகைப் பொன்மொழிகள் துலங்கிக் கொண்டிருப்பதையும் நாம் பொன்மொழி என்றே கூறிக் கொண்டிருப்பதை எடுத்துக் காட்டியே உறுதி செய்து கொள்ளலாம். இனியும் அவ்வாறிருத்தல் அழகன்று. மொழியை அடிப்படையாக அதிலும் தாய்மொழியை வலியுறுத்தற்குக் காரணம் தன் நாட்டவரின் பற்று மிக வேண்டும்

என்பதே. மொழி வளர்ச்சி என்ற அந்தச்சிறு சொல்லி னுள்ளேயே நாட்டிலே கல்வியின்மை கூடாதென்பதும்: அறிவின் வளர்ச்சிக்குக் கல்வியே பயன் தரும் என்பதும் அடங்கியுள்ளது. எனவே கற்பதும், கற்றபின் அதன் படி நிற்பதும், நிலை நிறுத்துவதும் இளைஞர் கடமை களுள் முதன்மையாகும். அடுத்து நாட்டின் செழிப் புக்கு இன்றியமையாதது கிராமங்கள். கிராமவாசிகளில் பெரும்பாலானவர்களின் நிலையை இன்று நாம் ஓரளவு அறிய முடிகிறது. அவற்றையெல்லாம் சீர் செய்ய முற் பட வேண்டும். சீர் செய்யும் முறைகளைக் கற்றுக்கொள் ளவேண்டும். 'கற்றிலனாயினும் கேட்க' என்ற முறை யில் நீங்கள் கற்றவை களைச் சொல்லி விளக்கி அவர்களை யும் வளப்படுத்த வேண்டும். பாலைப் பருகிப் பசுவைப் புறக்கணிக்கும் பண்பற்ற நிலை உங்களிடையேயும் பரவிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதனை "ஆக்கவேலை பட்டணங்களில் நடைபெறல் அரிது. அவைகட்குத் தக்க இடம் கிராமமேயாகும்" என்று முடிந்த முடிபாக அறிவித்துள்ளார் நம் திரு. வி. க. எனவே கிராமங்கள் செழிக்கக் கிராமத்தார்கள் செழிக்க வேண்டும். அவர்கள் செழிப்பிற்கு அறிவு வளர்ச்சி உறு துணையாகும். இதனை வலியுறுத்திப் போந்தவர் திரு.வி.க. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என ஆரம் பப் பள்ளிகளில் பயின்றோம். அவை நம் சிறுபோதைய உயர்வுக்கு—நமது வளர்ச்சியில் கண் இமையாது காக் கும் தெய்வங்கள் அன்னையுந் தந்தையுமே என்பதை உணர்த்துமுகத்தான் ஆன்றவிந்தடங்கிய பெரியோர்கள் வகுத்தவை. (God is Love) என்று கடவுளிருக்குமிடத்

ளைக் கூட ஆங்கிலத்தால் அறிக்கைப் பலகையில் தீட்டும் நிலைக்கு வளர்ந்துவிட்ட; திருட்டு நடவடிக்கைகளுக்குக் கூடத் தெய்வீகக் காதல் என்று அச்சொல்லைப் பயன்படுத்தும் அளவுக்குப் பண்பட்டுவிட்ட இளமைத் தோழர்களுக்குத் தெய்வங்களையும் அதன் இருப்பிடங்களையும் விளக்குகின்றார்—“நம்மைச் சுற்றிலும் உள்ள தெய்வங்களாகிய மக்களை உயிர்களை வழி படுவோமாக. நாம் வழி படவேண்டிய முதற் கடவுளர் நமது சொந்த நாட்டினரே” என்று. இத்தகைய நாட்டுப்பற்று உங்களிடையே உருவாக வேண்டும். நாட்டினர் நம் உடன் பிறந்தவரை ஒப்பானவர்கள் “உடன்பிறந்தவரை நேசியாதவன் உலகை நேசித்தல் அரிது” இதுவும் அவர் கருத்தேயாகும். இவ்வாறு மக்களே தெய்வமெனக் கூறிய அவரை நாத்திகரென்று கூறமுற்படுவோரிருக்கலாம். அத்தகைய ஆத்திகர்களும் அவரின் ஆத்திக நாத்திகப்பகுப்பிலே எத்தன்மையானவர்களென்று தன்னைத் தான் உற்றுநோக்கின் உண்மையை உணர்தல் கூடும். “இயற்கையோடு இயைந்தவாழ்வு நடாத்துவோர் ஆத்திகர். அவ்வாழ்வு நடாத்தாது வேறு வழியிற் செல்வோர் நாத்திகர். இதனை ஒன்றைக் கொண்டே எத்தனையோ விதமாகப் பகுத்துக்கொள்ளலாம். இயற்கை மனிதனையும் மிருகத்தையும் படைத்தது. ஆணையும் பெண்ணையும் படைத்தது. இன்னோரன்ன பல இயற்கைகளைக் கொண்டு மனிதனின் கருத்துத்கொவ்வாப் புனைவுகளும் கல்நெஞ்சச் செயல்களும் களையப்பட வேண்டியவை என்பது முடிபாக முடியும். “இயற்கைக்கும் இறைக்

கும் உள்ள தொடர்பு பிரிவற்றது" என்பதைக் கொண்டே ஆத்திக நாத்திக வாதத்தை முற்றுப் பெற வைக்கலாம். "சமயவாதம் பொல்லாதது. இழிவானது" என்பது அதனை வலியுறுத்தி நிற்கும். இவ்வண்ணம் பல்லாற்ருனும் கல்வியில் சிறப்புற்று கற்றதை நாட்டுக்காக்கி நாட்டினர் உயர்வு கண்டு பருவத்தே பண்பு கெடாத இல்வாழ்வு நடத்தி அதன் வழி பெண்மை போற்றி மக்கட் பேறுற்று பண்புடன் வாழ வேண்டியவர்கள் வாழ்வுக்கு வழி வகுத்து அவ்வழி பிறழாது வழி நடத்த வேண்டிய வருங்காலத் தலைவர்களை ஆக்கித் தர நாட்டங் கொண்ட பெற்ருேர்களுக்கு திரு. வி. க. அவர்கள் வரலாறு உறு துணையாகும். வருங்காலத் தலைவர்களாகத் தம்மைத் தகுதிப்படுத்திச் செயலாற்ற வரும் வாழ்க்கைக் கப்பலின் மாலுமிகளுக்கு வெற்றிக் கரையின் மிசை நின்று கலங்கரை விளக்கமாயிலங்குகிருர் திரு. வி. க. பல் பிரிவுக் கதிர்களாகத் திகழ்கின்றது அவர் செயல் முறையும் வாழ்க்கை வகையும். அறிவுக் கண் கெடாத அனைவரும் அதன் ஒளியின் துணைகொண்டு கரை சேர்தல் எளிதாகும். "நிதி இருக்குமிடத்தில் பெரிதும் நீதி இருப்பதில்லை" என்று கொண்ட திரு. வி. க அவர்களின் விருப்பின்படி நிதியால் நீதி குலையும் நிலைபோக்கி நிதி இன்றி உலகாளும் நெறி காண இளைஞர்கள் முற்படுவார்களாக. அதற்கு நாட்டினர் உறுதுணை நிற்பார்களாக.

## கலங்கரை விளக்கம் திரு. வி. க

தென்னாட்டின் தலை நகர் என்று கூறப்பட்டு வரும் சென்னை நகரிலே நின்று ஒளிர்கின்ற இவ்விளக்கம், கடந்த எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் விருத்தாசலனார் சின்னம்மையார் என்றஇருவர் கூட்டுறவின் பயனாய் துள்ளம் என்னும் சிற்றூரிலே ஒரு சிறு பனை ஓலைக்குடிலிலே உருவாகியது. ஆம் திரு. வி. க. 26-8-1883-ம் ஆண்டு பிறந்தார். பிறந்த அவர் குழந்தைப் பருவத்தைக் கடந்து ஏழாவது ஆண்டையடைந்த பின்னர் இராயப் பேட்டை ஆரியன் பிரைமரிப் பள்ளிலே சேர்ந்து பயின்று பள்ளிப் படுப்பை வகையுற உணர்ந்து கொண்டார். 1901-ம் ஆண்டிலே கதிரை வேற்பிள்ளை அவர்களைக் கண்டார். அவரிடம் ஐந்தாடுகள் பயின்று அதன் பின் தனியாகப் பள்ளிப் பாடம் நீங்க தமிழ் கற்று உயர்வுற்றார். அதன் நடுவேதான் முற் கூறப்பட்ட வழக்கில் சான்று கூறல் முதலியன நடைபெற்றது. அதனை அண்மியே தந்தையை இழந்த கலியாண சுந்தரனார் புக்கீப்பிங் பயிற்சி பெற்றுத் தேர்ச்சியுற்றார். அதன் பின்னர் தனது தமிழாசிரியரை இழந்த கலியாண சுந்தரர் ஸ்பென்ஸர் கம்பெனியில் வேலைக் கமர்ந்தார். அங்கேயிருந்து நீங்கிய பின்னர் முதல் நூலாகத் தனது ஆசிரியரின் வரலாற்றை வரைந்தார். மீட்டு மயிலை மகா வித்துவான் தணிகாசல முதலியாரவர்களிடம் சித்தாந்த சாத்திரம் பயின்று சிவனடியார் திருக்கூட்டமும் அரசியல் தலைவர்களின் தொடர்பும் புகழும் பெற்று-ஆசிரியப் பணி தொடங்கினார் ஆயிரம் விளக்குப் பள்ளியிலே.

அதன்பின் 1912-ம் ஆண்டிலே கமலாம்பிகையாரை மணம் புரிந்து இல்லறம் நடத்தி வந்தார். அவ்வப்போது பல அன்பர்கள் பெரியோர்களின் கூட்டுறவும் பட்டினத்தார் பாடல் போன்ற நூல்களுக்கும் உரை எழுதல் புராணச் சொற்பொழிவு சபைகளின் தோற்றம் ஆகிய இவைகளும் நிகழ்ந்தே வந்தன அதன் பின்னர் எந்தக் கல்லூரியிலே, தான் பயின்றாரோ அங்கேயே தலைமைத், தமிழாசிரியராய் அமர்ந்து ஒன்றரை யாண்டு (-6-1916 5-12–1917) பணியாற்றினர். கல்லூரியை நீத்த இரண்டாம் நாள் "தேச பக்தன்" பத்திரிகாசிரியரானார். இது வரை தன் தனி வாழ்க்கையில் சற்றே பொதுப் பணியை ஈடுபடுத்திக் கொண்ட திரு. வி. க. இதன் பின்னர்தான் தன்னை முற்றிலும் பொதுப் பணியாளராக்கி .'என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற சொல்லின் இலக்கணமாகத் திகழ்ந்தார். அதன் பயன் 26-4–1918 லே சென்னைத் தொழிலாளர் சங்கம் தோன்றியது. அதன் பின்னர் தனது அருமை இல்லறத் துணைவியார் இயற்கை எய்தினர் தனிமை பெற்றுவிட்ட திரு. வி. க. அவர்களை அப்போது அந் நிகழ்ச்சி பெரிதும் வருத்தி இருக்குமெனினும் தாக்கவில்லை என்பதை அத்துடன் தொடங்கிய அவரது தனிமை வாழ்வே சான்றாய் நின்று உறுதிப் படுத்தும். இதனைத் தொடர்ந்து தொழிலாளர் போராட்டங்களும் மில் கதவடைப்புகளும் பல கட்சியினர் தொடர்பும் பல வேலை நிறுத்தங்களும் செயற்பட்டு வந்தன. எந்த ஆட்சி விரும்பி அரும்பணியாற்றினரோ எந்த ஆட்சி நலந்தரு

மென்று நம்பினரோ அதே ஆட்சியில் இல்லச் சிறை வாசமும் கைக் கொண்டார். இதுவரை நாட்டினரின் கண் திறக்கப் பாடுபட்ட அவர் தன் இரு கண்களின் ஒளியையும் இழந்து விட்டார். அவ்வொளியைத் தன்னுள் அடக்கிக் கொண்டாரென்றே சொல்ல வேண் டும். யாவும் கடந்து 17-9-1953 அன்று இயற்கை எய்தி விட்டார். ஆம் இயற்கை யெய்திவிட்டார். நிலம் நீர் காற்று ஆகியவற்றிலே நிறைந்துவிட்டார். ஒலி, ஒளி, உணர்வு இவற்றிலே ஒன்றிவிட்டார். இவ்வண் ணம் வாழ்ந்த அவர், தன் வாழ்வை வளப்படுத்த எண்ணியிருந்தால் மாநிலம் மயங்கி யிராது அவர் மறைவு கேட்டு. நாட்டிற்காக வாழ்ந்த அவர் விருப்பம் நிறைவேறச் செய்தல் உங்கள் கடன். என் கடன் பணி செய்வதென்ற பண்பாடிப் பண்பாடடையுங்கள். பெற் றோரும் இளைஞர்களும், பெண்டிரும் நன்குணர்ந்து திரு. வி. க. அவர்கள் காண விரும்பிய சமத்துவ நாடு— மாறுபாடற்ற மக்கள் வளர்ச்சி ஆகியவற்றைச் செய லாற்றல் கண்டே அவர் ஆன்மாவும் அமைதியுறும்! அதோ உங்களுக்காக உங்கள் வருகைக்காக உங்கள் முன்னேற்றத்திற்குத் தக நெருங்கி நெருங்கித் தோற்ற மளிக்கிறது அக்கலங்கரை விளக்கம். நீங்கள் மிக மிகத் தொலைவிலிருந்தாலும் தானிருக்கு மிடத்தை அறிவிக் கின்றது கதிர்களின் (நூல்களின்) வாயிலாக. காணுங் கள். கண்டு கலக்கம் நீங்குங்கள், கரை சேருங்கள். களிப் புக் கொள்ளுங்கள். அப்போதுதான் உங்கள் கடமை யைச் செய்து முடித்தவர்கள் என்ற பெருமையைப்

பெறுவீர்கள். நாட்டினர் போற்றுவர். நல் வாழ்த்துக் கூறுவர். அவ்விதம் நீங்கள் அமைத்து விட்ட நாட்டிலே ஏழை பணக்காரன் இருக்க மாட்டான். எத்தரும் ஏமாளிகளும் இருக்கமாட்டார்கள். கல்லாதாரைக் காண முடியாது. உழைப்பவரும் உண்பவரும் ஒரு வகையாகவே இருப்பார்கள். இல்லை யென்ற சொல் இல்லா தொழியும். எல்லாம் இருக்கின்ற நாடு இந் நாடு என் நாடு தென் நாடு என்று தலை நிமிர்ந்து கூறிப் பூரிப்பீர்கள். இவற்றை மறவாதீர்கள். நன்றாக நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள். திசை மாறிப் போயினும் கரை சேர விரும்பினால் மனித வாழ்க்கையும் காந்திகளும் பெண்ணின் பெருமை, இந்தியாவும் விடுதலையும், தமிழ்த் தென்றல், பரம் பொருள், நாயன்மார் வரலாறு இருமையும் ஒருமையும், முருகன் அல்லது அழகு, சீர்திருத்தம் அல்லது இளமைவிருந்து. இராமலிங்கர் திருவுள்ளம், முடியா ? காதலா ? சீர்திருத்தமா, என் கடன் பணி செய்து கிடப்பதே, சைவத்தின் சமரசம், சைவத் திறவு, சன்மார்க்க போதமும் திறவும், தமிழ் நாடும் நம்மாழ்வாரும், இமயமலை அல்லது தியானம், கடவுள் காட்சியும் தாயுமானவரும், சித்த மார்க்கம், தமிழ் நூல்களில் பௌத்தம் இவைகளின் மூலம் மொழி, நாடு, மாந்தர் உயர்வு, மத உண்மை, சமத்துவம் ஆகியவற்றிற்கு விளக்கமும் வகையும் தந்து வழி காட்டிக் கதிர் பரப்பி நிற்கும்—

**கலங்கரை விளக்கம்—திரு. வி. க.**

ராயன் அச்சகம், சென்னை—1.

CONNEMARA PUBLIC LIBRARY
4 FEB 1955